பக்கங்கள்: 16

Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஸூ சித்திரை மீ 15 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 02 (28—04—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 12

# தென்பகுதித் தீவிரவாதிகள்

# 5,000 பேருக்கு ஆயுட்சிறை!

## அதற்கான சட்டம் நிறைவேறும் வரை அவசரகால நிலை நீக்கப்படமாட்டாது!

கொழும்பு, ஏப்ரல் 28

தென்னிலங்கையில் கடும் போக்குடைய தீவிரவாதிகள் என்று கருதப்படும் சுமார் ஐயாயிரம் பேர் நிரந்தரமாக சிறையில் வைக்கப் படுவார்கள். அவர்களுக்கு ஆயுட்சிறை விதிப்பதற்கு வகை செய்யும் விதத்தில் சட்டம் ஒன்று கொண்டுவரப்படும்.

இத்தகைய சட்டம் நிறைவேற்றப்படும் வரை அவசரகாலச்சட்டம் நீக்கப்படமாட்டாது.

இத்தகவலை பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

அவசர காலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசும்போது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது;

மிகவும் மோசமான தீவிரவாதிகள் என்று கருதப்படும் 5 ஆயிரம் பேருக்கு அதிகமானோரை நிரந்தரமாகவே சிறையில் வைத்திருக்க வகை செய்யும் சட்டம் ஒன்றை கொண்டுவந்து நிறைவேற்றும் வரை அவசரகாலச் சட்டம் நீக்கப்படமாட்டாது.

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த கடும் போக்குத் தீவிரவாதிகளை விடுதலை செய்தால் அது சமூகத்துக்குக் கேடு விளைவிக்கும்.

இவர்களை நிரந்தரமாகவே சிறையில் வைக்கும்சட்டத்தை நிறைவேற்ற சுதந்திரக்கட்சி ஆதரவு தரவேண்டும். இவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று சுதந்திரக் கட்சி கோரக் கூடாது.

இவர்கள் விடுதலையானால்

[7 ஆம் பக்கம் பார்க்க]

### தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள்

## அதிக கட்டணம் அறவிட்டால் கடும் தண்டனை கிடைக்கும்!

கொழும்பு, ஏப். 28

முறைகேடாக நடக்கும் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள், ஏஜென்ஸி தபால்கந்தோர் ஆகியவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட விதிகளை மீறி அளவுக்கதிகமான கட்டணங்களை அறவிடும் இத்தகைய நிறுவனங்களுக்கு கடும் தண்டனையும் விதிக்கப்படும்.

அஞ்சல், தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் திரு. அசோகா டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

நள்ளிரவு பன்னிரண்டு மணி முதல் அதிகாலை 6 மணி வரை வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்குச் சாதாரண கட்டணத்தின் அரைவாசியே அறவிடப்படவேண்டும். ஆனால் சில தனியார் தொலைத் தொடர்பு நிறுவ

[7 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ டிரக் புரண்டு சிப்பாய்கள், கைதிகள் காயம்

### 20 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, ஏப் 28

அனுராதபுரத்திற்கு அருகில் இராணுவத்தின் டிரக் ஒன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகி தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த 20 பேர் படுகாயமுற்றனர்.

தடுப்புக்காவல் கைதிகளை ஏற்றி வந்த டிரக் ஒன்றே இவ்வாறு தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

தடுப்புக்காவல் கைதிகளையும், இராணுவச் சிப்பாய்களையும் சேர்த்து அதில பயணம் செய்த 20 பேர் படுகாயமுற்றனர் என்றும்-

அவர்கள் தற்போது அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-உ]

## இன்று 89 பேர் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 89 பேரை இன்று விடுதலைப் புலிகள் விடுவிப்பர்.

புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்தில் இன்று மாலை 4-30 மணியளவில் இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவுப்பகுதி அரசியற் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஒ)

## கனேடிய தூதரக அதிகாரி யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

கனேடியத் தூதரகத்தின் முதல் செயலாளர் திரு. ஆர். வி. சொக்ஸ்மன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் நேற்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார். (ஒ-3)

### யாழ் பொலீஸ் நிலையத்திலிருந்து

## சிங்களப் பொலீஸார் திங்களுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஏப் 28

யாழ் - பொலீஸ் நிலையத்தில் உள்ள சகல சிங்களப் பொலீஸாரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தென் இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வடபகுதியிலிந்து சிங்களப் பொலீஸார் தெற்கே இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை ஒரு தொகுதிப் பொலீஸார் தெற்குக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

யாழ் - பொலீஸ் நிலையத்தில் இருந்து கடைசித் தொகுதியான 54 பொலீஸார் எதிர்வரும் 30 ஆம் திகதி தென் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்கள். அதன் பின்னர் யாழ் பொலீஸ் நிலையத்தில் சிங்களப் பொலிஸார் எவரும் கடமையில் இருக்கமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வட பகுதியில் ஏனைய பொலீஸ் நிலையங்களில் உள்ள சிங்களப் பொலீசாரும் விரைவில் தென் பகுதிக்கு அனுப்பப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## தென் பகுதி தமிழ் பொலீஸார் வடக்கே வரத் தயக்கம்

வடக்கில் இருந்து சிங்களப் பொலீஸார் தெற்கே இடமாற்றம் பெற்றுச்செல்கிறார்கள். ஆனால் தெற்கிலிருந்து வடக்கே தமிழ் பொலீசார் வருவதற்கு பின் நிற்கிறார்களாம்.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தென் பகுதியில் கடமையாற்றும் பெரும்பான்மையான தமிழ் பொலீஸ் அதிகாரிகள், தம் சொந்தக்காரணங்களுக்காக இங்கு வரப் பின் நிற்கிறார்கள் என்றும் அவர் கூறினார். (இ — 3)

★ யாழ். மாவட்டத்தில்

# அரச காணிகள் பெற்றவுடன் வீடு கட்டவும் கடன் வழங்கப்படும்

## இலங்கை வங்கி கிளைகளுக்கு அவசரப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

காணியற்றவர்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதும் அவர்களுக்கு வீடுகட்டவும், தொழில் ஆரம்பிக்கவும் குறைந்தவித வட்டியில் கடன் வழங்க இலங்கைவங்கி முன் வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் காணியற்றவர்களுக்கு 500 ஏக்கர் அரசகாணிகளைப் பகிர்ந்து வழங்கத் தற்சமயம் காணிக்கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன.

காணிக்கச்சேரி முடிவடைந்து காணிகள் பகிர்ந்தளித்து வழங்கப்பட்டபின் அவர்கள் தற்காலிக வீடு அமைக்கவும், தொழில் ஆரம்பிக்கவும் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். கிளை அதிகாரிகளுக்கு இலங்கை வங்கியின் தலைமையகம் தொலைபேசிமூலம் நேற்று அவசர உத்தரவு பிறப்பித்தது.

காணிகளை விரைவாகப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் அக்காணிகளில் மக்கள் குடியேற இலங்கை வங்கி கடன்வழங்கி உதவவேண்டும் என்றும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

### சுபநேரம்

28 -04- 1990

சனிக்கிழமை சித்திரை 15 சுபநேரம்;

02-58முதல் 04-28 வரை

இராகுகாலம்

08-58 முதல் 10-28வரை

சதுர்த்தி விரதம்

## சைவசமய தலைமைப் பீடமாக விரைவில் நல்லை ஆதீனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

ஏனைய சமயங்களுக்கு பீடங்கள் அமைந்துள்ளது போல், சைவ சமயத்தவர்களின் தலைமைப் பீடமாக நல்லை ஆதீனம் அமையவிருக்கிறது.


இத்தகவலை இந்து கலாசார அமைச்சின் செயலாளர் திரு. கே. வி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் - அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சகிதம் திரு. லோகேஸ்வரன் நேற்றுக் காலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்குச் சென்று ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்தார்.

திரு. லோகேஸ்வரன் நல்லை ஆதீனத்தில் வரவேற்கப்பட்டார்.

பௌத்த சமயத்துக்கு அஸ்கிரிய, மல்வத்தை பீடங்கள் இருப்பதுபோல் சைவர்

( 7ஆம் பக்கம் பார்க்க )



சட்ட விரோதமாக மின்சாரம் ("கொழுவி") எடுப்போர் எண்ணிக்கை குடாநாட்டில் இன்னும் குறையவில்லை. - செய்தி

# அரசு - ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சில் வரதராஜப்பெருமாள் பங்குபற்றுவார்

கொழும்பு, ஏப். 28

கொழும்பில் அரசாங்கத்துக்கும் ஈ. பி. ஆர். எல். எவ்விற்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களின்போது பேச்சுவார்த்தையின் ஒரு கட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாளும் பேச்சுக்களில் பங்குபற்றுவார்.

நேற்று கொழும்பில்வைத்து ஈ. பி. ஆர். எல். எவ்வின் முக்கிய பிரமுகர் ஒருவர் இத் தகவலை 'சஞ்சீவி' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மே 15ஆம் திகதி நடைபெறும் முதற்சுற்றுப் பேச்சுக்களில் திரு. வரதராஜப்பெருமாள் பங்குபற்றமாட்டார்.

ஆனால் ஆரம்பக் கட்டப் பேச்சுக்களில் திருப்திநிலை காணப்பட்டால் தொடர்ந்து நடக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக திரு. வரதராஜப் பெருமாள் கொழும்புவருவார்.

நாம் தெரிவித்த 19 அம்ச யோசனைகள் பேச்சுக்களுக்கு ஓர் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் திரு. வரதராஜப்பெருமாள் பேச்சுக்களில் பங்குபற்றுவது சாத்தியமாகின்றது.

பேச்சுக்கள் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெறுமானால் ஒருகட்டத்தில் பேச்சுக்களில் ஈ. பி. ஆர்.எல்.எவ். வின் செயலாளர் நாயகம் திரு.கே. பத்மநாபாவும்பங்குபற்றுவார் என எதிர்பார்க்கலாம் - இப்படி அந்தப் பிரமுகர் சஞ்சீவிக்கு மேலும் சொன்னார். (அ-உ)

## வாகன விபத்தில் இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 28

நுணாவில் பகுதியில் நேற்று ஏற்பட்ட விபத்து ஒன்றில் இளம் பெண் ( 18 வயது ) ஒருவர் பலியானார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் நேற்றுப் பிற்

[ 7 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரத் தமிழ் ஈழம் விரைவில் உருவாகும்!

### வை.கோபாலசாமி பேச்சு

திருச்சி ஏப் 29

''சுதந்திரத் தமிழ் ஈழம் உருவாகும் காலம் வெகு தொலைவில் இல்லை'' என்று மாநிலங்களவை தி. மு. க. உறுப்பினர் வை. கோபாலசாமி சனிக்கிழமையன்றுதிருச்சியில் கருத்து தெரிவித்தார்.

திருச்சியில் பாரத மிகுமின் நிறுவனத்தின் மேற்பார்வைப் பணியாளர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்விதம் கூறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் பூகம்பம்; 150 பேர் பலி

பீகிங், ஏப்ரல் 28

சீனாவின் மேற்குப் பகுதியில் நேற்று ஏற்பட்ட கடுமையான பூகம்பத்தில் குறைந்தது 150 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

உ

திருமண அழைப்பிதழ்

Mrs. S. Sivanathan, 2, B.A. Thamby Lane, Vannarponnai.

Mr & Mrs. S. Varnakulasingam, Saravanai West, Velanai.

மணமகன் சிவகரன்

மணமகள் வாசுகி

நாள்.- 29 - 04 - 1990 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- காலை 10.00 மணி தொடக்கம் பகல் 11.00 மணி வரை (லண்டன் நேரப்படி)

இடம்:- Murugan Temple, 200a Archway Road, London N. 6

★ வரவேற்பாளர்கள் ★

Mr & Mrs. Sivathman, 20, Elmcroft Avenue, Golders Green, London N. W. 11. U.K

Mr & Mrs. Bremjit, 19, Constable Close, Colchester, Essex, CO4 5EZ: U.K

[3371]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பயனும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய இரண்டு மாத போமரேனியன் நாய்க்குட்டிகள் pomararian Pups wormed & weaned) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 122, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (12386)

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் நன்னீர் சுற்றாடலில் 6 பரப்பு காணி முழுதாக விற்பனைக்குண்டு தொடர்பு; கண்ணன் துர்க்கை அம்மன் கோவிலடி, No - 45 தாளையம்பதிவீதி நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (12376)

## சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

## காணி விற்பனைக்கு

13 பரப்புக் காணி பலா, மா, தென்னை, பனை, கிணறு, மலசல கூட வசதிகளுடன் கண்டி வீதியில் மீசாலை A. P. C. க்கு முன்பாக உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். T. தாமோதரம்பிள்ளை ஜெயவாசா, உசம்பிராய் கிழக்கு. (3412)

## சஞ்சிகைகள்

கலைக்கதிர், கலைமகள், ஞானபூமி, ரத்தின பாலா, குமுதம், கல்கி, ஆனந்த விகடன், துக்ளக், பேசும்படம், பொம்மை, கல்கண்டு, இந்தியாடுடே, [தமிழ் ஆங்கிலம்] Time News week Sport Star Front Line மற்றும் சஞ்சிகைகள் அனைத்தும் சந்தா ஏற்றுக்கொள்கிறோம். வரும் மே மாதம் முதல் சஞ்சிகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4340]

## Saairaam

பாவித்த T.Vக்கள், கடைத் தளபாடங்கள் perkins (p-6) டீசல் இஞ்சின் A 40 Van விற்பனைக்கு உண்டு. மற்றும் உங்கள் பழைய பொருட்களை வாங்கவும் விற்கவும் Saairaam 3ம் கட்டை, பருத்தித்துறைவீதி. கல்வியன்காடு (12389)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 29-4-90 ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3298)

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(பிலிமத்)கறுப்புவரிச்சேவல் குஞ்சுகள்(Lohmann) பிறவுண் சேவல் குஞ்சுகள் 1. 5. 90 செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க இல 9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3407)

## தேவை

கிறைண்டிங் மில் தூள் அரைக்கும் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இங்கு தங்கி வேலைசெய்யக் கூடியவர்கள்வி நம்பத்தக்கது தகுதிக்கேற்பு ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும். ஆறுமுகம் அன் சன்ஸ், கண்டி வீதி, ஓமந்தை. (C/ 4336)

கௌரவமான குடும்பமொன்றுக்கு யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றாடலில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாங்குவதற்கு தேவை. தொடர்பு விளம்பர இலக்கம் 124, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (12387)

சுண்டுக்குளி சைவமகாசபை பாலர் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியை ஒருவர் தேவை. க சத்தியானந்தசிவம், தலைவர், 40, ஈச்சமோட்டை வீதி விலாசத்தில் 28-4-90, 29-4-90 திகதியில் காலை 10 மணி — பி. ப. 5 மணி வரை நேரில் சந்திக்கவும். (12389)

## தேவை

எமக்கு J.K. மொடல் 3சிலிண்டர் அல்லது4 சிலிண்டர் லீற்றர் என்ஜின் ஒன்று தேவைப்படுகிறது. யாராவது இந்த மொடல் என்ஜின் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். B. குட்டி கணபதி, லைற் வேக்ஸ், நெடியகாடு, வல்வெட்டித்துறை. (3300)

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை A/L விஞ்ஞானம் படித்தவர்கள் விரும்பத்தக்கது தகுதியுடையோர்காலை 8 00 மணி முதல் பி. ப 4.00 வரைக்குள் நற்சான்றிதழ்கள் உடன் 01. 05. 90ற்கு முன் நேரில் வரவும் திறமைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும் Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி' யாழ்ப்பாணம் (C/4331)

## மணப்பெண்கள் தேவை

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சைவவேளாள குடும்பத்தை உடைய 33 வயதுடைய I. C.M. A. எக்கவுண்டனாக கொழும்பில் வேலை செய்பவருக்கும், 38 வயதுடைய M. S. E கொம்பியூட்டர் என்ஜினியராக அவுஸ்ரேலியாவில் கடமையாற்றுபவருக்கும் B. S. E. I.C.M. A பெண்கள் விரும்பத்தக்கது. சாயிமங்களதிருமணசேவை,, 32, இந்துக்கல்லூரி லேன் யாழ்ப்பாணம். (12382)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உயர்குல சைவ வேளாள 31 வயது ஜீ. சி. ஈ. (உயர்தரம்) சித்தியெய்தி பிரான்சில் குடியுரிமையுடன் கம்பனி முகாமையாளனாகப் பதவி வகிப்பவருக்கு உயர் குடியில் பிறந்த அழகு, கல்வி, சீதனமுள்ள பெண் விவாசம் முடித்துப் பிரான்சிற்குப் போகச் சம்மதமுள்ளவர்களிடமிருந்து உடன் விண்ணப்பம் கோரப்படுகிறது. இல. 680, C/o உதயன். (3401)

## வேலை தேவை

கூட்டுத்தாபனமொன்றில் 23 வருடங்களாக நிர்வாக சேவைகள் செய்தவரும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றில் தேர்ச்சியுள்ளவரும் சுயமாகவே ஆங்கிலத்தில் Draft போடவும், கடிதப் போக்குவரத்து செய்யவும், தட்டச்சு வேலைகள் செய்யவும், கடைக் கணக்கு வேலைகளில் பரிச்சயம் உடையவருமான 55 வயதான ஒருவர் கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிறுவனமொன்றில் வேலை செய்ய விரும்புகிறார். தொடர்பு இல. 681, C/o உதயன். (3409)

## மணமகன் தேவை

எட்டில் செவ்வாய்க் குற்றமுள்ள இந்துவேளாள குலப் பட்டதாரிப் பெண்ணுக்கு மணமகன் தேவை. வயது 25 சீதனம் பேசித் தீர்க்கலாம் தொடர்பு இல. 676 C/o உதயன். (3272)

அந்தணர் குல 32 வயது 7 இல் செவ்வாய் உடைய மணமகளுக்கு அதே இன மணமகன் தேவை. கணிசமான சீதனம் வழங்கப்படும். உள்ளூர் விரும்பத்தக்கது. தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். No. 679, C/o உதயன். (3293)

## வெளிவந்து விட்டது!

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly; By Nagaratnam, B. Sc. (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு. எந்தத் துறையில் ஈடுபட்டுள்வருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும் நூல். (சி/4338)

## கல்வி

O/L தொடக்கம் பல்கலைக் கழகம் வரையுள்ளவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். S. ஜெயராஜா கல்யாணி ஆங்கிலகல்வி நிலையம். 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (2873)

## ஆங்கிலக் கல்வி தபாலிலும் நேரிலும்

ஆங்கில வகுப்புகள் பரீட்சைகளில் இலகுவில் சித்தியெய்தவும், பொதுவாக அறிந்திருக்கவும், தபால் மூலமும் நேரிலும் நடைபெறுகின்றன. நேரில் அல்லது சுய விலாசமிட்டு முத்திரையொட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். 16/2, முதலாம் ஒழுங்கை, ரெம்பிள் றோட், (கத்தோலிக்க ஆச்சிரமம் அண்மையில்) யாழ்ப்பாணம். (3287)

# விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, ஏப்ரல் 28

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் மட்டுவில் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்பு, பஞ்சள் இல்லங்கள் முறையே 2 ஆம் 3ஆம் இடங்களைப்பெற்றன. (ப-31)


D. S. I.

★ உங்கள் பாதணிகளைத் தெரிவு செய்யும் போது அதன் உருவ அமைப்பை மட்டுமே கருத்திற் கொள்ளாதீர்கள்.

★ உருவ அமைப்புடன் முக்கிய அம்சமான உழைக்கும் திறனையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

★ உழைக்கும் திறன் மிக்க; நவ நவ டிசைன்களில் இலங்கையின் முதல் ரக பாதணிகளை உற்பத்தி செய்யும் D S I. ''ரன்பா'' பாதணிக் குடும்பத்தினரின் வடபுலத்தின் ஒரேயொரு காட்சியகமான; D. S. I. கொன்சூமர் சேர்விஸ் சென்ரருக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

★ பின்னர் நீங்களே மற்றவர்கட்கு D. S. I. ''ரன்பா'' பாதணிகளின் உழைப்புத் திறனைப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விடுவீர்கள்!

D.S.I. கொன்சூமர் சேர்விஸ் சென்ரர்

281, C. பொன்னம்பலம் வீதி, (மணிக்கூட்டு வீதி) ஞானம்ஸ் ஸ்ருடியோ அருகாமை யாழ்ப்பாணம்.

[சி-1220]


# வேறுபாடுகளை களைந்தெறிவதற்கு விளையாட்டு துணையாகின்றது

## வவுனியா பொறுப்பாளர் தினேஷ்

வவுனியா ஏப் 28

''விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளைக்கண்டு மகிழ்வுறவும் அவற்றில் கலந்து கொள்ளவும் ஒன்றுகூடும் போது மக்கள் தம்மிடையே உள்ள இன, மத, வர்க்க பேதங்கள் மறைந்துவிடுகின்றன. ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படுவதுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் வளர்கிறது.

கோவில்புதுக்குளம் கணேச வித்தியாசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டுப்போட்டி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தினேஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றொக்கட் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எம் மத்தியில் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தவும் எமது இளைஞர் யுவதிகளை முழுமையான மனிதராக்கவும் விளையாட்டுப் போட்டிகள் பெரிதும் உதவுகின்றன.

எனினும் நாடளாவிய மட்டத்திலோ சர்வதேச ரீதியிலோ இவர்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபெறும் வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் வழங்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருந்தார்கள். எமது இளைஞர்கள் சோம்பேறிகளோ அல்லது திறமையற்றவர்களோ அல்லர்.

இப்படி அவர் கூறினார்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் பேசுகையில்,

''நீண்ட காலத்தின் பின் அமைதியான சூழ்நிலை ஏற்படவும், மக்களது வாழ்க்கை சுமுகமடையவும் விடுதலைப் புலிகள் வழிவகுத்துள்ளார்கள். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமூக மேம்பாடு பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளில் நாம் ஈடுபட்டு முன்னேற்றம் அடைய வேண்டும்.'' என கேட்டுக்கொண்டார்.

புலிகளின் பிரதேச பொறுப்பாளர் திரு. ராம், கிராமோதயசபைத் தலைவர் திரு. எஸ். வையாபுரிநாதன், பிரமுகர் திரு. கோ. நடேசபிள்ளை றொக்கட் விளையாட்டுக்கழக தலைவர் திரு. ஆர். சந்திரன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ப 164)

# 15 ஆயிரம் தென்னங்கன்றுகள் மன்னாரில் விநியோகிக்கப்படும்

மன்னார், ஏப் 28

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினால் 90 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது 15 ஆயிரம் தென்னங்கன்றுகளை மன்னார் மாவட்டத்திற்கு விநியோகம் செய்ய மன்னார் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நெடிய இன, கலப்பின குறுகிய கால தென்னங்கன்றுகள் பயிரிட விரும்புவோர் மன்னார் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

அதே வேளை மானிய உதவித்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் தெங்குச் செய்கையில் ஈடுபட விரும்புவோர் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் படியும் தங்கள் காணி உரிமைப் பிரதியைக் காட்டி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். [க]

# பண்புள்ள முன்மாதிரியான துறவி சுவாமி பிரேமாத்மானந்தாஸ்ரீ

ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தர் சிங்கப்பூருக்கு தொழில் தேடி சென்றவர். இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் தவத்திரு யோகர் சுவாமிகளுடைய திருவருள் பெற்றவர். சிங்கப்பூரில் இருந்த சமயம் ஆத்மீக வாழ்வில் நாட்டம் கொண்டு கல்கத்தா பேலூர் மடத்தில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய நேர் சீடரான சுவாமி சிவானந்தரிடம் திட்சை பெற்று 1930ம் ஆண்டு சந்நியாசம் பெற்றார். இவர் மிகுந்த இனிய சுபாவம் உடையவர் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் 10 ஆவது தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி வீரேஸ்வரானந்தருடன் நெருங்கிய நட்புடையவராக இருந்தார்.

கதிர்காம இராம கிருஷ்ண மிஷன் மடத்து திறப்பு விழாவுக்கு 1953 ஆம் ஆண்டில் வந்தவர் பலருடைய வேண்டுகோளின் பேரில் கொழும்பு மடத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் ஸ்ரீராம கிருஷ்ண கலாச்சார நிலைய, சுவாமி விவேகானந்தர் மண்டபம், வாசிகசாலை யாவும் கட்டி முடிக்கப்பட்டன.

இவரிடத்தில் காணப்பட்ட சிறந்த குணங்களுள் என்னை கவர்ந்தமை கடமையுணர்ச்சியும், எந்த ஒரு சிறிய செயலையும் செய்வதில் உள்ள ஆர்வமுமே யான் 1966ம் ஆண்டில் கொழும்பு மடத்தில் சேர்ந்த பொழுது இவருடன் சில மாதங்கள் இருந்து அநுபவித்த நேரம் வீண் போகவில்லை. அதிகாலை 4 மணிக்கு எழுந்து தியானம் செய்த பின்பு கொழும்பு ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்து கோவிலுக்கு காலை 5 மணிக்கு வந்து வழிபடுவார். பின்பும் அறையிலிருந்து தியானம் செய்வார். காலை புதினப்

### சுவாமி சித்ரூபானந்தா

பத்திரிகைகள் அனைத்தும் வாசித்த பின்பு அவர் தமது அன்றாட கடமைகளை சரிவரச் செய்வார். தனக்கு ஒரு சிறு பணியையாகிலும் மற்றவர்கள் செய்வதை விரும்ப மாட்டார். ஆனால் மற்றவர்கள் எவராயினும் அவர்களுக்கு செய்யும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து விடுவார். ஒருமுறை உடல் நலம் இல்லாத பொழுதும் கடமைகளை முடிக்கும் வண்ணம் ஒருவருக்கும் சொல்லாமல் ஏனைய பணிகளைச் செய்து விட்டு பின்பு போய்ப் படுத்துக் கொண்டார்.

1968 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கொழும்பு மடத்துக்கு மாலையில் வர இருந்தார். அன்று பலத்த மழை. எனக்குத் தெரிந்த வரையில் மடத்துக்கு அவ்விழா நடைபெறும் இடத்துக்கும் 50 முறை நடந்து அங்கு போடப்பட்ட கதிரைகளின் ஈரத்தை துடைப்பதில் கவனம் செலுத்தினார்.

அவ்விழா முடிவடைந்ததும் திருமதி இந்திரா காந்தி ஒரு நன்கொடை அளித்தார். உடனே அவர் மடத்துக்கு வந்து அதற்குரிய பற்றுச் சீட்டையும் ஒரு கடிதத்தையும் ''டைப்'' செய்து அவர் விழாவிலிருந்து புறப்பட முன்பு கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன்.

இதே போல் தனது கடமையைச் சரிவரச் செய்து எமக்கு ஒரு முன் மாதிரியான துறவியாகத் திகழ்ந்தார். பெரிய சொற் பெருங் காற்றும் வல்லமை அவரிடம் இல்லை. இருப்பினும் அவரிடம் காணப்பட்ட துறவும் அதன் வலிமையும் துறவிகளான நம் போன்றவர்கள் ஒருக்காலும் மறக்க முடியாது. நமது நாடு ஒரு பெரிய பண்புள்ள துறவியை இழந்து விட்டது.

# சகல அரச ஊழியருக்கும் ரூ. 200 சம்பள உயர்வு வழங்குக

## எழுதுவினைஞர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 200 ரூபா சம்பள உயர்வு சகல அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்க எழுவினைஞர் சங்கம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரை இவ்வாறு கோரியுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 200 ரூபா சம்பள உயர்வு 2 ஆயிரம் ரூபாவுக்குள் சம்பளம் பெறும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுவருகிறது. (ஒ-3)


"PARA TROPHY"

மென்பந்து கிரிக்கெட் போட்டி

அமரர் க. பரராஜசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக நொதேண் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படவுள்ள ஆறு பேர் கொண்ட ஆறு ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் போட்டி.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- நொதேண் விளையாட்டுக் கழகம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

விண்ணப்ப முடிவு திகதி:- 03-05-1990

வ. ஸ்ரீதரன்
பொதுக்காரியதரிசி


## மீனவர் கரை திரும்பவில்லை

தாளையடி ஏப் 28

வடமராட்சி கிழக்குக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற அண்ணனும், தம்பியும் ஒரு வாரமாகியும் கரை திரும்பவில்லை.

கடந்த சில நாட்களாக தேடுதல் முயற்சியில் ஈடுபட்டிருந்த படகுகள் ஏமாற்றத்துடன் கரை திரும்பியுள்ளன.

மருதங்கேணியைச் சேர்ந்த க. ஜெயரஞ்சன் க. வாசன் ஆகியோரே இந்த இருவரும் ஆவர். (இ-144)

## விடைத்தாள் திருத்தும் வேலை

யாழ்ப்பாணம், ஏப். 28

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் முடிவடைய இருக்கின்றன.

விடைத் தாள்கள் அனைத்தும் 1 ஆம் திகதி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும். (இ-9)

## இம்மாத அலவன்ஸ் இல்லை

கிளிநொச்சி, ஏப்ரல் 28

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான இந்த மாத அலவன்ஸ் இன்னும் வழங்கப்படவில்லை,

அலவன்ஸ் வழங்கப்படாததற்குப் பணம் வந்து சேராததே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-76

## 2 வருட சம்பள முற்பணம்

புதுக்குடியிருப்பு ஏப் 28

முல்லைத்தீவு பிரதேச சபையின் 8 ஊழியர்களுக்கு இரண்டு வருட சம்பள முற்பணம் சபையின் நிதியில் இருந்து வழங்கப்பட்டது.

விசேஷ ஆணையாளர் திரு கந்தசாமி இதனை வழங்கினார்.

சுழற்சி முறையில் ஏனைய ஊழியர்களுக்கும் இதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது. (இ126)

## விசேட நிகழ்ச்சி

குருநகர் ஏப் 28

வீரமரணமடைந்த விடுதலைப் புலிப் போராளிகளை நினைவு கூருமுகமாக பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தினர், வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதிகளில் இன்றும், நாளையும் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய விசேட நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர். (க-51)


4-ம் ஆண்டு நினைவஞ்சலி



சிவப்பிரகாசம் சிவலிங்கம்
(இளைப்பாறிய பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசன இலாகா)

தோற்றம்: 19 - 07 - 1926
மறைவு: 28 - 04 - 1986
திதி: 14 - 05 - 1990

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்ததுவே
ஆயினும் உங்கள் மீது கொண்ட அன்பு குறையவில்லை
அன்பில் அலை கடலாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பாரினிலே பாங்காக நீரிருந்தீர்
பாசத் தந்தையையும் அன்புக் கணவரையும்
பிரிந்திந்தப் பாரினிலே பரிதவிக்கின்றோம்.
ஆண்டாண்டு காலங்கள் ஓடிமறைந்தாலும்
உமது நினைவு எம் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

''கனகஸ்தான்''
பொற்பதி வீதி,
கோண்டாவில். [12385]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் தூதரகத்தின் அன்பளிப்பு விளையாட்டுக்கு ஊக்கமளிக்கும்

## உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம் ஏப் 28

''முழு யாழ்ப்பாணத்திலும் தற்போது ஒரு விளையாட்டு அரங்கு தானும் கிடையாது. இந்த நிலையில் பிரிட்டிஷ் தூதரகம் எமது சழகத்துக்கு விளையாட்டு உபசரணங்களை அன்பளிப்பு செய்தமை யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கும் ஒரு செயலாகும்''

யாழ்ப்பாணம் அமெச்சூர் விளையாட்டுக் கழகத்தின் தலைவரான திரு. வி. ரி. சிவலிங்கம் மேற்சண்டவாறு கூறினார்.

பிரிட்டிஷ் தூதரசம் யாழ்ப்பாணம் அமெச்சூர் விளையாட்டுச் சழகத்துக்கு வழங்கிய விளையாட்டு உபசரணங்களை அன்பளிப்புச் செய்யும் வைபவம் 23 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் உரையாற்றிய போது தான் திரு. வி. ரி. சிவலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உபசரணங்களைஅன்பளிப்புச் செய்த இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் மூன்றாவது செயலாளரான செல்வி ஜேன் கோர் பீல்ட் கூறியதாவது.

''யாழ்ப்பாண மக்களுக்கு பிரிட்டிஷ் மக்களின் அன்பளிப்பாக விளையாட்டு உபகரணங்களை யாழ்ப்பாணம் அமெச்சூர் விளையாட்டுக் சழகத்துக்கு வழங்குவதில் நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்'' என்றார்அவர்.

இந்த வைபவத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சிலரை பிரிட்டன் குறிப்பிட்ட கால விளையாட்டுத் துறைப் பயிற்சிக்காக அழைக்க வேண்டும் என்ற ஆலோசனை முன் வைக்கப் பட்டது. இந்த ஆலோசனையைத் தாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக செல்வி ஜேன்கோர் பீல்ட் கூறினார்.

திரு. கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினார். (க)

## ஓய்வு பெற்றார்

நெடுந்தீவு ஏப் 28

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசிங்கம் கடந்த 15ம் திகதியுடன் ஓய்வு பெற்றார். புதிய உதவி அரசாங்க அதிபர் நியமிக்கப்படும் வரை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவரெத்தினம் நெடுந்தீவு பதில் உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றுவார். (111)

## பிரார்த்தனை

யாழ்ப்பாணம் ஏப் 28

இலங்கையில் அமைதி ஏற்படவும் இனங்களிடையே ஒற்றுமை, சுபீட்சம் நிலவ வேண்டி அண்மையில் தமிழ் நாடு வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் பிரார்த்தனை நடைபெற்றது. (ப-3)

## கல் வீச்சு

பச்சிலைப்பள்ளி ஏப் 28

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த இரவு தபால் ரயில் முகமாலை எனும் இடத்தில் சடவை ஒன்றைக் கடக்கும் போது கலவீச்சுக்கு உள்ளானது. (ப-117)

## தம்பசிட்டி பாடசாலையில் ஐவர் சித்தி

வெற்றிலைக்கேணி ஏப் 28

1989 ஆம் ஆண்டில் இடம் பெற்ற5ஆம்ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் புலோலிக் கொத்தணியைச் சேர்ந்ததம்பசிட்டி மெதடிஸ்த மிசன தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து ஐந்து மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்:

க. வாணிமுகுந்தன், வே. பார்த்திபன், து. பிரஜீப். த.அனுராதா, த. உமா ஆகியோரே இந்தஐவரும் ஆவர். (இ-ரி)

## லொறி விபத்து

அட்டன்- டிக்கோயா நகரசபைக்குச் சொந்தமான லொறி ஒன்று மலையுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியது.

நகரசபை ஊழியர்கள் சிலர் மேலிடத்துக்குத் தெரியாமல் இதனை எடுத்துச் சென்ற போதே விபத்து ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. (இ-88)




மாபெரும் விற்பனை

மோட்டார் சைக்கிள்கள்

1000க்கு மேல் கையிருப்பில் உண்டு

25% கழிவு

| ஹொண்டா | ரூபா |
|---|---|
| ★ C50, C70, C90 டவுண்சொக் சென்டர் சொக் சிடிஐ கஸ்டம் | 10,500க்கு மேல் |
| ★ CD50, CD90 பிறவுண் சோல்ட் பென்ட்லி | 12,500 '' '' |
| ★ CD 125 T பிறவுண் கோல்ட் லைன் டென்ட்லி | 22,500 '' '' |
| ★ CD 125 JC 06 எலோய்வீல் | 20,000 '' '' |
| ★ CM 124 ஸ்குயர் றவுண்ட் மீட்டர் கஸ்டம் | 22,500 '' '' |
| ★ XL 125 எஸ் | 22,500 '' '' |
| ★ MD 90 | 19,500 '' '' |
| ★ சாளி — ஸ்டீல் | 5,000 '' '' |
| — பிளாஸ்டிக் | 7,000 '' '' |
| — ஸ்குயர் லைட் | 8,750 '' '' |
| ★ MT 50 MB 50 | 10,000 '' '' |

| யமஹா | ரூபா |
|---|---|
| ★ V 50 T, V 90 T போஸ்ட் ஆபீஸ்மொடல் | 11,000க்கு மேல் |
| ★ YB 50, YB 90 பொயின்ட் CDI | 10,000 '' '' |
| ★ YB 125 CDI | 11,000 '' '' |
| ★ V 50, V 70 பொயின்ட் | 6950 '' '' |
| ★ V 50, V 80 CDI | 7250 '' '' |
| ★ DT 50 | 15,000 '' '' |
| ★ MR 50 | 10,000 '' '' |
| ★ RX 50 | 10,000 '' '' |
| ★ சப்பி | 6,000 '' '' |


சகல வகையான ஸ்கூட்டர்கள்
நல்ல நிலையில் ரூ. 5000க்கு மேல்

மொத்த விற்பனைக் சழிவு வழங்கப்படும். தேவையான அளவுகளுக்கு ஏற்ப கொள்கலன் போக்குவரத்து சேவையும் வழங்கப்படும். சிறு ஆரம்ப கொடுப்பனவை செய்து உங்கள் தேவைகளை பதிவு செய்யுங்கள்.

**பினான்ஸ் அன்ட் லாண்ட் சேல்ஸ் லிமிட்டெட்**

15, செல்லமுத்து அவெனியூ,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03.
(காலி வீதி, கடற்கரைப் பக்கமாக ரேணுகா ஹோட்டலுக்கு பின்புறம்)
தொலைபேசி:- 573660, 574525
(F)பக்ஸ் - 574782


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முத்துக்குமாரு ரஞ்சன்**

மண்ணில்: 05. 08. 1955 விண்ணில்: 09. 05. 1989

திதி: 28. 04. 1990

எம் இதயதீபமே! நீங்கள் மறைந்து ஒரு வருடம் ஓடி விட்டதே! இன்னமும் ஆறவில்லை எங்கள்மனம் ஓயவில்லை எங்கள் கண்ணீர்! எமது குடும்பத்தில் ஒளி விளக்காய் வழிநடத்திய அன்புத் தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்.

மானாங்கானை,
வல்வெட்டித்துறை. (3289)


சொழும்பு மாநகரில் விடுதி என்னும் போது நினைவிற்கு வருவது

**விக்டோரியாஸ்**

- நீங்கள் தலைநகர் கொழும்பிற்கு வியாபார நிமிர்த்தமாகவோ, வெளிநாடு செல்வதற்காகவோ அல்லது வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர் நண்பர்களுடன் தொலைபேசியில் பேசுவதற்காகவோ, அலுவலக வேலையாகவோ. . இன்னும் எத்தனையோ அலுவல்களுக்காகச் செல்லலாம் ஆனால் அங்கு தங்குவதற்கு இடம் தேட வேண்டுமே! ஒரு நல்ல இடம் இல்லையே என இனி கவலைப்படவேண்டியதில்லை. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே காத்திருக்கின்றது **விக்டோறியாஸ்!**
- கொழும்பு நீதி மன்றங்களுக்கு அருகாமையில் அமைதியான சூழ் நிலையில் நட்சத்திர விடுதிகளுக்கு இணையான தங்கும் விடுதி.
- நீங்கள் குடும்பமாகவோ தனியாகவோ தங்குவதற்கு ஏற்ற அறைகள் தனியறையுடன் இணைந்த அறைகள் (Attached Bathrooms) Single, Double Bedrooms, Hall வசதி எது உங்களுக்கு தேவைப்படுகின்றதோ அவற்றை தெரிவு செய்யலாம்.
- Airport வாகன வசதியும் செய்து தரப்படும். நினைவு வைத்திருங்கள்!

**VICTORIA'S**
**Lodging Tours & Travels**
371, டாம் வீதி,
கொழும்பு. 12
தொலைபேசி: 434529/541099
(3365)



**Jaffna Chess Academy**

Wishing to Learn or To Play better Chess.
Call at
161, BROWN ROAD, JAFFNA.
[3362]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நாகரத்தினம் நடராசா**

தோற்றம்: 07-11-1926 மறைவு: 28-04-1988

என்றும் எங்கள் இதய தீபமே! எங்கள் இல்லத்தில் மங்காத ஒளி வீசி, எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களை வாழ வழிவகுத்து, எல்லா வழிகளிலும் உறுதுணையாக நின்று மங்காத ஜோதியாக நின்ற அருமை தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுமறைந்தாலும், இன்றும் எங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். தினமும் உங்களைப் பூஜித்துக் கொண்டேயிருப்போம்.

கணவன், மக்கள்:
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'ராஜபவனம்',
கந்தரோடை வீதி,
சுன்னாகம். (3368)


**SPOKEN ENGLISH**

ஆங்கிலம் பேச வேண்டுமா? பிறரைப் போல் கூச்சமின்றி நீங்களும் ஆங்கிலத்தில் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்- மிக மிக புதுமையான உளவியல் முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள் எளிய அஞ்சல் வழி பயிற்சிக் தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம். நூற்றுக்கணக்கான மாணவர்கள் கற்று இன்று ஆங்கிலம் பேசும் வல்லமையை அடைந்துள்ளனர்.

**International Association of Book-Keepers (London Exam)**

இப்பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் பயிற்சியாகும். இதில் ஆரம்ப, நடுத்தரம், இறுதிதரம் எனும் மூன்று பகுதியினருக்கும் ஆங்கில மொழியில் தபால் மூலம் கற்றுத் தரப்படும். இப்பரீட்சைகளுக்கு கடந்த 5 வருட பயிற்சி வினாவிடைகளும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

**Effective English with Grammar**

க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கான விசேட பாடத்திட்டம். இக்கல்வித் திட்டத்தில் ஆறு மாத காலம் பயிற்சி செய்தவர்களுக்கு சாதாரண தர பரீட்சையில் திறமைச் சித்தி பெறக் கூடிய ஆங்கில பாடத்திட்டம். இதனை விட

**British Council - University of Cambridge first Certificate in English for Proficiency in English Certificate Examination**

ஆகிய பரீட்சைகளுக்கும் இப்பாடத்திட்டம் வழி வகுக்கும். ஆங்கில இலக்கணத்தை மாணவர்களுக்கு மிகவும் இலகுவான வழியில் புரிந்து கொள்ளக் கூடிய முறையில அமைந்த பாடத்திட்டம் எம்மிடம் பேச்சு ஆங்கிலம் படித்த மாணவர்களுக்கு விசேட சலுகை எனவே எம்மிடம் படித்த மாணவர்கள் தங்கள் மாணவ இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

**Structured Basic Computer Programming**

மாணவர்களுக்கு தமிழில் சாதாரணமாக விளங்கக் கூடிய முறையில் அமைந்த பாடத் திட்டம். பேசிக் கொம்பியூட்டர் புறோக்கிராமிங் மூன்று மாதத் திட்டம் இப்பாடத் திட்டத்தில் எல்லா மாணவர்களுக்கும், இலகுவில் விளங்கக் கூடிய முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய தபால் மூலம் கல்வித்திட்டம் இத்திட்டத்தில் சேருபவர் தமக்கு விரும்பும் இடத்தில் இக்கலையின் செய்முறைப் பயிற்சியை மேற்கொள்ளலாம். எமது பாடத்திட்டம் மாணவர்களுக்கு இலகுவில் விளங்க வைப்பதையே நோக்கமாகக் கொண்டது. இப்பாடத்திட்டத்திற்கு கட்டணம் ரூபா 150.00 மாத்திரமேயாகும். கொம்பியூட்டர் பற்றிய அறிவை வளர்க்க விரும்புபவரும் இத்திட்டத்தில் இணையலாம்.

**Method of Book-Keeping (தபால் மூலம் கல்வி)**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இதற்கு மொத்தக்கட்டணம் ரூபா 500.00 மாத்திரமே,

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர் (புக்கீப்பர்) கணக்கு லிகிதர் (எக்கவுன்ஸ் கிளார்க்), கணக்கு பரிசோதகர் (ஓடிட் கிளாக்) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்ளுவதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் இங்கிலாந்து (லண்டன்) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப் பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப் பயிற்சியினை திறம்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினை தேடித்தரக் கூடிய சிறந்த சான்றிதழ் வழங்கப்படும்.

**SPOKEN SINHALA**

சிங்களத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை - கவலை வேண்டாம். மூன்றே மாத காலத்தில் உளவியல் ரீதியில் மிகத் திறம்பட சிங்களம் பேசக்கூடியதாக கற்றுத் தேற முடியும். விபரங்களை அறிய விரும்புவோர் ''ஸ்போக்கன் சிங்ஹள'' என இடது பக்க தபால் மூலையில் எழுதி அனுப்பவும்.

**BUSINESS ENGLISH**

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத் திட்டம் - இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விண்ணப்பப்படிவம் எப்படி தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றாட பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

**புது அறிவொளி**

வெளிவந்து விட்டது. எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ். பிரபல்ய புத்தக கடைகளில் கிடைக்கும். நேரடியாக பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்கட்கு பல விசேட வசதிகள் செய்துள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

**BRIGHT TRAINING CENTRE**
P. O. BOX 162, COLOMBO.
SRI LANKA
[சி-4300]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்
A/L 90 வினாவிடை
புவியியல் - குணராசா
ஆரம்பம்: 28 - 04 - 1990 2 மணி
(சி-4322)

## விக்னா ரியூசன் சென்ரர்
52, Stanley Road, Jaffna.
கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
கலை, வர்த்தக
A/L
91 DAY CLASSES
தினசரி 8.00 — 2.00
ஆரம்பம்: 03 - 05 - 1990 காலை 8.00
முக்கிய குறிப்பு:
i முழு பாடத்திட்டமும் செய்து கொடுக்கப்படும்.
ii எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
iii 30 ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
vi பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
v விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
vi முற்றிலும் பாடசாலை போன்று நடாத்தப்படும்.

கலை வர்த்தக வகுப்புகளுக்கான 92 A/L அனுமதிகளை முன்கூட்டியே அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். வகுப்புக்கள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது.
(சி-4468)

# காதல் செய்த கோலம்!

குறுங்கதை

செல்வியின் இறுதிக் கிரியைகளுக்குப் போய் வந்த நேரம் தொடக்கம் தயாவுக்கு மனமே சரியில்லை. இப்படித் தனக்காகச் செல்வி தன் வாழ்வை மாய்த்துக் கொள்ளுவாள் என்று தயா கனவிலும் நினைக்கவில்லை.

சுவாமி அறைக்குள் சென்ற தயா—

'செல்வியின் உயிரை இப்படி அநியாயமாகப் பறித்து விட்டாயே'— எனப் புலம்பியபடி அவளுக்காகப் பிரார்த்தித்தாள்.

இவ்வளவு துன்பத்திற்கும் காரணம் அந்த ரகுதான். படிக்கும் காலத்தில் தயாவின் பின்னாலே விடாது சுற்றி, அவள் மனதைக் கலைத்துத் தன் வசமாக்கினான்.

அதேபோல செல்வியின் மனதிலும் காதல் துளிர்க்கக் காரணமாகினான்.

ரகுவை இருபெண்களும் ஒருவருக்கொருவர் தெரியாது காதலித்தனர்.

ஆனால் போகப் போக செல்விக்கு ரகுவின் இந்த இரட்டைவேடம் தெரிந்து விடுகிறது. அதைத் தன் தோழி தயாவுக்குச் சொல்ல முற்படுகிறாள். முடியவில்லை. உயிரையேவிட்டாடள்.

செல்வி இறந்த பிறகு தயா ரகுவை நெடுநாளாக சந்திக்கவில்லை. சந்திக்கவும் அவள் விரும்பவும் இல்லை. கடைசியில் செல்வியின் வாழ்வும் இல்லை. தன்னுடைய எதிர்காலமும் நல்ல நிலையில் இல்லை என்று மிகவும் வருந்தினாள்.

3 வருடங்கள் கழிந்தது. அவளது மாமாவின் மகனை தயாவுக்கு நிச்சயித்து இருப்பதாகப் பெற்றோரிடம் இருந்து கடிதம் வந்தது. அதைப் பார்த்த தயா முதலில் அதிர்ச்சி அடைந்தாள். பிறகு ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு ரகுவோடு வாழ்வதைவிட தன் மாமாவின் மகன் ராகுலனைத் திருமணம் செய்வதே மேல் என நினைத்து சம்மதம் தெரிவித்து விட்டாள்.

இருவருக்கும் திருமணத் திகதி குறிக்கப்பட்டது. அந்த நேரத்தில் ரகு வந்து குழப்பி விட்டான்.

தான் தயாவைக் காதலித்ததாகவும் அவளும் தன்னைக் காதலித்ததாகவும் தயா அவனுக்குக் கொடுத்த காதல் கடிதங்களை மாமாவிடம் காட்டினான்.

தயா - ராகுலன் திருமணமும் நின்று விட்டது.

ரகு தயாவைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு அவ்வாறு செய்யவில்லை. தன்னை விட்டு இன்னொருவனைத் திருமணம் செய்யத் துணிந்ததற்காகப் பழி வாங்க வேண்டும் என்றே அவ்வாறு செய்தான்.

திருமணம் குழம்பியதை நினைத்து மனம் குழம்பினார் தயாவின் தந்தை. தன் மகள் வாழ்வு வீணாகி விட்டதே என்ற ஏக்கத்திலோ என்னவோ பல நாள் படுத்த படுக்கையாகி மரணமானார்.

அதற்குப் பிறகு தயாவை திருமணம் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. அவளுக்கும் வயது ஏறிக்கொண்டே சென்றது. ஆனால் அவளுக்குப் பேசிய மாமன் மகன் ராகுலன் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளோடு சுகமாக வாழ்கிறான்.

அவளது வாழ்வை பாழாக்கிய ரகு தன் மாமன் மகள் விஜியைத் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளோடு கொழும்பில் இருக்கிறான். ஆனால் தயா... .. ?

- வே. முகுந்தவர் செல்வி -

# பதைபதைத்து மாள்வதா?

கசிப் பென்ற காலனை
கைப் பிடிக்க எண்ணியே
பசிப் பிணியை நாளுமே
வளர்த்து வந்தான் வீட்டிலே
புசிப் பதற்கு வழியில்லை
காசையவன் கொட்டியே
கசிப் படித்தான் தினமுமே
கருகி நின்றான் ஈரலே.

வாட்டு கின்ற வறுமையில்
வாழுகின்ற ஏழையும்
தேட்ட மெல்லாம் கொட்டியே
தேய்ந்து காய்ந்து மாய்ந்திட
நாட்ட முடன் கசிப்பினை
நாளும் தேடிச் செல்கிறார்
ஆட்டம் போட்டு விழுகிறார்
அனாதரவாய்க் கிடக்கிறார்.

சட்டி பானை தன்னுடன்
நித்தம் சண்டை போட்டுமே
அட்ட காசம் புரிகின்ற
அற்ப மனிதன் தன்னையே
இட்ட முடன் அணுகியே
இனிய புத்தி சொல்லவே
வெட்டிடுவான் எவரையும்
வெட்டிரும்பின் குணமது.

கற்றவர்கள் சிலருமே
கசிப்பின் கொடுமை சொல்லுறார்
நற்றவர்கள் சிலருமே
நாளுமதை எழுதுறார்
உற்றவர்கள் தாமுமே
உயிர்குடிக்கும் என்கிறார்
பற்றதிலே வைத்தவர்
பதைபதைத்து மாள்கிறார்.

— எஸ். நாவரசன்

# யாத்திரைக்கு இடமான யாழ்ப்பாண நூலகம்

தூரத்தில் இருந்துந்தன்
துயர்கதையைக் கேட்டிருந்தும்
ஓரத்தில் வந்தின்று
உருகி வடிக்கின்றேன்.

அறிவுப் பசியோடு
அன்றாடம் வந்தோர்க்குச்
செறிவுப் பாலூட்டிச்
சீர்தூக்கி நீ வைத்தாய்.

உன்மடியிற் பால்குடித்து
உருப்பட்ட மானிடர்கள்
பொன்னொளியாய் மின்னுவதைப்
புவியெங்கும் காணுகிறேன்.

ஒப்பில்லா ஞானிகளை
உலகுக்குக் கொடுத்ததெற்கா
குப்பையினைப் போலன்று
கொழுந்துவிட்டு நீயெரிந்தாய்?

சிந்தனைக்குத் தீன் கொடுத்தாய்
சிறியோர்க்கும் கைகொடுத்தாய்
வந்தணைக்க முடியாத
வன்தீயிற் சிக்கிவிட்டாய்.

அரும்பொருளின் பொக்கிஷமே
ஆவலுடன் உனைக்காண
வரும் திரளைக் கலங்கவைத்து
வலுவிழந்து கிடக்கின்றாய்.

பெட்டகமாய் அரிதுகளைப்
பேணுதலாய்க் காத்தளித்துப்
பட்டமரம் போலின்று
பாழடைந்து கிடக்கின்றாய்.

மலர்ந்துவிட ஏங்குகின்ற
மானிடத்து மொட்டுகட்காய்
உலர்ந்துவிட்ட அறிவூற்றே
உதித்தெழும்ப மாட்டாயா?

— எஸ். எல். எம். இப்றாஹீம்

# விம்பிள்டன் டென்னிஸ் பரிசுப்பணம் அதிகரிப்பு

□ உலக டென்னிஸ் போட்டிகளில் விம்பிள்டன் டென்னிஸ் சம்பியனைத் தெரிவு செய்யும் போட்டி மிகவும் புகழ் பெற்றது.

இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதில் வெற்றி பெறும் வீரர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை 20 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டைவிட 23 சதவீதம் அதிகமாகும்.

இதன் மூலம் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் வெற்றி பெறும் வீரருக்கு ஒருகோடி 25 லட்சம் ரூபாவும்,

பெண்கள் ஒற்றையர் போட்டியில் வெற்றிபெறும் வீராங்கனைக்கு ஒருகோடி 15 லட்சம் ரூபாவும் பரிசுப் பணமாகக் கிடைக்கும். ★

## விளையாட்டுத் துணுக்குகள்

□ அமெரிக்காவில் உள்ள ஹில்டன் ஹெட் நகரில் ஒன்றரைக்கோடி ரூபா மொத்தப்பரிசுத் தொகைக்கான பெண்கள் டென்னிஸ்போட்டி சென்ற எட்டாம் திகதி நடந்தது.

இதில் மாட்டினோ நவரத்திலோவாவும் ஜெனிபர் கபிரிட்டியும் மோதினார்கள்.

நவரத்திலோவாவுக்கு வயது 35. எதிர்த்து விளையாடிய ஜெனிபருக்கு வயது ஆக 14 ஆகும்.

முதல் இரண்டு சுற்றுக்களிலும் நவரத்திலோவோ 6-2, 6-4 என்ற கணக்கில் வெற்றி ஈட்டினார்.

இத்தோடு நவரத்திலோவோ பெற்ற சாம்பியன் பட்டங்களின் எண்ணிக்கை 150 ஆகின்றது.

உலக டென்னிஸ் அரங்கில் இருப்பவர் கிறிஸ் எவர்ட். அவர் பெற்ற சம்பியன் பட்டங்களின் எண்ணிக்கை 157 ஆகும்.

★ ★ ★

□ ஆசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் செப்டம்பர் 22 ஆம் திகதி சீனத்தலைநகர் பீகிங்கில் ஆரம்பமாக உள்ளது.

இதில் இடம்பெறும் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ள நீச்சல் வீரர்கள், வீராங்கனைகளை அனுப்புவது இல்லை என்று ஈரான் முடிவு செய்துள்ளது.

ஆண், பெண் நீச்சல் போட்டிகள் தனித்தனியாக இல்லாமல் ஒரே சமயத்தில் நடத்தப்படவிருப்பதே இதற்குக் காரணம் என்று ஈரான் அறிவித்துள்ளது.

1979 இஸ்லாமியப் புரட்சியின் பின்னர் ஆண் பார்வையாளர்கள் முன்னிலையில் ஈரான் பெண்கள் விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

□ பிரபல பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் புற்றுநோயாளருக்காக சகலவசதிகளையும் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டி வருகிறார்.

இம்ரான்கானின் தாயார் அண்மையில் புற்றுநோய் காரணமாகக் காலமானார்.

அவரது நினைவாக இந்த மருத்துவமனை கட்டப்படுகிறது.

இம்ரான்கான், ஐ. நா. ஸ்தாபனத்தின் ஓர் அங்கமான யுனிசெப் நிறுவன பிஉறுப்னராவார். ★

# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவிதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.
சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

பஜாஜ் பயணம் கோடி பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகையின் மகத்துவத்தை நினைவூட்டி எம்மை விட்டுப் பிரியும் ரமழான்

புனித ரமழான் நம்மிடம் விடை பெற்றுச் சென்று விட்டது. அதனால் மங்காத உணர்ச்சிகளை மனிதனுடைய மனதில் மகிழ்ச்சியுடன் விட்டுச் சென்றிருக்கின்றது. பசியின் உருசியை அறிந்து கொண்டாயல்லவா?

இனிமேலும் பாலும், சோறும் வேண்டாம். பழைய சோறு ஒரு பிடி கிடைத்தாற் போதும் என்று தெருவிலும் பக்கத்துக் குடிசையிலும் உன் போன்ற மனிதப் பிறவியின் ஓலத்தைக் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் கரையாத மனம் படைத்தவனாய் அறுசுவை உண்டிகள் தொண்டை முட்ட உண்டு விட்டு மாடிவீட்டு பஞ்சணை மீது படுத்துறங்கும் பழக்கத்தை விட்டுவிடு என்று சொல்லிச் செல்கின்றது ரமழான்.

நீயே உழைத்துக் தேடிய உணவைக் கூட உண்ணாமல் ஒதுக்கி வைக்கவும், உன் அருமை மனைவியைக் கூடத் தீண்டாது தள்ளி விடவும் முடியுமென்பதை நிரூபித்து விட்டாய். இனிமேல் பாழும் வயிற்றை நிரப்புவதற்காக பஞ்சமா பாதகங்களைப் புரியாதே. அந்நிய கன்னியரை ஏறெடுத்துப் பார்க்காதே என்று கூறிச் செல்கிறது புனித ரமழான்.

நலிந்த மக்கள் மீது கொள்ளும் அனுதாபம், அவர்களின் தாழ்நிலையைப் போக்குவதற்கான கடமை உணர்ச்சி அவ்வழியே காரியமற்ற உந்தும் உள்ளம் இவைகள் தாமே ஈகையின் ஆரம்பமாகும்.

ரமழானில் தோன்றும் இவ்வித எண்ணங்களால் மக்களின் உள்ளங்கள் நெகிழ்ந்து மென்பட்டுள்ள நேரத்தில் தருமத்தின் திருநாள் ஈதுப் பெருநாள் வருவது வெறும் பொருத்தம் மட்டுமல்ல, சிந்தனையளவில் ரமழான் செய்வதை செயலளவில் காட்டும்படி முஸ்லிம்களைத் தூண்டுவதற்காகவே இப்பெருநாள் வருகின்றது. திருமறை அருளிய இறைவனுக்கு நன்றி செலுத்த நோன்பென்றால் அந்த நோன்பை நிறைவேற்ற ஒப்பற்றவனுக்கு வந்தனை செய்ய ஈதுல் பித்ர் உரியதாகும்.

இந்த ஈதுல் பெருநாளை வானவர்களாகிய அமரர்களும் வெகு ஆனந்தத்தோடு கொண்டாடுகின்றார்கள். இத்திருநாளில் இறைவன் தனது அமரர்களை அழைத்து ஓ! அமரர்களே இந்த ரமழான் மாதத்தின் கடமைகளைப் பூர்த்தி செய்து முடித்த என் அடியார்களின் கூலி எங்ஙனம் இருத்தல் வேண்டுமென்று வினவுகின்றான்.

அப்போது அமரர்கள் 'இறைவா அவர்களுக்கு உயர்ந்த சன்மானங்கள் அளிக்கப்படல் வேண்டும்' என்று பதிலுரைக்கின்றார்கள்.

என் அடியார்கள் இம்மாதப் முழுவதும் நோன்பு வைத்தார்கள். இராக்காலங்களில் கண் விழித்து நபிலாண வணங்கள் புரிந்தார்கள். திருமறை குர் ஆன் ஓதினார்கள். பெருநாளன்று தங்களின் இல்லங்களையும் மறந்து என்னிடம் பிரார்த்தனை புரிந்தார்கள். என்னுடைய உயர்தத்துவத்தின் மீது ஆணையாக நான் இன்று அவர்களின் துஆக்கள் ஒப்புக்கொண்டேன். அவர்களின் குற்றங்களை மன்னித்து தூய்மையானவர்களாக மாற்றிவிட்டேன் என்று அமரர்களிடத்தில் இறைவன் கூறுகின்றான்.

இறைவா நான் உனது அடியார்களை பகற்பொழுதில் உண்ணல், குடித்தல், மற்றும் சிற்றின்பச் செயல்களிலிருந்து தடுத்திருந்தேன். ஆகவே இறைவா அவர்கட்கு பிழைப் பொறுப்பாயாக என நோன்பும், இதேபோன்று இறைவா நான் உனது அடியார்களை என்னை ஓதுவதற்காக இரவில் நித்திரை செய்வதை விட்டும் தடுத்து விட்டேன்.


ஆகவே அவர்களுக்குப் பிழை பொறுத்தருள்வாயாக என்று குர்ஆன் ஷபா அத்து (மன்றாட்டம்) செய்கின்றது. நம்முடைய எந்த வணக்கமும் எவ்வித குறையுமின்றி பரிசுத்தமாக இருப்பது மிக அரிதேயாம். எனவே இந்த ரமழான் நோன்பும் குறைகளின்றி பரிசுத்தமாக இருப்பதும் அரிதேயாகும்.

எனவே அக்குறைகளைக் களைந்து நோன்பைத் தூய்மைப்படுத்துவதற்காக ஸதகத்துல் பித்ர் எனும் தருமம் பெருநாளன்று கடமையாக்கப்பட்டுள்ளது. இறக்கப்படல் இறைகட்டளை என்பதையும் நோன்பின் குறைகள் அகற்ற அதனால் நாம் தூய்மையடைய தருமமே மிகச் சிறந்த ஆயுதமாகும்.

தவிர எல்லோரும் தூக்கமின்றி துயிலெழுந்து மறை ஒன்று; இறை ஒன்று குலம் ஒன்றென தக்பீருடன் பவனி வர பாரோர் புகழும் இக்கட்டாய தருமம் (பித்ரா) சிறந்தவொரு உபாயமாகும் என்பதில் ஐயமில்லை. ★

- அபூஷா -







## பிறிஸ்டல் சொல்லாக்கம்

இந்தப் போட்டியின் 2 ஆவது இருவாராந்தச் சீட்டிழுப்பு 1990 ஏப்பிரல் 17ம் திகதி கலதாரி மெரிடியன் ஹொட்டேலில் நிகழ்ந்தது. விற்பனை ஊக்குவிப்பு - விசேட நிகழ்ச்சிகள் முகாமையாளர் திரு. ரஜீவ விஜேதுங்க வெற்றிக் கூப்பன் ஒன்றைத் தெரிவு செய்கிறார். படத்திலுள்ளோர் (இடமிருந்துவலமாக) வாணிக முகாமையாளர் (சீ. ரீ. சீ) திரு. சாவி வீரசிங்க, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் திரு. ஜினதாச, திரு. ரஜீவ விஜேதுங்க (சீ. ரீ. சீ), ஜே. வோல்டர் தொம்ஸனின் சிரேஷ்ட சேவை நிறைவேற்று அதிகாரி திரு. தயாளன் பாட்லெட்.

# இறை நம்பிக்கை மூலம் பற்றற்ற வாழ்க்கை

'ஒவ்வோர் உயிரினமும் மரணத்தைச்சுவைப்பவையே'

'சக்திவாய்ந்த கோட்டையினுள் இருப்பினும், மரணம் உங்களை அடைந்தே (பிடித்தே) தீரும்'

'நபியே, நீர் கூறுங்கள்! மரணத்தைக் கண்டு விரண்டோடாதீர்கள். நிச்சயமாக, மரணம் உங்களைச் சந்தித்தே தீரும்'

'இறைவனைச் சந்திக்க எவர் அதிருப்தி கொள்கின்றாரோ, அவரை இறைவனும் அதிருப்திகொள்கின்றான்'

'இறை நேசர்களுக்கு, மரணம் அன்பளிப்புப் போன்றதாகும். மனிதன் மரணத்தை வெறுக்கிறான். ஆனால் உலகில் உண்டாகும் சோதனைகளிலிருந்து, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, மரணம் துணை நிற்கிறது என்பதை உணர்ந்தால், மனிதன் மரணத்தைக் கண்டு மருளவும் மாட்டான்; வெறுக்கவும் மாட்டான்'

'நீ விரும்புகின்றவற்றை எல்லாம் விரும்பு! ஆனால் இவற்றையெல்லாம் விட்டும், நீ ஒரு நாள் பிரியப்போகிறாய் என்பதையும் உணர்ந்து கொள்'

'வயோதிபம் வரும் முன் வாலிபத்தையும், வியாதி வரும்முன் உடல் நலத்தையும், ஏழ்மை வரும் முன் சீமான்தனத்தையும், வேலை வரும்முன் ஓய்வையும், மரணம் வரும் முன் வாழ்வையும் பாதுகாத்து இச்சந்தர்ப்பங்களில் முன் எச்சரிக்கையுடன் நன்மைகளை மூலதனமாக்கிக்கொள்'

'மறுமையை மறக்கச்செய்யும் உலகை, மரணத்தை மறக்கச் செய்யும் வாழ்க்கையை, நற்செயல்களின் சிறப்புகளை மறக்கச்செய்யும் பேராசைகளை விட்டும் பாதுகாப்புத் தேடுகின்றேன்'

'எனது உம்மத்தில் சிலர், இறை நம்பிக்கை மூலமும், பற்றற்ற வாழ்க்கை மூலமும் வெற்றிபெறுவார்கள், சிலர், கஞ்சத்தனத்தின் மூலமும், பேராசைகள் மூலமும் அழிந்துவிடுவார்கள்' ★

- தொகுப்பு ஜனாபா என். ஷீனத்நிஸா -


## தேவை

1. **மெக்கானிக்குகள்**

றொபின். வில்லியேஸ், லூஸ்லி J. L. O. பவர் ஸ்பிறேயர் திருத்தக் கூடியவராகவும், (ஸ்பிறே பெயின்ற் அடிக்கக் கூடியவராக இருந்தால் விரும்பத் தக்கது) இவற்றை மேற்பார்வை பார்க்கக் கூடிய Foremen தேவை.

2. **அலுவலக உதவியாளர் தேவை**

(தமிழ், ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் விரும்பத் தக்கது.) இருப்பிட வசதி, E.P.F., E.T.F.கொடுக்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

**ஓட்டோஸ் ஏஜென்சீஸ்,**
109, கண்டி வீதி,
வவுனியா.

[3348]



# குஷ்டரோகம் பற்றி இதுவரை நிலவிய பீதி வீணனது. இதோ, உண்மைகள்!





குஷ்டரோகம் பல நூற்றுண்டுகளாக மனிதனைப் பீதியிலும் துன்பத்திலும் விரக்தியிலும் ஆழ்த்திவந்த ஒரு நோயாகும். இந்த நோயின் ஆபத்து இப்பொழுது குறைந்துள்ள போதிலும் இன்று கூட பலர் 'குஷ்டரோகம்' என்ற வார்த்தையைக் கேட்டாலே பீதி கொள்கிருர்கள்.

நோயாளியை வெறுத்துச் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைக்கும் வழக்கம். அதற்குக் காரணமாக இருக்கும் உடல் விகாரங்கள், குஷ்டரோகம் பற்றிய மூட நம்பிக்கைகள் என்பனவே இதற்குப் பிரதான காரணங்களாகும்.

உண்மையில், குஷ்டரோகம் பற்றி நாம் வீணகப் பீதியடையத் தேவையில்லை. ஏனென்றல்,

- உடல் விகாரங்கள் எதுவுமே ஏற்படாமல் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தவல்ல மருந்துகள் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- குஷ்டரோகம் நமைச்சல் அளிக்காத, உணர்வற்ற ஒரு தடமாகவே ஆரம்பிக்கின்றது. அந்தக் கட்டத்திலேயே அதனை இலகுவாகக் குணப்படுத்தி விடலாம்.
- பத்துப் பேரில் ஒன்பது பேர் இந்த நோயிலிருந்து தப்பிக் கொள்வதற்கான இயற்கை எதிர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ளனர்.
- நோயாளிகளில் 20 சதவீதத்தினருக்கே தொற்றக்கூடிய குஷ்டரோகம் ஏற்படுகிறது.
- சிகிச்சை பெறத் தொடங்கிய நோயாளியிடம் இருந்து குஷ்டரோகம் இன்னொருவருக்குத் தொற்றவே மாட்டாது.
- குஷ்டரோகிகள் சிகிச்சை பெறும்போது வீட்டிலேயே இருந்து வழமையான வாழ்க்கையை நடத்தலாம். அவர்களைத் தனிமைப்படுத்தவோ வைத்தியசாலையில் வைக்கவோ தேவையில்லை.

**குஷ்டரோகத்தின் ஆரம்ப அறிகுறிகள்**

- சருமத்தில் நமைச்சல் அளிக்காத, வெளிறிய அல்லது செந்நிறத் தடங்கள் தோன்றும்.
- இந்தத் தடங்களில் உணர்வோ வலியோ இருக்காது.
- கை கால்களில் விறைப்பு ஏற்படக்கூடும்.
- தடங்களுக்குப் பதிலாகக் கட்டிகள் அல்லது கழலைகள் தோன்றக்கூடும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
சிபா கெய்கி குஷ்டரோக நிதியம்

CGL 3440

மேலதிக விபரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல மருத்துவ மாது, பொதுச் சுகாதாரத் தாதிமார் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறலாம்.

இப்பொழுது உடல் விகாரங்களின்றிக் குஷ்டரோகத்தை முற்றுகக் குணப்படுத்தலாம். இன்றே சிகிச்சை பெறுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
**இராசையா அருந்தவராணி**
அவர்கள்
(பரிசாரகர் - தெல்லிப்பழை மாவட்ட, வைத்தியசாலை)

மலர்வு: 1961 - 11 - 19
உதிர்வு: 1990 - 02 - 14

நீ நடந்த பாதைகளில்
பொன்நொச்சி பூச்சொரிந்தன
நீ நடந்த இடங்களில்
வசந்தம் வாழ்த்துப் பாடியது
சற்றும் எதிர்பாராத
சாவாய் உன் வாழ்வு
விட்டுப் போனதம்மா
விழி உருகி நிற்கின்றோம்
வயது இருபத்தொன்பதில்
வானம் நொருங்கி
வழியடைத்து நின்றது
காலம் உன் வாசலை
கதவடைத்துப் போனது
நோயாளர் படுக்கையிலே
ஆறாத்துயரை
அன்பினால் துடைத்தவள்
மாறாது மாறாது
உன் நினைவின் மெய்வழக்கு
இன்றிங்கு உன் மூச்சு
உயிரற்றுப் போனாலும்
முற்றத்துப் பூச்செடியாய்
முழு நிலவாய்
மூச்சுக் காற்றென
முழு நாளும் நிற்கிறது

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள், உறவினர்கள்.

''ராணி இல்லம்''
மீசாலை தெற்கு,
மீசாலை.
(3352)

## 3ஆம் மாத நினைவஞ்சலி



**செல்வி பொப்பன் - கிளி**

அன்னையின் மடியில்: 1972 — 12 — 02
ஆண்டவன் சந்நிதியில்: 1990 — 01 — 07


பாசத்தின் பிறப்பிடமாய், அறிவின் சுடரொளியாய் விளங்கி அனைவரினதும் மனதிலும் நீங்கா இடம் பிடித்த எங்கள் செல்வி பொ. கிளி நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து 3 மாதம் சென்றாலும், உன்னுடைய பசுமையான நினைவுகள் என்றும் மாறாதம்மா!

உனது ஆத்மா சாந்தியடைய அல்லும் பகலும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், தம்பி அத்தான்மார், அண்ணி, மகன், மகள்மார், மற்றும், உற்றார் உறவினர்கள்.

K. மாணிக்கம்,
கைத்தொழில் பேட்டை வீதி,
அச்சுவேலி.
[2998]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் ஆ. க. வேலாயுதம்பிள்ளை**

தோற்றம்: 19 06-1936
மறைவு: 29-03-1990
திதி:- 28 - 04 - 1990


எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(சி/4477)

தமிழ் மண் மீட்க தன்னையே தந்த
தமிழழகன் மேஜர் நரேனின்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நல்லை நாதன் தம்பதிகள் நற்றவத்தால்
பெற்றெடுத்த
**ஜனார்த்தனன்**
**(மேஜர் நரேன்)**

தமிழ் மண் மீட்கப் பிறந்தநாள்: 24 - 11 - 1963
தமிழீழத்தில் தன்னை மறந்த நாள்: 28 - 04 - 1988

நெஞ்சு பொறுக்குதில்லை ஜனா
உன்னை நினைக்கையிலே
கொஞ்சிக்குலாவித்திரிந்த நண்பர் நாமதனால்.
வஞ்சகராம் வலிய வந்த இந்தியப்படை
செய்த சூழ்ச்சியினால்
செஞ்சாமல் நீ போரரடியதனால்
கொன்றனரே இரக்கமில்லாது
தஞ்சம் நீயே என்றிருந்த தாய் தந்தையரும்
பார்க்க முடியவில்லை உன் திரு மேனியதை
பிஞ்சு முகத்தை ஒருக்கால் பார்க்கவென்று
பதைத்தனராம் முடியவில்லை
அஞ்சும் தமிழர் இன்று யாருமில்லை-ஜனா
நஞ்சு கழுத்தில் கட்டி நல்ல படையாகி விட்டார்
குஞ்சு குறுமக்களெல்லாம்
விஞ்சி விட்டாய் எம்மை
புகழோடு போய் விட்டாய்
வெஞ்சமரில் வென்றுவிட்டார் விடுதலைப்புலிகள்
பஞ்சமென்பது எதுவுமில்லை இனி அவர்களுக்கு
மிஞ்சுதலாகி விட்டார்.
மீட்டுவிட்டார் தமிழீழமதை
அதனால் அடைவாய் சாந்தி சாந்தி சாந்தி

வெளிநாட்டில் வாழும் நண்பர்கள்.

ஆக்கம்:- [illegible]

# முஸ்லிம் உதவி பொலீஸ் மா அதிபர் கிழக்குக்கு நியமனமாக வேண்டும்

### சேரு இஸ்ஸதீன் கோரிக்கை

கொழும்பு ஏப் 28
கிழக்கு மாகாணத்தின் பொலீஸ் நிர்வாகத்தைப் பொறுப்பேற்க ஒரு முஸ்லிம் உதவிப் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படவேண்டும். இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாப் சேரு இஸ்ஸதீன் உதயனுக்கு இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரிய இடம் என்று கூறப்பட்ட போதும் கிழக்கு மாகாணத்தில் 42 சத வீத தமிழர்களே இருக்கின்றனர். மிகுதி 58 சத வீதத்தினர் முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஆவர்.

மாகாணசபை சட்டத்தில் ஒவ்வொரு மாகாண சபையின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட ஆள்புல எல்லைக்கு பொறுப்பாக ஒரு உதவி பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு உதவி பொலிஸ்மா அதிபரே நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மிகவும் பெரிய பிரதேசமாக இருப்பதால், கிழக்கில் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம் சிங்கள மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ் பேசும் முஸ்லிம் உதவி பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.
(இ-2)

### முருங்கன் பகுதி அடகு நகைகள்

யாழ்ப்பாணம் ஏப் 28
முருங்கன் பகுதி மக்களுக்கான அடகு நகைகளை மன்னார் மக்கள் வங்கியில் வைத்து வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

எனவே அடகு நகைகளை மீளப் பெற பணம் கட்டியோர் மன்னார் மக்கள் வங்கியுடன் தொடர்பு கொண்டு நகைகளை மீளப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ-9)

### வாழ்வகப் பொதுக் கூட்டம்

காங்கேசன்துறை ஏப் 28
தெல்லிப்பழை விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் மே 6 ஆம் திகதி வாழ்வகப் பணிமனையில் நடைபெறும்.

திரு. எஸ், சிவமகாராஜா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வாழ்வகத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராயப்படும்.
(இ-68)

### திருட்டு

புங்குடுதீவு, ஏப்ரல் 28
புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் உள்ள புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கக் கிளையில் பெறுமதிமிக்க பல பொருள்கள் களவாடப்பட்டன. (ப-இ)

### தொழு நோய் ஆய்வு

பண்டத்தரிப்பு ஏப்ரல் 28
சுழிபுரம் காட்டுப்புலத்தில் தொழுநோய் பற்றிய ஆய்வு நடத்தும் நோக்கில் வைத்திய அதிகாரிகள் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.
(ப-க-120]

### நினைவில் இன்று

28-4-1990
இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லருடன் ஒத்துழைத்த இத்தாலி சர்வாதிகாரி பெனியோ முசோலினி நினைவு தினம்.
பிறப்பு: 29. 7. 1883
இறப்பு: 28 4 1945

### நாளை கட்டடத் திறப்பு விழா

பண்டத்தரிப்பு ஏப் 28
மாசியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

80,000 ரூபா செலவிலான இப்புதிய கட்டடத்தை யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா திறந்து வைக்கின்றார்.

நிலையத்தலைவர் திரு. செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சிவசம்பு ஆரம்பித்து வைப்பார். திறப்பு விழாவை அடுத்து நிலையத்தின் 40வது ஆண்டு நிறைவு விழாவும் நடைபெறவுள்ளது.
(க-120)

### கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப் 28
யாழ் வர்த்தக ஊழியர் சங்கக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி சங்கரப்பிள்ளை கட்டடத்தில் நடைபெறும்.

திரு. நா. சற்குணராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக், யாழ் மாவட்ட கட்சி அமைப்பாளர் திரு. இ. இராஜன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். [க-7]


## மிது வீடியோ மூவிஸ்

எமது இன்றைய
புதிய வெளியீடுகள்

1. ரஜனிகாந், மீண்டும் ஸ்ரீதேவி
நடித்த
★ அக்கினிக் கரங்கள் ★
(ஒரிஜினல் பிரதி)

2. புதிய தமிழ் பாடல்கள் அடங்கிய
★ இசை மலர் 2 ★
(ஒரிஜினல் பிரதி)

உடன் தொடர்பு கொள்ளவும்:
**மிது வீடியோ மூவிஸ்**
பிரதான வீதி, சங்கானை.
(சி-4341)


பதுளை
## ஆர். வைத்தியலிங்கம் அறநிதி கல்விப்புலமை உதவிநிதி
## 1989 — 1990

பதுளை ஆர். வைத்தியலிங்கம் அறநிதி, புங்குடுதீவை வசிப்பிடமாகவோ அல்லது பிறப்பிடமாகவோ கொண்ட திறமை வாய்ந்த, ஆனால் பண வசதி குறைந்த மாணவர் ஒருவருக்கு மாத்திரம் கல்விப் புலமை உதவி நிதி வழங்கவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். இத்தகைய மாணவர், வைத்தியம், பொறியியல், கட்டிடக்கலை, சட்டம், வர்த்தகம், விவசாயம், சங்கீதம் ஆகிய துறைகளுள் எவற்றுக்காகவேனும் இலங்கையில் அல்லது இந்தியாவில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் அல்லது கல்லூரியில் 1989/1990ஆம் ஆண்டின் போது முதலாம் ஆண்டுக் கற்கைக்கு அனுமதி பெறும் மாணவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் இத்தகைய மாணவர் இயைந்த துறையில் முதலாவது பூரண பட்டம் பெறும் வரை, ஆனால் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலம் வரை, ஒருவர் ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் ரூபா (7,000/-) வரையில் உதவி நிதியாகப் பெறுவார்.

இவ்வாறு உதவிநிதி பெறும் மாணவர் பட்டப் படிப்பை முடித்து, வருவாய் தரும் தொழிலில் ஈடுபட்ட பின்னர், புலமை உதவி நிதியை இலகுவான தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர்.

இப்புலமை உதவி நிதி 1989 - 1990 ஆம் ஆண்டு மாணவருக்கே மட்டுப்படுத்தப்படுகிறது

இவ்வுதவி நிதிக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. க. பொ. த (உ. த) பரீட்சையில் சித்தி எய்தி இயைந்த ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் அல்லது கல்லூரியில் பயில அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வேறு ஏதேனும் புலமைப் பரிசிலை அல்லது உதவி நிதியைப் பெறுபவராக இருக்கக்கூடாது.
3. மாணவரது பெற்றோர், பிள்ளையின் மேற்படிப்புக்கு உதவக் கூடிய அளவு வசதி இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
4. முழு நேர மாணவராகவும், மேற்கொண்ட படிப்பு முடிவுறும் வரை, வருவாய் தரும் தொழில் எதிலும் ஈடுபடாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. 31-07-1990இல் இருபத்து மூன்று (23) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்காண்பவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

அறங்காவலர்,
**பதுளை ஆர். வைத்தியலிங்கம் அறநிதி,**
215 ஈ 2/1 பார்க் வீதி,
கொழும்பு — 5.

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுதல் முடிவுறும் திகதி: ஜூன் 15, 1990 செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஜூலை 31, 1990 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு மேற் காணப்படும் முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

[12379]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 தமிழ் இளைஞரை மடக்கிப் பிடிப்பதற்காக நோர்வே பொலீசார் உஷார்!

கொழும்பு, ஏப். 28

போலி தஸ்தாவேஜுகளுடன் செல்லும் 19 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நோர்வே நாட்டில் எந்த நேரமும் மடக்கிப் பிடிக்கப்படலாம்.

நோர்வேயில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களையும் நோர்வே குடியேற்றத் திணைக்கள அதிகாரிகள் உஷார்ப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து இந்த நிலை உருவாகி உள்ளது.

நோர்வேயில் செயற்படுவதாகக் கூறும் கப்பல் நிறுவனம் ஒன்றுக்கு பாரிஸில் இருந்து கிடைத்த ''டெலிபாக்ஸ்'' தகவல் ஒன்றைத் தொடர்ந்தே இந்த உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் உள்ள ஸ்டவன்சர் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள கிரேக்கக் கப்பல் ஒன்றில் சேர்ந்து கொள்ள 19 இலங்கை மாலுமிகள் வருகிறார்கள். அவர்களைப் பொறுப்பேற்கவும் — இப்படி அந்த 'டெலிபாக்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விலாசம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரித்தபோது அது பொய்யான விலாசம் என்ற விஷயம் தெரிய வந்தது.

இதனிடையில் நோர்வே எல்லையைத் தாண்டும் வெளிநாட்டார் செல்லுபடியாகக் கூடிய விஸாக்களை வைத்து இருக்க வேண்டும். எல்லைப் புறப் பொலீஸாரால் கைது செய்யப்படுவதைத் தவிர்க்க விஸா வைத்திருக்க வேண்டும்— என்று ஒஸ்லோவில் உள்ள அரசுச் செய்தி ஏஜன்ஸி அறிவித்து உள்ளது. (அ-எ)

# வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு நீதியான தேர்தல் நடந்தால் ஈ. பி. ஆர். எல். எவ். போட்டி

## பிரேமச்சந்திரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஏப் 28

அரசு வடக்கு - கிழக்கு மாகாண சபையை கலைத்து அதற்காக தேர்தலை நடத்துமானால் நாமும் போட்டியிடுவோம். ஆனால் நீதியான, சுதந்திரமான தேர்தலாக அது இருக்க வேண்டும். பெருமளவு ஆயுதங்களைத் தம்முடன் வைத்திருக்கும் ஒரு குழுவிடம் நீதியான, சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்க முடியாதாகையால் இவ்விடயத்தில் அரசு தலையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எப். மத்தியகுழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கே. பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கம் அதிகாரங்கள் நிறைந்த மாகாண சபையைக் கைப்பற்ற நினைத்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமானால் அது எம்மால் வரவேற்கக்கூடியதாக இருக்கும். மாகாணசபைக்கு கூடுதலான அதிகாரங்களை பெற்றுக் கொண்டு அதனைக் கலைக்கும்படி கோருவது தான் புத்திசாலித்தனமானது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபைக்கு கூடுதலான அதிகாரங்களை பெறுவதற்குப் போராடுகிறதே ஒழிய அதனைத் தொடர்ந்து வைத்திருக்கப் போராடவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-2)

# திருநெறிய தெய்வீக மாநாடு

யாழ்ப்பாணம் ஏப் 27

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் திருநெறிய தெய்வீக மாநாடு இம்மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் மே மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும், மே மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் நிகழ்ச்சிக்கு யாழ் பல்கலைக்கழகஇந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. ப. கோபாலகிருஷ்ணனும் தலைமை வகிப்பார்கள். (இ-7)

# விமானப் பணிப்பெண்ணுக்கு 22 லட்சம் ரூபாஅபராதம்!

கொழும்பு ஏப் 28

7 லட்சம் ரூபா பெறுமதியான இலங்கை கரன்ஸியை மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு கடத்த முயற்சித்த ஒரு பெண்ணுக்கு அபராதமாக 22 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இப்பெண், வெளிநாட்டு விமான சேவை ஒன்றில் விமானப் பணிப் பெண்ணாகப் பணி புரிந்து வருகிறார்.

தன்னால் அபராதத் தொகையைச் செலுத்த முடியாது என்று இப்பெண் கூறிவிட்டார்.

அவரை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய ஏற்பாடாகியிருந்தது. (உ-எ)

# காஷ்மீர் பதற்றநிலை நீங்கியவுடன் நட்புறவு ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சு!

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

இந்தியாவின் காஷ்மீர்,பஞ்சாப் மாநிலங்களில் தற்பொழுது நிலவும் பதற்ற நிலை நீங்கியவுடன், உத்தேச நட்புறவு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இலங்கை - இந்தியா அரசுகளுக்கு இடையே ஆரம்பமாகும்.

அமைச்சர் ரஞ்சன் விஜெரத்தினா முன்கண்ட தகவலை வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

விரைவில் அமைச்சர்கள் வட பகுதிக்குச் செல்வர்.

குறிப்பிட்ட அமைச்சரின் வட பகுதி விஜயம் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் தான் ரத்துச் செய்யப்பட்டது.

முறையான தரை நிலையை தயார் செய்த பின்னர் தான் விபரங்களை மேற் கொள்ளுபடி அமைச்சர்களை ஜனாதிபதி கேட்டிருக்கிறார் என்று கூறினார்.

காஷ்மீர் பிரச்சினையை ஒட்டி இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படலாம்.

இந்த இக்கட்டான நிலையில் இலங்கை - இந்திய உடன்படிக்கை தொடர்பாக நச்சரிப்பது நாகரீகம் அல்ல. - என்றார்.

### வாகன விபத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகல் சுமார் நான்கு மணியளவில் நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக அறிய வந்தது.

மரணமானவர் மற்றும், காயமடைந்தவர்கள் பற்றிய விவரம் இச்செய்தி நேற்றிரவு எழுதப்படும்வரை தெரியவில்லை. (அ-9)

# தனியார் பஸ்கள் இரவு 10 வரை சேவையில் ஈடுபட வேண்டும்

## திணைக்கள பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஏப் 28

தனியார் பஸ்கள் அனைத்தும் தினமும் இரவு பத்து மணி வரை சேவையில் ஈடுபடவேண்டும்.

தனியார் பஸ் திணைக்களப் பணிப்பாளர் என். எம். டபிள்யூ. மென்டிஸ் சகல மாவட்ட தனியார் பஸ் சங்கங்களுக்கும் இதனை அறிவித்திருக்கிறார்.

இந்த உத்தரவை மீறிச் செயல்படுவோர்களின் பாதை லைசென்ஸ் ரத்துச் செய்யப்படலாம், பஸ் கட்டணமும் குறைக்கப்படலாம்.

இப்படி திரு. மென்டிஸ் தெரிவித்தார். (ஒ-எ)

# ஜயந்தி விழா

யாழ்ப்பாணம் ஏப். 28

மௌனகுரு கடவுள் சுவாமிகளின் ஜயந்திவிழா இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் உடுவில் கிழக்கு 'கடவுள் சந்நிதி' நிலையத்தில் சுவாமிகளின் பிரதம சிஷ்யை செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.

சைவப் பெரியோர்களின் ஆத்மீக விரிவுரைகளும், அடியார்கள் பக்தர்களின் பஜனைகளும், பூஜைகளும், ஆராதனைகளும் இடம் பெறும். (இ)

# றொனி டி மெல் மீது மற்றொரு வழக்கு!

கொழும்பு, ஏப் 28

முன்னாள் நிதி அமைச்சர் றொனிடிமெல் மீது மேலும் ஒருநம்பிக்கை மோசடி வழக்கு கொழும்புமேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 லட்சத்து 89 ஆயிரத்து 189 ரூபா 50 சதம் வெளிநாட்டுச் செலாவணியாக றொனிடிமெலிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்தப் பணத்தைஅவர் நேர்மையற்ற முறையில் தனது சொந்த நலனுக்குப்பயன்படுத்தினார்-

இதுவே புதிதாக அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும். [உ-எ]

# விசா மோசடி செய்த 11 இலங்கையர் கைது!

## பம்பாய் சாகர் விமான நிலையத்தில்

பம்பாய், ஏப். 28

நெதர்லாந்தில் விசா மோசடி செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு இந்தியரும் 11 இலங்கையர்களும் பம்பாய் சாகர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இலங்கையர்கள் விசா மோசடி செய்திருப்பது உண்மைதான் என்று இங்குள்ள நெதர்லாந்து துணைத் தூதரக அதிகாரிகள் உறுதிப் படுத்தினர்.

இந்த மோசடிக்கு பின்னணியில் இருந்தவர் எனக் கருதப் படும் சிங்கம் என்பவரை பொலீசார் தேடி வருகின்றனர்.

இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்தவர் எனக் கூறப்படும் சென்னையைச் சேர்ந்த கே. முரளி என்பவரே கைது செய்யப்பட்டுள்ள இந்தியர்.

# பருத்தித்துறை பொலீஸ்

யாழ்ப்பாணம் ஏப் 28

மூடப்பட்டிருந்த பருத்தித் துறை பொலீஸ் நிலையம் கடந்த புதன் கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

இந்தப் பொலீஸ் நிலையத்தில் தமிழ் பொலீஸார் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்.

இதே வேளை மூடப்பட்ட வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையம் கடந்த 20 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது தெரிந்ததே. (உ-3)

# பாகிஸ்தானிடமும் இந்திய அணி தோல்வி!

## போட்டித்தொடரிலிருந்தும் 'அவுட்'

ஷார்ஜா, ஏப் 28

''ஒஸ்ரோலேசிய'' கிண்ணத்திற்கான ஒரு நாள் கிரிகெட் போட்டியில்நேற்று நடந்த''பி'' பிரிவு ஆட்டத்தில் பாகிஸ்தான் இந்தியாவை 26 ஓட்டங்களால்தோற்கடித்தது.

தொடர்ந்து இரண்டாவது முறையாக தோல்வி கண்ட இந்தியா, அரை இறுதி ஆட்டத்தை எட்ட முடியாமல் இப் போட்டித் தொடரில் இருந்து விலகவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு235 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 47 ஓவர்களில் 209 ஓட்டங்கள் எடுத்த போது எல்லா விக்கெட்டுகளையும்பறிகொடுத்து வெற்றி வாய்ப்பை இழந்தது.

முதலாவது ஆட்டத்தில் இலங்கை மூன்று விக்கெட்டுகளால் இந்தியாவைத் தோற்கடித்தது தெரிந்ததே. [உ-எ]

### சைவசமய---

[(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு நல்லை ஆதீனத்தை தலைமைப் பீடமாக்க இருக்கிறோம். அத்துடன் பல்கலைக்கழக மட்டத்தில் சைவ சித்தாந்தக் கல்வியையும், குருமார் பயிற்சியும் இந்தப் பீடம் மூலம் அளிக்க திட்டமிட்டுள்ளோம்- என்று திரு. லோகேஸ்வரன் அங்கு கலந்துரையாடுகையில் தெரிவித்தார்.

ஆலயங்களில் மிருகங்கள் பலியிடுதலை நிறுத்த வேண்டும் என்றும், மாட்டிறைச்சிக் கடைகளை ஆலயங்களுக்கு அருகில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் ஆதீன முதல்வர் கோரிக்கை விடுத்தார்.

செயலாளரையும், அரச அதிபரையும் ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (அ-3)

### தென்பகுதி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்களை படுக்கையில் வைத்தே கொன்று விடுவார்கள்.

இவர்களைச் சிறைவைக்க வலிமையான-பாதுகாப்புடன் கூடிய சிறைக்கூடங்கள் அமைக்க வேண்டும்.

இத்தாலி மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இருப்பது போன்ற மிகவும் கடுமையான பாதுகாப்புடன் கூடிய சிறைக் கூடங்களைக் கட்ட வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

நிரந்தரமாக இத்தீவிரவாதிகளை சிறை வைக்க வழி செய்யும் சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில்கொண்டு வரப்படும் — என்றார். (ஒ-எ)

### அதிக கட்டணம் -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னங்கள் அதிக கட்டணத்தை அறவிடுவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது—

இதேபோன்று சாதாரண தொலைபேசி அழைப்புகளுக்கும் அதிகளவில் கட்டணம் அறவிடுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது — என்றும் திரு. அசோக டி சில்வா தெரிவித்தார். (உ)


## 10th Death Anniversary



**Luther James Selvarajah**

''O, Captain My Captain
Rise up and hear the bells
For you bouquets and ribboned wreaths
for you the bugle trills
for you they call, the swaying masses
the eager faces with us''

Wife: Ranee
&
Children: Dushan, Janey.

''Selva Giri''
57, Arasady Road,
Jaffna.

(3334)







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சாலம் பெறுமதியானது
இல்லத்தரசிகளே! தங்கள் சகல
வீட்டுச் சலவைக்கும் உதவுவது
**மில்க்வைற் பவுடர் சிக்கனமானது,**
பிரகாசமானது வெண்மையைத் தருவது.
**450 கிறாம் மில்க்வைற் சலவைப் பவுடர்**
பக்கெற் மேலுள்ள கூப்பனை அனுப்பி
சிறந்ததொரு **பொலித்தீன் பாக்**
பெற்றுக்கொள்ளுங்கள்.
**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**

# சஞ்சீவி

28—04—1990 சனிக்கிழமை

அன்றும் இன்றும்
மக்கள் அபிமானம் பெற்றுள்ள
★ **மில்க்வைற் நீல சோப்** ★
புதுப் பொலிவுடனும் வாசனையுடனும்
கிடைக்கிறது.
**நீலசோப்** வாங்கும் பொழுது
மில்க்வைற் நீல சோப் தான்
என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
**மில்க்வைற்** மேலுறையிலிருந்து 100
திருக்குறள் அனுப்பிப் பயனுள்ளதொரு
**லேஞ்சியைப்** பெற்றுக்கொள்ளுங்கள்.
**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**

## அதிவேகப் படகில் வந்த ஈழத் தமிழ் இளைஞர்கள்!
### இராமேஸ்வரத்தில் பரபரப்பு!!

சென்னை, ஏப்ரல் 28
அண்மையில் இராமேஸ்வரம் கடற்கரையில் வந்திறங்கிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கோஷ்டி ஒன்று குறித்து இங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது!

இம் மாதம் ஒன்பதாம் திகதி இங்கு வந்த இலங்கைத் தமிழ் வாலிபர்கள் ஏன் வந்தார்கள், தமிழ்நாடு பொலீஸ், சுங்கப்பகுதி அதிகாரிகள் அவர்கள் இங்குவரும் வரையும் என்ன செய்தார்கள் என்பது பற்றி ஆச்சரியத்துடனும், பரபரப்புடனும் செய்திகள் வெளியாகின.

சென்னையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் பிரசுரமான செய்திகளின் பிரகாரம் சம்பவம் பற்றிய விவரங்கள் வருமாறு:-

இலங்கைத் தமிழ் வாலிபர்கள் ஒன்பதுபேர் இம்மாதம் 9 ஆம் திகதி இராமேஸ்வரம் துறைப் பகுதிக்கு அதிவேகப் படகில் வந்தார்கள். அந்தக் கண்ணாடி இழைப் படகு சுமார் 40 அடி நீளமுள்ளது. ஐந்து வெளி இணைப்பு இயந்திரங்கள் பூட்டப்பட்டிருந்தன.

பிரஸ்தாப படகில் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் இருந்தன. இளைஞர்களும் ஆயுதபாணிகளாகவே இருந்தனர்.

அவர்கள்கரை இறங்கியதும் அங்கிருந்த மக்கள் முதலில் அச்சமடைந்தனர். ஆனால் பின்னர் கூட்டமாக அருகே சென்று பார்த்தனர்.

வந்தவர்களில் ஒருவர் பிளாஸ்டிக் கொள்கலன் ஒன்றை எடுத்துக் கொண்டு துறைமுக ரயில் நிலையம் அருகே உள்ள பெற்றோல் நிலையத்துக்குச் சென்றார். 35 லீட்டர் பெற்றோல் வாங்கிவிட்டு அதற்கான பணத்தையும் கொடுத்தார்.

பெற்றோல் வாங்கிய பின்னர் அங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்குச் சென்று காலை உணவு வாங்கி விட்டு இந்திய நோட்டுக்களாகவே பணத்தைக் கொடுத்தனர். அவர்கள் இராமேஸ்வரத்தில் சுமார் ஐந்து மணி நேரம் தங்கியிருந்தனர் - என்பதாகும்.

இந்தியக் கடற்படை, சுங்கப் பகுதி, பொலீஸார் ஆகியோரின் கண்ணில்மண்ணைத் தூவி விட்டு திகிலூட்டும் விதத்தில் அவர்கள் இராமேஸ்வரம் வந்து போயிருக்கிறார்களே என்று இங்குள்ளவர்கள் மூக்கில் விரலை வைத்து வியப்போடு பேசுகிறார்கள். (அ-4)

கடந்த வருடம் திட்டமிடப்பட்ட
## அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள ரூ. 50 லட்சம் நிதி!
### யாழ். மாவட்டத்திற்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம் ஏப் 28
யாழ் மாவட்டத்தில் 89 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள 50 லட்சம் ரூபா வந்து சேர்ந்துள்ளது.

கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் வேலைகளை மேற்கொள்வது எனத் திட்டமிடப்பட்டு பின்னர் நாட்டு நிலைமை காரணமாகத் தடைப்பட்டிருந்த வேலைகளை மீள ஆரம்பிக்கவே இந்நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வேலைகளுக்கு நிதி வழங்குமாறு அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அரசாங்கத்தைக் கோரியிருந்தார்.

இதைத்தொடர்ந்து கடந்த வாரம் இப்பணம் வந்து சேர்ந்தது. மேலும் 50 லட்சம் ரூபா அடுத்தவாரத்தில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## அகதி முகாமில் ஒரிசாயினி

பாட்னா ஏப் 28
ஒரிஸ்ஸாவின் மால்காங்கிரி அகதி முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் ஒருவர் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

மூன்று அகதி முகாம்களிலும் மொத்தம் 355 பெண்கள் தங்கியுள்ளனர்.

இவர்களில் ஒருவரே கடந்த மாதம் 21 ஆம் திகதி மால்கங்கிரி மருத்துவ மனையில் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அகதிகள் இங்கு வந்த பிறகு பிறந்த முதல் குழந்தை இதுதான். இந்தக் குழந்தைக்கு 'ஒரிசாயினி' என்று பெயரிட்டுள்ளனர்.

'ஒரிசாயினி' என்பதற்கு ஒரிஸாவின் ராணி என்று பொருள். (இ-4)

பொலீஸ் படைக்கு ஆள் சேர்க்கும்
## நேர்முகப் பரீட்சை மீண்டும் நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 28
றிசேவ் பொலீஸ் படைக்கு ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகள் மீண்டும் நாளை ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

கடந்தவாரம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் சுமார் ஆயிரத்து 200 பேர் தோற்றியிருந்தார்கள். நேர்முகப் பரீட்சை நடாத்திய விசேட குழு கொழும்பு திரும்பியது.

கொழும்பு தலைமைக் காரியாலய மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. ரி. மனோசரன் தலைமையிலான குழுவே நாளை முதல் நேர்முகப் பரீட்சைகளை நடத்த இருக்கிறது.

கடந்தவாரம் நடந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றிய ஆயிரத்து 200 பேரில் 75 பெண்கள் பெண் பொலீசுக்கும், 100 பேர் றிசேவ் சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கும் மீதியானவர்கள் பொலீஸ் கான்ஸ்டபிள் பதவிக்கும் தோற்றியிருந்தார்கள்.

### நாளைகொடியேற்றம்

சாவகச்சேரி ஏப் 28
கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். 'நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

களனி, ஜெயவர்த்தனபுர மற்றும்
# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு நெறிகள்!
### அனுமதி வழங்குவது குறித்து ஆணைக்குழு யோசனை

கொழும்பு, ஏப். 28
யாழ்ப்பாணம், களனி, ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகங்களுக்கு வெளிவாரி பட்டப்படிப்பு நெறிகளை நடத்த அனுமதி வழங்குவது பற்றி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆலோசனை நடத்திவருகிறது.

இதுதொடர்பாக எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் எதிர்பார்ப்புக்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிஹார சஞ்சீவிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் இடையில் அதிகமான நேரடித் தொடர்பு இல்லை. பதிவு செய்தல், பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புகள் நின்றுவிடுகின்றன.

ஆகையினால் மேற்படி பல்கலைக்கழகங்கள் வெளிவாரிப் பட்டப்படிப்பு நெறிகளை ஆரம்பிப்பதானால் அந்த மாணவர்கள் தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றன என்பதை அறியத்தரும்படியும் —

உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கான பாடத்திட்டங்களில் அதிகவித்தியாசம் இல்லாமல் பார்த்துக்கொள்ளும் படியும் ஆணைக்குழு இந்தப் பல்கலைக்கழகங்களைக் கேட்டிருக்கிறது.

இவ்வாறு பாடத்திட்டங்களில் இணைப்புக் காணப் படவேண்டும் என வலியுறுத்தப்படுவதற்குக் காரணம், வெளிவாரிப் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களுக்கு திறமை மற்றும் விசேட காரணங்களுக்காக உள்வாரியாகக் கற்க வழி செய்வதும் —

உள்வாரி மாணவர்களுக்கு (விசேடமாக பெண்களுக்கு) அவசியத்தை முன்னிட்டு வெளிவாரியாகக் கற்க வழி செய்வதும் ஆகும்.

இவ்வாறு வசதி செய்து கொடுக்கும்படி சகல பல்கலைக்கழகங்களும் கட்டாயப் படுத்தப்படும்.

இதே வேளை—

பல்கலைக்கழகங்கள் தமது தேவைகளுக்கும், மாணவர்களின் எண்ணிக்கைக்கும் ஏற்ப அதிகாரிகளையும், விரிவுரையாளர்களையும் நியமிக்க அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பழைய மரபுகளைக் கடைப்பிடிக்குமாறு பல்கலைக்கழகங்களை ஆணைக்குழு கட்டாயப்படுத்தாது.

— இவ்வாறு பேராசிரியர் அலுவிஹார மேலும் தெரிவித்தார். (ஒ-உ-2)

## தளபதி கல்கத்துக்கு டில்லியில் கடும் பாதுகாப்பு

புதுடில்லி, ஏப். 28
இலங்கையில் இந்திய அமைதிப்படையின் தளபதியாகப் பணிபுரிந்த லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துக்கு புதுடில்லியில் தீவிரப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டு இராணுவப் பொலீஸார் எந்த நேரத்திலும் அவரைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை அமைத்து செயல்படுகின்றனர்.

ஈழத்தமிழ் போராளிகளின் 'ஹிட் - லிஸ்டி' ல் ஜெனரல் கல்கத்தின் பெயர் இருப்பதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்தே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை என்று இந்தியப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில்—

அமைதிப்படை குறித்த செய்திகளை வெளியிட்டதற்காக இந்தியப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார் லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத். (உ-4)

6 வருடங்கள் தடைப்பட்டிருந்த
# முல்லைத்தீவு அபிவிருத்தி திட்டம்; விரைவில் ஆரம்பமாகும் சாத்தியம்
### நெதர்லாந்து அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஏப் 28
கடந்த ஆறு வருடங்களாகத் தடைப்பட்டிருந்த முல்லைத்தீவு ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

நெதர்லாந்து அரசின் கீழ் இயங்கும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி திரு பியட் பிலிக்கம் இந்தத் தகவலை சஞ்சீவிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் திரு. பிலிக்கம் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:-

நெதர்லாந்து அரசு கிராமிய மக்களுக்கு உதவும் வகையில் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையில் பல இடங்களிலும் நடைமுறைப் படுத்தி வருகிறது.

அந்த வகையில் கடந்த ஐந்து வருடங்களாக நுவரெலியாவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இதற்கென வருடாந்தம் 5 கோடி ரூபா செலவிடுகிறோம்.

இதே போன்ற திட்டம் ஒன்றை முல்லைத்தீவில் நடைமுறைப்படுத்த எமது அரசாங்கம் ஆறு வருடங்களுக்கு முன்னர் திட்டமிட்டது. அந்த திட்டத்துக்கு 50 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் என மதிப்பீடும் செய்யப்பட்டது.

அப்போது நிலைமை சீர் இல்லாத காரணத்தால் அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

தற்சமயம் நிலவும் சுமுக நிலை நீடித்தால் அந்த திட்டத்தை எமது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் - என்றார். (அ-3)

வன்செயல்களில் மரணமான
## திருமலை இ.போ.ச ஊழியர் குடும்பங்களுக்கு நஷ்டஈடு!

திருகோணமலை, ஏப்ரல் 28
கடந்தகால வன்செயல்களின் போது மரணமடைந்த இ. போ. ச. ஊழியர்களின் 10 குடும்பங்களுக்கு மொத்தம் 12 லட்சம் ரூபா அண்மையில் நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

திருகோணமலை டிப்போவில் வைத்து இந்த நஷ்ட ஈட்டுத் தொகைக்குரிய காசோலையைக் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் திரு. சி. சிவபாலன் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கினார்.

ஏனைய ஊழியர்களின் குடும்பங்களுக்கும் மிக விரைவில் இந்த நஷ்டஈடு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஏறக்குறைய 43 ஊழியர்களின் குடும்பங்களுக்கு இந்த நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளது. (ஒ-150)

### சுதந்திரத் தமிழ் ஈழம்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணைக்கமிஷன் அமைக்கப்படும் பட்சத்தில் இலங்கையில் இந்திய அமைதிப் படையினரின் அட்டூழியங்களைத் தாம் நிரூபிக்கத் தயார் என்றும் அப்போது அவர் கூறினார்.

பெரியமிளகுப் பாறை என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்திலும் வை. கோபாலசாமி பேசினார்.

தற்போது இலங்கையின் வடகிழக்கு மாகாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதென்றும்-

யாழ்ப்பாண மக்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர் என்றும் அப்போது அவர் சொன்னார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய அவர், ராஜீவை நம்பியவர்களுக்கு [illegible] போது ஏற்பட்டுள்ள நிலை [illegible] (உ)

### இன்று

கொழும்புத்துறை, ஏப் 28
சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய, விளையாட்டுக் கழகம் நடாத்தும் 24ஆவது வருட விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி. ப இரண்டு மணிக்கு நடைபெற உள்ளது.

### கொடியேற்றம்

மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இவ்வுற்சவம் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். தினமும் பகலில் விசேட சமயச் சொற் பொழிவுகளும் இடம்பெறும். (க-68)

★ ★ ★

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும்.

### மாணவர் ஆட்சேபம் தெரிவிப்பர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
யாழ் திறந்த பல்கலைக் கழகத்துக்கு இன்று காலை திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் வருகை தரும் போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவிப்பர் என்று அறிய வருகிறது.

திறந்த பல்கலைக்கழகத்துக்கென யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடத்தின் ஒரு பகுதியைச் சுவீகரித்தது தொடர்பாகவே இவர்கள் ஆட்சேபம் தெரிவிப்பர் எனத் தெரிய வருகிறது. (ஒ)

### மேலதிக அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ். செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் சண்முகநாதனுக்கு மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (உ-3)

### தெஹிவளையில 8 பெண்கள் கைது

கொழும்பு, ஏப்ரல் 28
கொழும்பு தெகிவளையில் உள்ள வீடு ஒன்றை நேற்று முன்தினம் இரவு சுற்றி வளைத்த தெகிவளை பொலீஸார் வீட்டிலிருந்த எட்டுப் பெண்களையும் மற்றொரு ஆணையும் கைது செய்தனர்.

இந்தப் பெண்கள் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதான ஒன்பது பேரும் நேற்று நண்பகல் கொழும்பில் உள்ள மாஜிஸ்ரேட் நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கடத்தப்பட்டார்

கொழும்பு, ஏப். 28
ஓய்வுபெற்ற முன்னாள் பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நாதன் வவுனியாவில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. பொன்னம்பலம் கந்தையா
(முன்னாள் கணக்காளர் S. M. மீரான்சாஹிப்)

77, ஸ்ரான்லி றோட்டைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் கந்தையா (முன்னாள் கணக்காளர் S. M. மீரான்சாஹிப்) அவர்கள் 27 – 04 – 90 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (28 – 04 – 90) சனிக்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

77, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (12967)

தகவல்:
க. சுப்பிரமணியம்

### திருமதி இராசமணி அருளம்மா நிக்கலஸ்
(இளைப்பாறிய ஆசிரியை)

9/1 மூளாய் ஒழுங்கை சுண்டிக்குளியைச் சேர்ந்த இராசமணி அருளம்மா நிக்கலஸ் 26 – 04 – 90 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற றெஜினோல்ட் அன்ரனி நிக்கலஸ் அவர்களின் அன்பு மனைவியும், ஏட்லி, ராணியா, ரிற்றியானா, நட்டாஷா, றட்லி, டெஸ்னா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருலோகநாயகி, சண்முகராஜா, ஜெயராஜா, றுஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காயத்திரி, குளோடி, ரேனுகா, ஆகியோரின் அன்புப் பேத்தியும், பிளசம், பூமணி, செல்லமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விக்ரர்மைக்கல் நிக்கலஸ் (திருகோணமலை) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்:
ஏட்லி நிக்கலஸ்

9/1, மூளாய் ஒழுங்கை,
சுண்டிக்குளி (3373)

### திருமதி சரஸ்வதி கதிரேசு

உடுவிலைச் சேர்ந்த திருமதி கதிரேசு சரஸ்வதி காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. கதிரேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரியம்மா, நவரத்தினம் (சிங்கள ம. வி. திருகோணமலை), செல்வரட்ணம் (அதிபர் உடுவில் மான்ஸ் ம. வி.), கனகநாயகம் (ஒப்பந்தக்காரர்), பத்மநாதன் (சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்), செல்வராசா அவர்களின் அன்புத் தாயாரும், நல்லநாதன், தங்கமலர், யோகவதி (கூ. ச. பரிசோதகர் மாங்குளம்), காளிதாசினி, ஜெயநாயகி, கௌசலாதேவி ஆகியோரின் மாமியும், ஐயாத்துரையின் சகோதரியும், ராஜமனோகரன், மனோரஞ்சன், ஜெயப்பிரகாஷ், காயத்திரி, கஜேந்திரன், திவாகரன். நிஷாந்தி, நிலானி, கேசவன், குமணன், வானதி, ஆரணி, ஆதவன், சாரங்கன் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 28 – 04 - 90 பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது உடுவில் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரேசு நவரட்ணம்

'சரஸ்வதி பவனம்'
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம். (12391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்-சித்தன்கேணி
கலை, வர்த்தகம்
வார இறுதி வகுப்புக்கள்
பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
அளவையியல் — திரு. கேசவன்
கணக்கியல் — திரு.ஸ்ரீகாந்தன்
தமிழ் — திரு.கணேஷ்
இ.நாகரிகம் — திருமதி அருள்நங்கை

சஞ்சிகை
28 - 04 - 1990 சனிக்கிழமை

நாவலர்-சித்தன்கேணி
ஆண்டு 9, 10 & O/L வகுப்புக்கள்
கணிதம் — திரு. குணம்
விஞ்ஞானம் — திரு. G. ஈசன்
திரு. J. R. சூரி
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கணேஷ்
ச. கல்வி — திரு. சண்

## கருத்துக் கலசம்

மதூரா

### சிந்தனைகள் பலவகை!

இன்னும் இரண்டு நாட்களில் மே தினம். தொழிலாளர் தினமாகிய அதனை பிராந்தியம், பிரதேசம், நாடு, இனம், மொழி ஆகிய எல்லா வரம்புகளையும் கடந்து உலகத்தின்சகலபகுதிகளிலும் உள்ள தொழிலாளர் பெருமக்கள் பரந்து கொண்டாடுவர்.

எட்டு மணித்தியால வேலை என்ற உரிமையை முன்வைத்து தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் வெற்றியைக் கொண்டாடவே மே தினம் எழுந்தது. தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப்போராடி வெற்றி கிடைத்த முதற் சம்பவமும் அதுவே. அதனை ஆரம்பமாகக் கொண்டு தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகின. வேலை நிறுத்தம், வெளிநடப்பு, பகிஷ்கரிப்பு என்ற பல போராட்ட வடிவங்கள் மூலம் தொழிலாளர்கள் இப்போதும் கோரிக்கைகளை வென்றெடுத்து வருகிறார்கள்.

அடக்கி ஒடுக்கப்படும் எவரும், தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்கள். இல்லையேல் அவர்கள் உரிமைகளை இழந்த அடிமைகளாகவே வாழவேண்டும். உரிமைகளுக்காகப் போராடவேண்டும் என்ற மன எழுச்சி மனிதனுக்கு அவசியம். அந்த மன எழுச்சி இல்லாதவன் பெயருக்கு மட்டுமே மனிதன்.

உணர்ச்சி இல்லாதவனை, உணர்வு இல்லாதவனை மரக்கட்டை என்கிறார்கள். ஆனால் மன எழுச்சி இல்லாதவர்களும் மரக்கட்டைகளே!

மனிதன் ஆறு அறிவுகள் உடையவன். சிந்தனாசக்தி என்ற அந்த ஆறாவது அறிவு தான் அவனை உலகின் ஏனைய ஜீவராசிகளிடம் இருந்து வேறுபடுத்தி நிற்கின்றது; உயர்த்தியும் வைத்திருக்கிறது.

அந்த ஆறாவது அறிவைப் பயன்படுத்தி மனிதன் ஏனைய ஜீவராசிகளை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான். ஆகக்குறைந்தது, தனக்கு அடுத்தவை என்று இரண்டாம் தரப் படுத்தி வைத்திருக்கிறான். இதனைச் சற்று ஆழமாக, அகலமாக, நுண்ணியதாக, நுட்பமாக ஆராய்ந்தால் மனிதனுக்கு எதிராகப் பல ஜீவராசிகள் உரிமைப் போராட்டம் நடத்தவேண்டி இருக்கும்!

அது நிற்க—

ஆறாவது அறிவுள்ள மனிதன் ஒவ்வொருவனும் தனது சிந்தனா சக்தியை வளப்படுத்தவேண்டும். சிந்தனா சக்தியை வளம்படுத்த எழுங்கால், புதிய சிந்தனைகள், கருத்துக்கள், எழுச்சிமிகு எண்ணங்கள் உதிப்பது இயல்பு.

எழுச்சியான சிந்தனையும், புரட்சிகரமான கருத்துகளும் இளவயதில் மொட்டவிழ்ந்து மலர்வதுண்டு. அதேபோன்று அறிவும், அனுபவமும் முதிர்ச்சி அடைந்து கனியும்போது, புரட்சிகரமான எண்ணக் கருக்கள் குறைந்து, நிதானமான, நேரிய, நெறிதழுவிய சிந்தனைகள் மலரும்.

சிந்தனையும், எண்ணமும் வயதுக்கு வயது வித்தியாசப்படுவதும் உண்டு. இளம் வயதினில் துடிப்பான, துடுக்கான சிந்தனைகளே அதிகம். வயது முதிர்ந்ததும் துடிப்பும்-துடுக்கும், அனேகமாக அடக்கமும் – அமைதியுமாக மாறுகின்றன.

# புராணங்கள் மூலம் வெளியாகும் மெஞ்ஞானம் கண்ட பிரபஞ்சம்!

"அருமையான உலகம்!" ஆத்மஞானி யோகர்சுவாமிகள் திருவாக்குகளில் இது ஒன்று.

எல்லோருக்கும் உலகம் அருமையானதாகத் தோற்றப்படுவதில்லை.

என்றும், எங்கும், அற்ப இன்பத்தையும் அதிக துன்பத்தையும் அனுபவிக்கின்ற மனிதர், உலகம் அருமையானதென்ற வாக்கியத்தின் தன்மையை உணரமாட்டார்கள்.

முற்றறிவும், முடிவில்லா ஆற்றலும், வரம்பிலின்பமும், கருணையே வடிவமான, கடவுள் ஒருவர்தான் இவ்வுலகத்தைத் தோற்றுவித்தார் என்பதை ஏற்றுக் கொள்ள நம்மால் முடியுமானால், இவ்வுலகின் அருமை எமக்கு விளங்காமற் போகாது.



புவனியிற்போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே, இந்தப் பூமி
சிவன் உய்யக்கொள்கின்றவாறு என்று நோக்கித்,
திருப்பெருந்துறையுறைவாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்படவும்,
நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்,
அவனியிற் புகுந்து எம்மை ஆட்கொள்ளவல்லாய்!
ஆரமுதே! பள்ளியெழுந்தருளாயே!

—என்று பரம்பொருளைப் பள்ளி எழுப்புகிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**அயனும் மாலும்**

இந்தப் பூமிதான் சிவன் ஆன்மாக்களை உய்யக்கொள்கின்ற வழி. இதை உணர்ந்து கொண்ட மலரவனும் திருமாலும் சுவர்க்க உலகத்தில் வெறுப்புக்கொள்கிறார்கள்.

புவனியில் எங்களுக்கும் ஒருபிறவி கிடைக்காதோ என்று தவிக்கிறார்கள்.

பூமியை நோக்க, எல்லா இன்பங்களையும் கொடுக்கும் தேவ உலகம் அவர்களுக்குப் பயனற்றதாகத் தோற்றுகிறது.

ஏன்? வீடு பேற்றுக்கு ஒரே ஒருவழி பூமியல்லவா?

அங்கேதான் பார்வதி சமேதராய்ப்புகுந்து இறைவன் மனிதரை ஆட்கொள்கிறான்.

'நாங்கள் தேவ உலகிலே பறந்து அவமே காலத்தைக் கழிக்கின்றோம். பூமியிற் பிறந்தோர் சிவபதமடைய, நாங்கள் இந்த அற்ப இன்பங்களுக்காகச் சுவர்க்கத்தில் இருந்து வீணாகக் காலம் போக்குவதா? இது எத்தனை நாளின்பம்? அடுத்து நரகத்துக்குப்போக 'வந்தாலும் வருமே! மனிதர் பெற்ற பாக்கியம் அல்லவோ பாக்கியம்! அவர்களை ஆட்கொள்ள வல்லவோ, தாமே பூவுலகத்துக்குட்புகுந்து அம்மையும் அப்பனும் தேடித்திரிகின்றார்கள்' — இவ்வாறு புலம்புகின்றார்களாம் அயனும் மாலும்.

இப்போது எப்படி இருக்கிறது நம் மூலகம்: அதன் அருமைப்பாட்டைப் பிரம, விஷ்ணு இருவரும் சொன்ன பிறகு யோகர்சுவாமிகளின் வாக்கியத்தில் ஐயுறவு கொள்ளலாமா?

**உலகம் என்பது என்ன?**

உலகம் என்றவுடன் பல விதமான பொருள்கொள்கிறார்கள்.

ஓர் ஆசிரியன் மாணவனைப் பார்த்து, 'உலகத்துக்குக் கர்த்தா யார்' என்று கேட்க— மாணவன் 'கடவுள்' என்று பதிலளிக்கின்றான்.

இருவரும் உலகம் என்று எதை நினைத்துப் பேசினார்கள்? உலகம் என்றால் எது? நாம் வாழுகின்ற இந்தச் சிறிய பூகோளமா? அல்லது எங்கள் கண்ணுக்கு ஓரளவு தென்படுகின்ற சூரிய மண்டலமா? அன்றி அப்பாலும் ஏதும் உண்டா?

இந்த ஆராய்ச்சி மனுக்குலம் உற்பத்தியான காலம் தொடக்கம் நடந்து கொண்டேயிருக்கிறது. இன்னும் உலகத்தின் ஆழ நீளத்தைப் பூரணமாக ஒருவரும் நிச்சயிக்கவில்லை.

ஆயினும் கீழைத்தேச மெஞ்ஞானிகளும் மேலைத்தேச விஞ்ஞானிகளும் துருவித் துருவி ஆராய்ந்து அறிந்தவற்றைக்கொண்டு நாம் சிந்தித்துப் பார்த்தால், உலகம் என்று நாம் பொதுவாகப் பேசிக்கொள்வது உண்மையில் இந்தப் பூகோளம் மாத்திரம் அல்ல.

உயிர்கள் வாழுகின்ற நம் பூலோகத்தைப்போல இன்னும் எத்தனையோ உலகங்கள் உண்டு. உயிர்களோ அனந்தம் (Infinite). ஆகவே அவைகள் வாழ்வதற்கு உகந்த பல உலகங்களை இறைவன் படைத்திருப்பான்.

> சித்தாந்தச் செம்மல் மு.வைரமுத்து அவர்கள் அண்மையில் சிவபதம் அடைந்தார்.
>
> அன்னார், சுத்த அத்துவித சைவசித்தாந்தம் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகள், கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. இன்னும் அவை அச்சில் ஏறவில்லை.
>
> அக்கட்டுரைத் தொகுதியில் இருந்து ஒன்று இங்கு அன்னாரின் நினைவாகப் பிரசுரிக்கப்படுகிறது.

நமது பூமியிருக்கின்ற ஓர் அண்டத்தில், பூமியைப் போன்ற பல உலகங்கள் இருப்பதாகவும் அவற்றுள் சிலவற்றின் பெயர்களும் புராணங்களிற் பேசப்படுகின்றன. நமது பூமிக்கு மேலேயும் கீழேயும் இவைகள் இருக்கின்றனவாம்.

மேலே உள்ள சில: புவர்லோகம், சுவர்லோகம், மகலோகம், சனலோசம், தவலோகம், சத்தியலோகம். பிரமலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் என்பன.

இவை எல்லாம் ஓர் அண்டத்தின் பகுதிகள். அண்டங்களோ கணக்கற்றவை. ஆகவே உயிர்கள் வாழும் உலகங்களுக்கும் கணக்குச் சொல்லமுடியாது.

கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்தபுராணத்தில், அண்டகோசப்படலத்தில், சூரபத்மனுக்கு சுக்கிராச்சாரியார் கூறியதாக வைத்து புராணாசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தும் பிரபஞ்சம் எப்படியானது, என்ன அளவினுடையது என்று பார்ப்போம்.

முதலில் பிரபஞ்சத்தின் பருமனைக் கணித்ததற்கு ஒரு வாய்பாடு சொல்கிறார் கச்சியப்பர்:

(சூரிய கிரகணம் ஒன்று ஒரு வீட்டுக்கூரையின் சிறியதோர் துவாரத்தின் ஊடாக உட்புகும்போது, மிகமெல்லியதொரு பொற்கம்பி போன்ற ஒளியில் அளவற்ற பரமாணுக்கள் (தூசிகள்) தோன்றும். அப்படியான பரமாணுவின் ஒன்றின் மூலம் தான் மூல அளவு.)

நாம் வாழும் பூமியை உள்ளடக்கிய ஓர் அண்டத்தின் நீளம் நூறுகோடி

பரமாணுக்கள் ஏழு கொண்டது — ஒரு மயிர்நுனி
மயிர்நுனி எட்டுக்கொண்டது — ஒரு ஈர்
ஈர் எட்டுக்கொண்டது — ஒரு நெல்விடை
நெல்விடை எட்டுக்கொண்டது — ஓர் அங்குலம்
அங்குலம் 24 கொண்டது — ஒரு முழம்
முழம் நான்குகொண்டது — ஒரு தண்டம்
தண்டம் ஈராயிரம்கொண்டது — ஒரு குரோசம்
குரோசம் நான்கு கொண்டது — ஒரு யோசனை

யோசனை; அகலம் நூறு கோடியோசனை. ஒவ்வொரு அண்டமும் ஏறக்குறைய வட்டவடிவினது.

கச்சியப்பரின் கற்பனை இது என்று நாங்கள் நினைத்துவிடலாம். பரமசிவனின் இராச்சியத்திற்கு எல்லை கிடையாது கிரகிக்க முடியாத ஒன்றைச்சொல்லி எங்களைச் சிந்திக்கவைக்கிறார் கச்சியப்பர்.

இனி வேதாகமங்களிலும் அவற்றின் வழிவந்த மறு நூல்களிலும் படைப்பைப் பற்றிப் பேசும்போது, அண்டகோசங்களைக் குறித்துப் பலவாறாகப் பேசப்படுகின்றன.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் திருவண்டப் பகுதி என்னும் அகவலைப் பாட எடுத்த எடுப்பிலேயே-

'அண்டப் பகுதியின்
உண்டைப்பிறக்கம்
அளப்பருந்தன்மை
வளப்பெருங்காட்சி
ஒன்றனுக்கொன்று
நின்றெழில்பகரின்
நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன' —

என்று தொடங்குகிறார்.

இதன் பொருள்;

'திரண்டு உருண்டை வடிவினவாகிய அண்டங்களின் தொகையையும், அவற்றின் அளத்தற்கரிய தன்மையையும், அவற்றின் வளம் பொருந்திய தோற்றத்தினையும், அவை ஒன்றுக்கொன்று மேம்பட்டிருக்கும் சிறப்பையும் சொல்லப்புகின், அவை நூற்றொரு கோடியின் மேற்படப் பரந்து அளவிலும், பருமனிலும், தன்மையிலும் கணக்கிட முடியாதனவாய் உள்ளன' — என்பதாம்.

தில்லை மூவாயிரவரும் பார்த்து நிற்ப, சிற்றம்பலத்திலே, தான் பாடிய திருவாசகத்தின் பொருள் இதுவே என நடராஜப்பெருமானைச் சுட்டிக்காட்டித் தன் பூதவுடல் ஞானப்பிழம்பாகிச் சோதியுட் சோதியாய் இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருமையை உடையவர் மாணிக்கவாசகர்.

இத்தன்மையைத்தாய அண்டங்களை, அவற்றைத் தோற்றுவித்த முதல்வனுடன் ஒப்பிட்டுப்பார்க்க ஆசைப்பட்ட மணிவாசகர் தொடர்ந்து

''இல்நுழைகதிரின் துன்
-அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்'

என்று பாடினார்.

நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தனவாகிய அண்டங்களை எல்லாம், அவற்றைத் தோற்றுவித்த கர்த்தாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை, வீட்டுக்கூரையிலுள்ள சிறியதொரு துவாரத்தின் வழியே உட்புகும் சூரியனின் கதிரில் நடமாடும் நுண்துகள்களைப் போற்சிறியன என்று அழகுபட விளக்குகின்றார், மணிவாசகர்.

எண்ணுக்கடங்காத அண்டங்கள் இறைவனருள் வெளியிலே நுண்ணிய அணுக்களை ஒத்துச் சஞ்சரிக்க, அவற்றை எல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு, அவற்றிற்கு அப்பாலுக்கப்பாலுமாயுள்ள பரம்பொருளின் பெருமையைச் சித்தரிக்கிறது இம்மணிவாசகம்.

இன்னொரு பெருந்தகையான தாயுமான சுவாமிகள்–

'தன்னருள் வெளிக்குள்ளே
அகில அண்ட
கோடியெல்லாம்
தங்கும்படிக்கு இச்சை
வைத்து உயிர்க்கு
உயிராய்த்தழைத்து எது?

—என்று கேட்டு அதற்கு விடையும் சொல்கின்றார்:

''அதுவே கருத்திற்கு இசைந்த'' கடவுள்.

இதுகாறும் கூறப்பட்டவற்றைக்கொண்டு பிரபஞ்சம் எனப்படுவது எப்படியென்பதை நாம் புராணவாயிலாக ஓரளவு அறிந்துகொண்டோம் அல்லவா?

- சித்தாந்தச் செம்மல் மு. வைரமுத்து -

## தெரியுமா சேதி?....

☐ சினன்குடாவில் இருந்து காணாமற்போனவர் சில நாட்களின் பின்னர் மொரீஷியஸில் இருப்பதாகச் செய்தி வெளியானது. அவர் குறித்து இப்போது புதிய தகவல் கிடைத்திருக்கிறது. அரசியல் தஞ்சம் கோருவதற்குப் பொருத்தமான – பாதுகாப்பான- இடம் தேடுகிறாராம். அநேகமாக சுவீடனில் அரசியல் தஞ்சம் கோருவார் என்று ஒரு தகவல்.

☐ முன்னாள் எம். பிக்களான வன்னிநகர்ச்சிங்கமும் காவலூர்க் காவலரும் இன்று கனடாவில் அரசியல் தஞ்சம் புகுந்திருக்கின்றனராம். அங்கு அவர்கள் இருவரும் தமிழ் இளைஞர்களுக்கு கடன்கொடுப்பதற்காக வட்டிக் கடை நடத்துகிறார்களாம். வடக்கின் தற்போதைய எம் பி ஒருவர் காதோடுகாதாகத் தெரிவித்த தகவல் இது.

☐ சபையை இப்போது ஆளும் நளினமானவர்பற்றி கடந்தவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். இவ்வார நிகழ்வுகள் அதனை ஊர்ஜிதம் செய்ததை அநேகர் உணர்ந்திருப்பர்.

வடக்கிற்கு வந்த நளினமானவரை ஒருவரும் 'சீ' என்றுகூட ஏறெடுத்துப் பார்க்கவில்லையாம். வந்திறங்கிய இடத்தில் முடங்கிவிட்டு வந்தவர்களுடன் திரும்பவேண்டியதாயிற்று.

மீண்டும் கூறுகிறோம்.

வடமராட்சி 'விடுதலை நடவடிக்கையின்' போது, அவர் தலைமை வகித்து மேற்கொண்ட அடாவடித்தனங்களை தமிழர்களும், அவர்களது தலைமையும் இன்னும் மறக்கத்தயாரில்லை யாம்.

☐ அன்புதாஸர் தாம் திடீர் பொதுத்தேர்தலுக்குத் தயாராவதுபோல ஒரு போக்குக் காட்டிப்பேசி இருக்கிறார் அல்லவா?

இது குறித்து முன்னணித் தமிழ் அமைப்பின் மூத்த கலாநிதி, உருவத்தில் சிறுத்த அமைச்சரிடம் விளக்கம் கேட்டாராம். அமைச்சர் கூறிய பதில் என்ன தெரியுமா? ''பெரியவர் அப்படித்தான். எம். பி.மாரையும் அமைச்சர்களையும் மிரட்டி ஒழுங்குபடுத்துவதற்காக அடிக்கடி இப்படி எச்சரிக்கையுடன் கூடிய அறிவிப்புக்களை விடுப்பது அவர் வழக்கம். அதில் ஒன்றுதான் இத்திடீர்த் தேர்தல் மிரட்டல்''

''இப்போதுள்ள நிலையில் தெற்கில் தேர்தலா? படையினரின் இராணுவ நடவடிக்கைகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி, வேலையில்லாப் பிரச்சினை, பணவீக்கம், விலைவாசி ஏற்றம், தீவிரவாதம் முதலியவற்றுக்கு மத்தியில் மீண்டும் தேர்தலா? நினைத்துப்பார்க்கவே முடியாது'' — என்று ''நீதி'' கூறினாராம் அந்த அமைச்சர்.

☐ நகரில் போக்குவரத்துக்கு நிற்கும் 'பொடியன்' பற்றி ஒரு தகவல். கூட்டமாய் நின்றுகொண்டு புதுப் புது விதமாய் எல்லாம் போக்குவரத்து ''சிக்னல்'' காட்டுகிறார்களாம். பக்கத்தில் ஒரு 'மியூஸிக்'கும் சத்தமாகப்போட்டுவிட்டால் அவர்கள் 'சிக்னல்'செய்வது பரதநாட்டியம்போல் இருக்கும் என்கிறார் ஓர் அன்பர். என்றாலும் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்கிறது ஒரு பக்கம்.

- தக்ஷன்

# அன்னை திரேஸாவின் அடிச்சுவட்டில்...

இமயமலை அடிவாரத்தில் உள்ள குளுகுளு நகரம் டார்ஜீலிங் நோக்கி......

கோடைகால வெப்பத்தில் இருந்து தப்புவதற்காக ஆயிரக்கணக்கானோர் அந்த ரயிலில் சென்றுகொண்டிருக்கின்றனர்.

அவர்களிலே ஒருவராக முப்பத்தைந்தே வயதான சகோதரி அக்னேஸ்.

சமயப்பணி புரிவதற்காக அல்பேனியாவில் இருந்து கல்கத்தா வந்தவர் அவர்.

ரயில் டார்ஜீலிங் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது...

சகோதரி அக்னேஸ் மனமோ வேறொரு மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கிறது.

ஏரிப்புற வாசஸ்தலத்திற்கு போவதை நிறுத்தி, சேரிப்புற மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபடு! — இப்படி ஓர் உத்தரவு சகோதரி அக்னேஸில் உள்ளுணர்வை தட்டியது.

ரயிலின் பயணம் தடைப்படவில்லை. ஆனால் சகோதரியின் ரயில் பயணம் தடைப்பட்டது. அன்றே ஆரம்பித்தது அவரது சமூகப்பணி.

இது நடந்தது 1946 ஆம் ஆண்டில்.

**பாதை திரும்பியது**

கல்கத்தாவுக்குத் திரும்பிய சகோதரி அக்னேஸ், 1948இல் வயோதிபர் விடுதி ஒன்றின் சின்னஞ் சிறிய அறையில் தனது வாழ்வை ஆரம்பித்தார்.

இரண்டு ஆண்டுகள் கழித்து வத்திக்கானின் அனுமதியுடன்



அன்னை திரேஸா

'தர்மதூதர்கள்' என்ற அமைப்பு ஒன்றைத்தொடக்கினர். இது நடந்தது 1950 இல். கடுமையா[illegible]

சகோதரி அக்னேஸை அன்னை திரேஸாவாக்கியது.

40 ஆண்டு கால சமூகப் பணியின் முடிவில் உடல்நலக் குறைவு காரணமாக அன்னை திரேஸா இவ்வாண்டு ஓய்வு பெறுகிறார்.

சமூகசேவை நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் எல்லாம் அன்னையின் பணியைப்பாராட்டி விருதுகள் அளித்துக் கௌரவித்தன.

உண்மையில், அன்னைக்கு அவ்விருதுகள் பெருமை தேடிக்கொடுக்கவில்லை; விருதுகளே பெருமைபெற்றன.

1979 இல் நோபல் சமாதானப் பரிசு அன்னைக்கு வழங்கப்பட்டது.

பரிசு பெறுபவர்களுக்கு நோபல் நிறுவனம் பெரிய விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவிப்பது வழக்கம்.

அன்னை விருந்துபசாரத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

'அதற்கு செலவாகும் பணத்தை என்னிடம் தாருங்கள். கல்கத்தாவில் உள்ள [illegible] அப்பணத்தைப் பயன்படுத்துவேன்'

—அன்னையின் இந்த இரங்கலை நோபல் நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

அல்பேனிய வர்த்தகர் ஒருவருக்கு யூகோஸ்லேவியாவில் 1911 ஆம் ஆண்டில் பிறந்தார்.

12 வயதிலேயே 'சமூகப் பணி செய்வேன்' என்று உறுதி பூண்டார். 19 வயதில் இந்தியா சென்றார்.

'என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது நான் அல்லன்; அந்த இறைவனே. இந்தச் சமூகப்பணிக்கு நான்தான் காரணம் என்றால் என்னுடன் இத்தப்பணி முடிந்துவிடும்.

'இறைவன் இட்ட கட்டளையைத்தான் நிறைவேற்றி வருகின்றேன் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும். ஆகவே இப்பணி எனக்குப் பின்னரும் தொடரும்'—

இப்படிக் கூறுகிறார் அன்னை.

- தீபன்ராஜா -

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநாள் பரிசு!



எல்லோரும் மேற்குத் திசையையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தனர். தன் கண்ணுக்கு முதலில் தென்பட்டுவிட்டதா என்ற ஆர்வத்தால் உயரமான இடங்களிலும் ஏறி நின்று பார்த்தனர்.

மேகக்கூட்டம் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டிருந்தது. அண்ணாந்து பார்த்துக் கழுத்து வலித்தவர்கள் தலையைக் கீழே தொங்கவிட்டனர்.

நேரம் ஆகஆக... ஆவலின் அலைகள் கரைமோதின. நீல வானம் பளிச்சென்று தெரிந்தது.

அதோ! அதோ!! கையை நீட்டிக்கொண்டு களிப்புடன் கூறினான் ஒருவன்.

எங்கே! எங்கே!! என்று கேட்டனர் மற்றவர்கள். அதோ! அந்தத் தென்னையின் பழுத்த ஓலையின் முனையின் வளைந்த கோடு போல் தெரிகிறதே! என்று கூறியதும் ஆமாம்! ஆமாம்!! என்ற ஒலிவானத்தை முட்டியது.

பிறை பார்த்துவிட்டோம்! பிறையைப் பார்த்துவிட்டோம்!! என்ற சிறுவர்களின் கூச்சல் வீட்டுக்குள்ளிருந்தவர்களையெல்லாம் வெளிவரச்செய்தது.

பிறை சிறிது நேரத்தில் மறைந்தது. ஆனால் ஊரெங்கும் களிப்புப் பெருகியது. விடிந்தால் பெருநாள் ஒரு மாத உபவாசத்தின் முடிவு. உண்ணா நோன்பிருந்த உயரிய தியாகத்தின் பரிசுதான் இப்பெருநாள். ஈகையும் இறைவணக்கமும் சேர்ந்த 'ஈதுல்பித்ர்'

அல்லாஹு அக்பர் தக்பீர் ஒலி பள்ளிவாசலின் ஒலிபெருக்கி மூலமாக ஊரெல்லாம் உற்சாகமடையச்செய்துகொண்டிருந்தது. தக்பீர் ஒலியினால் தெருவெல்லாம் மணத்துக்கொண்டிருந்தது. சிறுவர்களின் களிப்புக்கரை புரண்டோடியது. விடிந்தால் உடுக்கவிருக்கும் புத்தாடைகளைத் தொட்டு தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சமீனா நோன்பு திறந்தாயா? என்று கேட்டுக்கொண்டு ஜமீல் வீட்டுக்குள் நுழைந்தார். பெருநாள் மகிழ்ச்சி அவர் குரலிலும் தொனித்தது.

'ஓம் வாப்பா நோன்பு திறந்துவிட்டேன். தொழப்போறேன்' என்று கூறிவிட்டு சமீனா கிணற்றடியைநோக்கி நடந்தாள். அவள் குரலில் உற்சாகம் இல்லாததை அறிந்துகொண்டார் ஜமீல்.

ஒளுச் செய்துகொண்டு திரும்பிவந்த மகளை ஜமீல் உற்றுப்பார்த்தார்.

மகள் முந்தானையால் முகத்தைத் துடைக்கிறாளா? அல்லது கண்ணீரைத் துடைக்கிறாளா? என்பது தெரியாமல் ஜமீல் திணறினார்.

இந்தவருடம் மாமி வீட்டுப் புடவை எனக்குக் கிடைக்காதா? நினைத்த மாத்திரத்தில் அவளையறியாமலே விம்மியழுதுவிட்டாள்.

'ஏன் மகளே அழுகிறாய்? நல்லநாளும் பெருநாளும் அழலாமா? அழாதே மகள்! போய்த் தொழுதுவிட்டு அல்லாஹ்விடம் உன் விருப்பத்தைக் கேள்!' —என்று கூறிப் பெருமூச்சு விட்டபடி வெளியேறினார் ஜமீல்.

'எங்க வீட்டு மருமகள் நாங்க வாங்கிக்கொடுக்கும் சேலையைத்தான் பெருநாளில் உடுத்த வேண்டும்' என்று ஒவ்வொரு பெருநாளைக்கும் சேலைவாங்கிக்கொண்டிருந்த மாமியைக் கண்டு ஒரு வருஷமாகுது. மாமா போகவேண்டாம் என்று தடுத்துவிட்டாராம். நினைக்கும்போதே சமீனாவின் கண்ணீர் மீண்டும் பெருகியது.

சமீனா ஏழையாய்ப் பிறந்தாலும் அழகில்அவள் செல்வமுடையவளாயிருந்தாள். பெண்கள்கூட அவள் அழகைக்கண்டு பொறாமைப்படுவார்கள். கொஞ்சமாகப் படித்திருந்தாலும் பண்புடையவள். முகத்திரை விலகினால் முகில் கூட்டத்தினின்றும் விடுபட்ட மதி போன்ற முகத்தழகி. களங்கமற்ற காட்டுரோஜா.

● ● ●

'இந்தாப்பா கமால் படித்துப் பட்டமும் வாங்கிவிட்டாய். காலா காலத்தில் கலியாணத்தையும் செய்துவிட வேண்டும் என்று பார்க்கிறேன். நல்ல அந்தஸ்தில் உள்ள இரண்டு இடங்களில் பெண்பார்த்திருக்கிறேன். அடுத்ததெரு ஆதம்லெப்பே அரை இலட்சமும் பங்களாவும் தாறேன் என்கிறார். அடுத்த ஊர் அக்பர் சாஹிப் பத்தாயிரம் ரூபாவும் புதுக்காரும் தருகிறேன் என்கிறார். எது உனக்கு விருப்பமோ அதைச் சொல்லு! கொஞ்சநஞ்சம் கூட்டிக்கேட்டுக் காரியத்தை முடிப்போம்' என்று கமாலிடம் அவன் வாப்பா கேட்டார்.

வாப்பாவின் பேச்சைக் கேட்டு கமால் வேதனையடைந்தான். இத்தனை செல்வத்தையும் அல்லாஹ் வழங்கியிருந்தும் வாப்பாவின் பேராசை போகவில்லையே! என்று ஆத்திரப்பட்டான்.

பட்டம் பெற்றுவிட்டதால் பணத்தாசை பிடித்து அலையும் பைத்தியக்காரனல்ல கமால். பெண்வீட்டில் பணம் வாங்கி பேடி என்னும் பட்டம் வாங்குவதை வெறுத்தான் அவன். வாழ்வை வளம் பெறச் செய்யும் துணை வேண்டும் என்னும் தத்துவத்தைப் பின்பற்றுபவன் அவன்.

பணத்திற்காக பெண் தேடுவதை காதால் கேட்கவும் விரும்பாத அவனுக்கு தன் தந்தையின் கேள்வி ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றுவது போல உணர்ந்தான்.

'வாப்பா மாமாமகள் சமீனாவுக்கு என்ன குறை?' என்று கேட்டான்.

'என்ன சொன்னாய்! மாமாமகளா? சமீனாவா? அவள் அப்பன் அந்தஸ்தென்ன? என் அந்தஸ்தென்ன? என் ஊட்டுக்கு மருமகளா வர அவளுக்கு என்ன அந்தஸ்து இரிக்கி. நம்ம வீட்டு முற்றத்தை மிதிக்கவும் அவளுக்கு அந்தஸ்தில்லையே! அவளுக்குக் காதிலைபோட மின்னி நான்தானே வாங்கிக்கொடுத்தேன். ஏன்டா அந்தப் பிச்சைக்காரியின் பெயரை எடுக்கிறாய்? நான் சொன்ன இரண்டு பேரிலே ஒரு பெண்ணைப் பார்த்துச் சொல்.

**- எம். எஸ். சித்திக் -**

இந்த ஹஜ்ஜுப் பெருநாளைக்கு முடித்துவிடுவோம்' என்று கமாலின் வாப்பா கோபத்தோடு கூறினார்.

செல்வச் செருக்கால் தந்தை நிலை இழந்து நிற்பதை உணர்ந்தான் கமால். ஒருவனுக்குச் சிறந்த செல்வம் நல்ல குணமுள்ள மனைவியே.

'ஒரு பெண்ணை மார்க்கம், அழகு, குடும்ப அந்தஸ்து, குணம் ஆகிய காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் நல்ல குணமுள்ள மார்க்கப்பேணுதலுள்ள பெண்ணையே தேடுங்கள்' என்று நபியவர்கள் கூறியிருப்பதையும் அவன் படித்துள்ளான்.

இதைவாப்பாவிடம் எடுத்துக் கூறினான்.

'அதிகப் பிரசங்கிவாயை மூடு! அழகாம், அறிவாம் எதுக்குடா இதெல்லாம்? பணம் இல்லாதவன் பிணத்திற்குச் சமன் தெரியுமாடா? நாலுபேரைப் போல் நல்ல அந்தஸ்திலே இருக்கனும் என்று சொன்னா உபதேசமா பண்ணுகிறாய்?' என்று வாப்பா கூச்சலிட்டார்.

அவர் கண்கள் சிவந்து மீசை துடித்தது. ஆத்திரம் அவரை ஆட்டியது.

வாப்பா மகன் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த இல்லத்தரசியின் உள்ளம் வாடியது. மகன் பக்கம் பேசுவதா? கணவன் பக்கம் பேசுவதா? என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தாள்.

சிறிதுநேரத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வேலைகளைக் கவனிக்கக் கலைந்துவிட்டனர்.

கமால் ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன்போல வீட்டைவிட்டு வெளியேறினான்.

இரவு பன்னிரண்டு மணி. பள்ளி வாசலில் ஒலித்துக்கொண்டிருந்த தக்பீர் ஒலியும் நின்றுவிட்டது. சிறுவர்களும் நாளைப் பெருநாள் உடுப்புக்களை அணைத்தவாறே உறங்கி விட்டனர்.

தெருவில் தையல் காரரின் கடைகள் மட்டும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தன.

சமீனா தூக்கம் வராமல் பாயில் புரண்டுகொண்டிருந்தாள்.

தெருவிளக்கின் ஒளி அவள் வீட்டுக் கூரையின் ஓட்டையினூடாக மண்சுவரில் பட்டு வீட்டின் அவலத்தை எடுத்துக் காட்டியது. பெருநாளைக்கென்று கழுவி வைத்த பிடவை கசங்கிவிடும் என்ற பயத்தில் வெறும் சட்டை பாவாடையோடு படுத்துக்கொண்டிருந்தாள்.

திண்ணையில் அவளின் வாப்பாவும் இதேமாதிரித் தூக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தார்.

தங்கள் வீட்டு வாசலில் ஒரு லொறி வந்து நிற்பதைக் கண்டும் காணாதது போல் அவர் புரண்டு கொண்டிருந்தார்.

அந்த லொறியிலிருந்து கட்டில், மெத்தை, விரிப்பு, 'இன்ப இரவு என்று எழுதப்

சஞ்சீவி சிறுகதை

பட்ட உறையுடன் கூடிய தலையணை ஆகிய இன்னும் பல சாமான்கள் அங்கு இறக்கப்படுவதையும் அவதானித்தார்.

இப்பொழுது அவர் எழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். அவர் வீட்டு வாசலில் தான் எல்லாம் நிறைந்திருந்தது. ஒன்றும் புரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கும் போது சில இளம் பெண்களுடன் தன் தங்கை கமாலின் உம்மா வருவதைப் பார்த்தார்.

வீட்டுக்கு வந்த கமாலின் தாயார் திண்ணையில் இருப்பவரைக் கவனிக்காது மகள் சமீனா! சமீனா!! என்று கதவைத் தட்டினாள்.

தூக்கம் வராது புரண்டுகொண்டிருந்த சமீனா மாமியின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வீட்டுக்குள் நுழைந்த கமாலின் தாய் சமீனாவைக் கட்டிப்பிடித்து அணைத்துக்கொண்டாள்.

பெருநாள் அன்று அந்த ஓலைக் குடிசையிலிருந்த ரேடியோவில் தக்பீர் முழக்கம் கேட்டுக் கொண்டிருந்ததைத் தெருவில் போவோர் வியப்புடன் கவனித்தனர்.

(யாவும் கற்பனை)

★

## நன்றி

எம்மூரில்
நாய் அதிகரித்துவிட்டது
இருந்தும்
நன்றியுணர்வு
அதிகரிக்கவில்லை.

— ஆதி

# கலகலப்பூட்டும் கலைஞர்!

பலகுரல் மன்னராகத் திகழும், ஈழத்துச் சதன் என்றழைக்கப்படுபவர் திரு. ஆறுமுகம் சோமசேகரம்.

பல்வேறு வகைப்பறவைகள், மிருகங்கள் போன்று ஓசைகள் எழுப்பி சிறுவர்களைச் சிரிக்க வைக்கின்றார்.

இயந்திரங்கள் மற்றும் பஸ், ரயில்கள், வண்டில் போன்றவை எழுப்பும் ஓசைகளையும் தனது வாயினால் எழுப்பும் வல்லமை பெற்ற ஈழத்துச் சதன், மூன்று அடி உயரமானவர், குறுகுறுத்த பார்வை, துடிப்பான தோற்றம் கொண்டவர்.

பல சிங்களப் படங்களுக்கு பின்னணிக் குரல் வழங்கிய இவருக்கு 'நன்குறுல்லா' (தங்கப்பறவை) என்று சிங்களத்திலும் 'சோட்டி சோமா' என்று ஆங்கிலத்திலும் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர் அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

● பலகுரலில் ஓசைகளை வெளிப்படுத்தும் முயற்சியில் ஏன் ஈடுபட்டீர்கள்?

''உயிர் ஒன்று. உருவத்தில் தான் பல மாறுதல்கள் உள என் சிறுவயதில் சமயபாடத்தில் படித்தேன். ஓசை எல்லா உயிர்களுக்கும் ஒன்று. ஆனால் உருவத்துக்கேற்ப உயிர் ஓசைகள் மாறுபடுகின்றன என உணர்ந்தேன். ஒருவரே ஏன் எல்லா ஓசைகளை வெளிப்படுத்த முடியாது என என்னுள் எழுந்த கேள்விக்கு விடையாக இன்று பல குரல் கலைஞராக விளங்குகின்றேன்.

'ஐந்து வயதில் இதனை நான் தொடங்கியபோது நண்பர்களுக்கு வேடிக்கையாக அமைய, எனக்கு உற்சாகமாகியது.

அந்த உற்சாகத்தின் பிரதிபலிப்பு பிற்காலத்தில் எனக்கு இத்தொழிலில் புகழையும், வாழ்க்கைக்கேற்ற ஊதியத்தையும் தேடித்தர வாய்ப்பளித்தது.

● பலவித ஓசைகளை எழுப்புவதில் உங்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதில்லையா?

ஏன் இல்லை? நிகழ்ச்சி நடத்தும் நாள் காலையில் சாப்பிடக்கூடாது. நிகழ்ச்சியின்போது சகல நரம்புகளும் விரைவாக செயற்படுகின்றன. நிகழ்ச்சியின்பின் குளிர் நீர் அருந்தக்கூடாது. சூடான பானமே அருந்த வேண்டும். அடிவயிற்றிலிருந்து ஓசை வெளிப்படுத்துவதால் உடம்பை நன்கு கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கவேண்டும்.

● நிகழ்ச்சிகளின் போது மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததுண்டா?

ஒருமுறை ஹட்டனில் காகம், சேவல், நாய் போன்று குரல் எழுப்பிக் காண்பித்தேன். எனது குரலை உண்மையான குரல் என எண்ணிய சில நாய்கள் கூட்டத்துள் புகுந்துவிட்டன. நாய்



ஈழத்து சதன்

களைக் கண்டவுடன் உற்சாகத்துடன் அவை கடிபடுவது போலக் குரல் எழுப்பினேன். அப்போது அங்கிருந்த நாய்களில் ஒன்று கோபத்துடன் என்மீது பாய்ந்து கடித்துவிட்டதை என்னால் மறக்கமுடியாது.

பல இடங்களில் காகங்கள் ஓடிவந்து என்னுடன் கூட இணைந்து கரைவதையும் என்னால் மட்டுமல்ல ரசிகர்களாலும் மறக்கமுடியாது.

● இக்கலையை வளர்ப்பது குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?

வேடிக்கைக் கலையாக இதனைக் கொள்ளாமல் கலை உணர்வுடன் நோக்க வேண்டும்.

கல்வித்திட்டத்துக்கமைவாக்கி பாடசாலைகளில் இதனை பயிற்றுவிக்கவேண்டும். இக்கலையை வளர்ப்பதன்மூலம் வாழ்க்கையை பயனுடையதாக்கி பணம்தேட முற்படவேண்டும். ★

**- பேட்டி: வி. பி. சர்மா -**

# மாதம் தான்! மாது அல்ல!!

புத்தாண்டு வாழ்த்துரைக்க வருக என்று
தொலைக்காட்சி நிலையத்தார் தூது விடுத்தார்.
''தூ! தூ!! இவன் எதற்கு?'' என்ற காலம் மாறி
தூதுவிடுக்கும் காலம் தோன்றியது விந்தையன்றோ?

★ ★ ★ ★

இங்கிருக்கும் கவிஞர்களின் அரங்கிற்கு
நான் தலைவனாம்! வேடிக்கை! நல்ல வேடிக்கை!
இலக்கணமெனும் தாய்ப்பால் அருந்தாமல் – பசி
எடுத்தபோதெல்லாம் புதுக்கவிதை புட்டிப்பால்
குடித்திடும் குழந்தை நான்!
எனை அழைத்து கவியரங்கத் தலைமை ஏற்கச்
செய்துள்ளார்
ஏன் என்று யோசித்துப் பார்த்தபோது – நான்
''வைகாசி'' என் கவிதைக்கென கேட்கமாட்டேன்–
வைகாசி!
''வை – காசி'' என் கவிதைக்கென கேட்க –
மாட்டேன் – அதனாலே
சித்திரைக்கு வாழ்த்துச்சொல்ல அழைத்துள்ளார்கள்!
கவியரங்கில் பங்கு நீ பெற்றந்த சித்திரைப்
பெண்ணுக்கு ஆசி கூறென்றார்!
பங்குனி பெற்ற அந்த சித்திரைப் பெண்ணுக்கு
ஆசி கூறென்றார்!
புரட்டாசி கூறமாட்டேன் என்பதாலே,
''புரட்டு'' ஆசி கூறமாட்டேன் என்பதாலே
துணிந்தழைத்தார் போலும்!
நான் வரும் போது!
மார்கழியாத் தாவணியுடன்
(காற்றாலோ, கையாலோ விலகாத தாவணியுடன்)
மார் கழியாத்தாவணியுடன் ஆவணிப் பெண்ணாள்
மரபு வழி குடும்ப மங்கை; எனைப் பார்த்து
ஆ நீயா? என்று... (ஆனி)
ஆடித்தீர்த்தாள் தை தை என்று அனல் கொட்டும்
வழிகாட்டி!
எதற்காக?
தை முதல் நாள் தான் தமிழ்ப்புத்தாண்டாம் –
அதற்காக
உண்மைதான் எனினும் அவள் உருகாமல்
இருப்பதற்கு நான் சொன்னேன்,
தமிழர்க்கு ஓராண்டில் இருபுத்தாண்டு வருவதால்
இரட்டிப்பு மகிழ்ச்சிதானே என்று!
தளிர்ப்பெண்ணின்குளிர் முகத்தில் நிலவு கண்டேன்!
தழுவிக் கொண்டாள்! திகைத்தீர்மேலும்,
மற்றொருத்தியா என்று—
மாதம்தான்! மாதல்ல!!

— கலைஞர் கருணாநிதி

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தார் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் கவியரங்கு ஒன்றை நடத்தினர்.

அப்போது திரு. கருணாநிதி பாடிய கவிதையில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.




பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்



பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்

1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - கவசாக்கி பஜாஜ் கே.பி.KB.100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்
69, அயிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

JWT RP 20929


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோரயுத்தத்தின் வடுக்களை மறைக்க
# வியட்நாமியர் நடத்தும் பசுமைப் புரட்சி

● வீர வியட்னாமியர்கள் அமெரிக்க வல்லரசை புறமுதுகிட்டு ஓடவைத்து வீர காவியம் சமைத்தனர்.

அந்தப் பத்தாண்டு கால யுத்தத்தில்...

சுமார் 20 லட்சம் மக்கள் உயிரிழந்தனர்.

ஒரு கோடி 30 லட்சம் தொன் குண்டுகளை வியட்னாம் மீது அமெரிக்கப்படைகள் வீசியது.

விடுதலைப் போராளிகள் மறைந்து இருந்த காடுகளை அழிப்பதற்காக ஒரு கோடி 58 லட்சம் கலன் நச்சுத் திரவங்களை வியட்னாம் மீது அமெரிக்க விமானங்கள் விசிறியடித்தன.

குண்டுகள் போடப்பட்டதால் வியட்னாம் முழுவதும் 2 கோடி 50 லட்சம் குழிகள், பள்ளங்கள் ஏற்பட்டன.

இந்த யுத்தத்தின் நேரடிப் பாதிப்புக்கு உட்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒரு கோடி. 40 லட்சம்பேர் மன நோயாளர்களானார்கள். 15 லட்சம் பேர் ஊனமடைந்தனர்.

இரசாயன யுத்தத்தின் பலனாக 20 லட்சம் பேர் இன்னமும் நோயால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சுமார் 3 லட்சம் பேர் நிரந்தரமாகவே ஆஸ்பத்திரிகளில் தங்கி இன்னமும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அமெரிக்கா இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததன் காரணமாக, வியட்னாமின் காடுகள் பெரும்பாலானவை அழிக்கப்பட்டுவிட்டன.

மீண்டும் காடுகளை உருவாக்கும் வேலைகளில் 300 விஞ்ஞானியின் உதவியுடன் தேசிய புனருத்தாரணக் கமிட்டி துரிதமாக ஈடுபட்டு வருகிறது.

பயிர்ச்செய்கைக்குரிய காணி பாலைவனமாகி வருகின்றன.

இதனைத் தடுப்பதே தேசிய புனருத்தாரணக் கமிட்டியின் இலட்சியமாகும்.

இதற்குத் தடையாக வெடிக்காத குண்டுகளும் நிலக்கண்ணிகளும் புதைந்து கிடப்பதே காரணமாகும்.

விடுதலைப் புரட்சியில் வெற்றிபெற்ற வியட்னாமியர்கள் பசுமைப் புரட்சியில் தற்போது ஈடுபட்டுள்ளார்கள். ★

பஞ்சாமிர்தம்

## விழிப்புலனற்றோர் ஆறு கோடி

● இந்தியாவின் சனத்தொகை சுமார் 85 கோடி ஆகும்.

இவர்களில் விழிப்புலனற்றவர்களின் எண்ணிக்கை சுமார் 6 கோடி என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் இருந்து தெரிய வந்துள்ளது. ★

## புருணை நாட்டில் முதலாவது தினசரி

● மலேசியா அருகே புருணை நாடு உள்ளது.

இங்கு மன்னர் ஆட்சி நடந்து வருகிறது.

இதுவரை இந்த நாட்டில் தினசரி பத்திரிகை ஒன்றுதானும் பிரசுரிக்கப்படவில்லை.

40 ஆண்டுகளாக 'போர்னியோ புல்லட்டின்' என்ற வாரப்பத்திரிகை மட்டுமே பிரசுரமாகி வருகிறது.

இப்போது நாளிதழ் ஒன்றைப் பிரசுரிக்கப் போவதாக தனியார் நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளிடையே தினசரி பத்திரிகை ஒன்று இல்லாத ஒரே நாடு புருணைதான் என்பது குறிப்பிடத்தக்கது. ★

## 'மொட்டை' அடிப்பதில் சாதனை

☐ சென்ற தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று திருப்பதி, திருமலை ஏழுமலையான் கோயிலில் சாதனை ஒன்று நிகழ்த்தப்பட்டது.

முடிகாணிக்கையாகச் செலுத்துவதற்காக (மொட்டை அடிக்க) பல்லாயிரக்கணக்கானோர் வரிசையில் அன்று காத்திருந்தனர்.

வரிசை 4கிலோ மீற்றருக்கு நீண்டிருந்தது.

இறுதியில் 30 ஆயிரத்துக்கு அதிகமானோர் புத்தாண்டு தினமன்றுமட்டும் மொட்டை அடித்து நேர்த்திக்கடனை நிறைவேற்றினர் என்றுபுள்ளி விவரம் தெரிவித்தது. ★

## அழகு - நரகம் தொடர்பு ஏன்?

☐ உலக அழகு ராணியாக நோர்வே நாட்டுப் பெண் மோனா கிராண்ட் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

நோர்வே நாட்டில் இவரது சொந்த ஊரின் பெயர் ஹெல் (Hell) என்பதாகும்.

'ஹெல்' என்பது தமிழில் நரகத்தைக் குறிக்கிறது.

இவரை 'நரகத்தில் இருந்து வந்த அழகு ராணி' என்று செல்லமாக அழைக்கிறார்களாம்.

நரகத்துக்கும் அழகிற்கும் என்ன தொடர்பு என்று மட்டும் கேட்டு விடாதீர்கள். ★

## 2 கோடி ரூபாவுக்கு சதுரங்கப்பலகை

☐ 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேர்மன் நாட்டுச் சதுரங்கப்பலகை (Chess) ஒன்று லண்டனில் ஏலம் விடப்பட்டது.

இது 1616 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

இந்தப் பலகையில் சதுரங்கம் மட்டுமல்ல, 9 வேறு விளையாட்டுக்களையும் விளையாட முடியும்.

இந்தப் பலகையை 2 கோடி ரூபாவுக்கு ஒரு பணக்காரர் ஏலத்தில் வாங்கினார். ★

## நாய்க்கு வியர்வை நாக்கில் வருகிறது

☐ வெய்யில் காலம். வியர்வையாக மனித உடலின் தோலில் இருந்து ஒழுகுகிறது.



நாய்க்கு வியர்வை தோல் மூலம் வெளிப்படுவதில்லை; நாக்கு மூலம்தான் வெளிப்படுகிறது.

அதனால்தான் நாய் நாக்கை தொங்க விடுகிறதாம். ★

## லண்டனில் 'தங்க' முட்டை

● இங்கிலாந்தில் புதிய முறையில் ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட்டது.

லண்டனில் உள்ள அமைப்பு ஒன்று தங்க முட்டை ஒன்றைச் செய்து கண்காட்சி நடத்தியதே அந்தப் புதுமை.

இந்த முட்டையைச்செய்ய 15 கிலோ தங்கமும் 20 ஆயிரம் வைரக்கற்களும் பயன்படுத்தப்பட்டன.

பதினைந்து அங்குல உயரம் கொண்ட இந்தத் தங்க முட்டை சுழலும் ஸ்டாண்ட் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தங்க முட்டையின் மதிப்பு இலங்கைப் பணத்தில் 40 கோடி ரூபாவாகும். ★

## தூக்க மாத்திரை தரும் துன்பம்

☐ நித்திரை வராவிட்டால் தூக்கமாத்திரை பாவிக்கப்படுகிறது.

இந்தப் பழக்கம் நித்திரையை மட்டுமா கொண்டு வருகிறது?

அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் குழு ஆய்வு நடத்திய பின்னர் தெரிவித்துள்ள எச்சரிக்கையை இனி வாசியுங்கள்:

தூக்கமாத்திரைகளை அளவுக்கு மீறிப் பாவிப்பதால் நாளாவட்டத்தில் தூக்கமே வராது.

நாளாவட்டத்தில் இருதயம் பலவீனமடைகின்றது. இது உயிருக்கு ஆபத்தைக் கொண்டு வரும்.

இறுதியில் மீளாத் தூக்கத்தைக் கொண்டு வந்து விடும் என்று நிபுணர் குழு எச்சரித்துள்ளது. ★

## உலகில் அதிகரித்து வரும் அணுமின் நிலையங்கள்

● இன்று உலகம் முழுவதிலும் 26 நாடுகளில் 425 அணு மின்சார நிலையங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த மின்சார நிலையங்கள் அனைத்தும் உலகம் முழுவதிலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 17 சதவீதத்தை உற்பத்திசெய்கின்றன.

பிரான்சுதான் அணுமின்சார உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 65.5சதவீதம் அணுமின்சாரமாகும்.

அடுத்து தென்கொரிய நாட்டில் மின் உற்பத்தியில் 46.9 சதவீதம் அணு மின்சாரம் ஆகும். ★

# ராஜீவ்காந்திக்கு புதிய பதவி
# பிரதமர் சிங் வழங்குகிறார்

☐ பிரதமர் பதவியை இழந்த ராஜீவ் காந்திக்குப் புதிய பதவி ஒன்றைக் கொடுக்கப் பிரதமர் வி. பி. சிங். முன்வந்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுத்



வி. பி. சிங்

தலைவர் பதவிதான் ராஜீவுக்கு வழங்கப்படவிருக்கிறது.

பொதுக் கணக்குக் குழுத் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவேண்டும் என்பதுதான் நாடாளுமன்ற ஜனநாயக மரபு ஆகும்.

அந்த உயர்ந்த ஜனநாயக மரபுக்கு மதிப்பளித்து அப்பதவியை ராஜீவுக்கு அளிக்க சிங் அரசு முடிவு செய்துள்ளது.

ராஜீவ் பிரதமராக இருந்த சமயம் இப்பதவியை எதிர்க்கட்சிக்குக் கொடுக்காமல், காங்கிரஸின் தோழமைக் கட்சியான அ. தி. மு. க. வுக்குக் கொடுத்தார்.

அரசுத் திணைக்களங்களில் இடம் பெறும் நிதி சம்பந்தமான முறைகேடுகளைக் கண்டுபிடிப்பதும் பொதுக் கணக்குக் குழுவின் ஒரு கடமையாகும்.

அப்படியானால் போபர்ஸ் பேர ஊழல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ராஜீவுக்கு இப்பதவியை வழங்க சிங் அரசு முன்வந்துள்ளது. எதற்காக

எப்படியிருப்பினும் ராஜீவ் காந்திக்கு ஜனநாயக மரபு



ராஜீவ் காந்தி

களைப் போதிப்பது என்று சிங் அரசு விடாப்பிடியாக நிற்பதாகவே தெரிகிறது. ★

## அமெரிக்க நாட்டில் ஆண்களுக்கு பிரசவ லீவு

☐ அமெரிக்காவில் ஆண்களுக்கும் பிரசவ லீவு வழங்கப்படுகிறது.

பெண்களுக்குப் பிரசவ லீவு வழங்கப்படுவது அமெரிக்காவில் ஏற்கனவே இருந்து வருகிறது.

ஆனால் இப்போது பெரும்பாலான நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களில் பணியாற்றும் ஆண்களுக்கும், அவர்களது மனைவிக்கும் பிரசவம் நடக்கும்போது லீவு கொடுக்க ஆரம்பித்துள்ளன.

மாமியார் அல்லது பெற்றோர் உதவி இல்லாத பெண்கள் குழந்தை பெற்றால் அவர்களுக்குக் கணவன்மார்தான் உதவிசெய்ய வேண்டி உள்ளது.

எனவே மனைவியின் பிரசவத்தை ஒட்டி ஆண்களுக்கும் லீவு வழங்கப்படுகிறது. ★

## எவரெஸ்ட் சிகர உச்சியை பலூனில் கடக்க முயற்சி

☐ உலகின் உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை இந்நாள் வரை மனிதர்கள் ஏறித்தான் அடைந்தனர்.

ஆனால் பலூன் மூலம் எவரெஸ்ட் உச்சியைக்கடக்க ஜப்பானியர் கோஷ்டி ஒன்று தீர்மானித்துள்ளது.

இக்குழுவின் தலைவரராக மிசியோ கண்டா இருக்கிறார்.

இவர் தலைமையிலான குழு இதற்காக திபெத் சென்றுள்ளது.

திபெத்தில் இருந்து எவரெஸ்ட் சிகரத்தை பலூனில் கடந்து நேபாள நாட்டின் கிழக்குப்பகுதிக்குச் செல்வார்கள். இதன் தூரம் 200 கிலோ மீற்றர் ஆகும்.

சென்ற 24 ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதிக்குள் இப்பயணத்தை மேற்கொள்ள இக்குழு திட்டமிட்டுள்ளது. ★

## கவிதை எழுதுவதற்கு கணித மூளை வேண்டுமா?

☐ மேலை நாட்டுக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் எட்கார் அலன்போ.

கவிதை எழுதுவது பற்றி அவர் கூறியுள்ளதை வாசியுங்கள்:

கவிதை எழுதுவது என்பது கணிதத்தில் மூழ்கித் திளைப்பது போன்ற அனுபவத்திற்குச் சமானமானது.

கணிதத்தில் எண்களைக் கூட்டிக்கழித்து, பெருக்கி வகுப்பதன் மூலம் மறைந்து கிடைக்கும் விடையை கண்டுபிடிப்பதுபோல—

கவிதையிலும் வார்த்தைகளை கூட்டிக்குறைத்து, ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்துப்பார்ப்பதன் மூலம் மறைந்து இருக்கின்ற நயங்களுக்கு மேலும் அழகூட்டுவதே ஒரு கவிஞனின் வேலை.

எனவே கவிதை எழுதுவதற்கும் ஓரளவு கணித மூளை வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறாரா அலன்போ? ★

## கனடாவில் அறிமுகமான நவீன டெலிவிஷன்

● கனடா நாட்டில் உள்ள மொன்ட்ரீல் நகரில் அதிநவீன டெலிவிஷன் ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது.

இதற்கு 'இன்டர் ஆக்டிவ் டெலிவிஷன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த டெலிவிஷனில் ஒருவர் ஹொக்கி விளையாட்டைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தால், நான்கு கோணங்களில் அந்தப் போட்டியை சில பொத்தான்களை அமுக்குவதன் மூலம் அவர் பார்க்க முடியும்.

அதாவது, அந்தப் போட்டியில் தனக்கு விருப்பமான விளையாட்டு வீரர் விளையாடுவதை ஒரு பொத்தானை அமுக்குவதன் மூலம் மிக நெருக்கமாக பெரிய அளவில் (குளோசப்) பார்க்க முடியும்.

அல்லது விளையாட்டு மைதானத்தின் எந்த மூலையைப் பார்க்க வேண்டுமோ அதை இன்னொரு பொத்தானை அழுத்துவதன் மூலம் காணமுடியும்.

நடந்து முடிந்த விளையாட்டை எந்த நேரத்திலும் மீண்டும் பார்க்க முடியும்.

இந்த டெலிவிஷன் பெட்டிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. ★

## விறகு எரிப்பதால் வரும் புகை உடலுக்கு ஆகாதாம்!

☐ சமையல் அறையில் விறகுகள் எரிப்பதால் புகை ஏற்படுகிறது.

அந்தப்புகை காரணமாக சுவாசம் சம்பந்தமான பல நோய்கள் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

ஆபிரிக்க நாடுகளில் விறகுப்புகை பெண்களையும் குழந்தைகளையும் பெரிதும் பாதித்து வருவதாக கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

இப்படிப் புகையால் பாதிக்கப்படும் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் எடை குறைவாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளிலும் இப்பாதிப்பு பரவலாக காணப்படுவதாக ஆபிரிக்காவில் உள்ள அமெரிக்கச் சுற்றுப்புற சூழல் இலாகா அமோக டாக்டர் [illegible] கூறுகிறார். ★

## தமிழக ஆலயங்களில் தமிழிலும் அர்ச்சனை

☐ தமிழ்நாட்டில் இந்துக் கோயில்களில் தமிழில் தான் அர்ச்சனை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்துள்ளது.

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தொடரில் இது பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன.

'தமிழ் நாட்டில் முதன் முதலாக கோவை மாவட்டம், திருப்போரூரில் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டது.

'அப்பர், சுந்தரர் மாணிக்கவாசகர் போன்ற சமயக் குரவர்கள் தமிழில் தான் வழிபாடு நடத்தினர்.

'சமஸ்கிருதம் இடையில் வந்தது.

'தமிழில் மட்டும் ஆலயங்களில் அர்ச்சனை நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவிடுமா?

இப்படிக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அமைச்சர் கே. பி. கந்தசாமி பதிலளிக்கையில்,

'தமிழில் அர்ச்சனை செய்தால் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். அனைவருக்கும் புரியும்.

ஆனால் தமிழில் மட்டும் தான் அர்ச்சனை புரிய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்க முடியாது. அப்படிப் பிறப்பிக்கக் கூடாது என்று நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது.

ஆனால் தமிழிலும் அர்ச்சனை செய்ய அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்து உள்ளது'— என்று அமைச்சர் சொன்னார். ★

## 'மயிரிழை'யின் அளவு

● ஒருவன் நடந்து செல்கின்றான்.

வெயில் தாங்காது ஒரு மரத்தின் நிழலில் சிறிதுநேரம் நிற்கிறான்.

அப்போது பேரிரைச்சலுடன் காற்று வீசுகிறது. மரத்தில் இருந்து ஒரு கிளை முறிந்து அவரை உரசியபடி கீழே விழுகிறது.

அவ்வளவுதான். அந்தமனிதன் தப்பினேன், பிழைத்தேன் என்று ஓடத்தொடங்குகின்றான்.

அப்போது அந்தவழியால் இன்னொருவன், அவனைப் பார்த்து 'என்ன நடந்துவிட்டது?' —என்று கேட்க,

அவன் 'மயிரிழையில் உயிர் தப்பினேன்'— என்கிறான். நடந்த விஷயத்தைக் கூறி.

மயிரிழையில் என்றால் என்ன என்று நாம் அறிந்து கொள்ள முயற்சித்தோமா?

அந்த மயிரிழையின் அளவு ஓர் அங்குலத்தில் 48 இல் ஒரு பாகம்தான். ★

## சீனாவில் நடைபெறும் குதிரைச் சண்டை

☐ தமிழ்நாட்டில் சேவல் சண்டை நடத்தப்படுகிறது.

ஸ்பெயின் நாட்டில் காளையுடன் மனிதன் மோதும் சண்டை பிரசித்தமானது.

ஆனால் சீனாவில் குதிரைச் சண்டை நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் டிசம்பர் 26 ஆம் திகதி இக்குதிரைச் சண்டை நடத்தப்பட்டுவருகிறது.

குறிப்பிட்ட நாளில் குதிரைச் சண்டையைக்காண கிராமத்து மக்கள் ஏராளமாகக் கூடுவார்கள்.

சீனாவின் பழமையான ட்ராகன் நடனத்துடன் பட்டாஸ் வெடிக்க பன்னிரண்டு குதிரைகள் ஊர்வலமாக பந்தயத் திடலுக்கு அழைத்து வரப்படும்.

சீனரின் நடனம் முடிந்ததும் இரண்டு குதிரைகளை மோதவிடுவர். ★

## சந்தைக்கு வரவுள்ள மின்சாரக் கார்!

● மின்சாரக்காரை பெரிய அளவில் தயாரித்து சந்தைக்கு விடப்போவதாக அமெரிக்காவில் உள்ள ஜெனரல் மோட்டார் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கிறது.

இந்தக்காரின் பெயர் 'இம்பாக்ற்' (Impact) என்பது.

இரண்டு ஆசனங்கள் கொண்ட இந்தக்கார் பட்டரியில் இயங்கக்கூடியது.

இந்தக்கார் ஓட ஆரம்பித்த எட்டு விநாடிகளில் 60 மைல் வேகத்தை எட்டிப்பிடித்து விடும். ஆகக்கூடியது 100மைல் வேகத்தில் இது ஓடும்.

'பட்டரியில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் எப்படிச் சமாளிக்கப்படும் என்ற இரகசியங்களை நான் வெளியிடப்போவது இல்லை'—

—இப்படி நிறுவனத்தலைவர் ரோஜர் ஸ்மித் வாஷிங்டனில் நடந்த செய்தியாளர் கழகக் கூட்டத்தில் தெரிவித்தார். ★

## ஆசிரமம் நடத்த இலக்கணம் உண்டு

☐ 'ஆசிரமம்' நடத்துவதற்கும் ஓர் இலக்கணம் உண்டு.

அந்த இலக்கணத்தை வகுத்தவர் காந்தி அடிகள் தான்.

முதலில், ஆபிரிக்காவில் அவர் ஆசிரமத்தைத் தொடங்கிய நேரம்.

ஏராளமான தொழிலாளர் குடும்பங்கள் அந்த ஆசிரமத்திலே தஞ்சம் புகுந்தன.

அவர்களை அங்கே சும்மா தங்கவைத்து உணவு சமைத்துப் போடுவதை காந்திஜி எதிர்த்தார்.

'சும்மா இருந்து சாப்பிட்டால் பிச்சைவாங்கிச் சாப்பிடும் தாழ்வு மனம் வந்து விடும். ஏதாவது வேலையைக் கொடுத்து அதற்குமேல் உணவு கொடுத்தால்தான் அந்த உணவில் தங்களுக்கு உரிமை இருப்பதாக அம்மக்களுக்கு ஓர் உணர்வு' வரும்— என்றார் காந்திஜி.

ஆதரவற்றவர்களுக்கு அரவணைப்புத்தர முன்வரும் ஆசிரமங்கள் அம்மக்களின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி எல்லாருக்கும் நாமும் சமம் என்ற உணர்வை ஊட்டவேண்டும் என்பதே காந்திஜியின் இலட்சியம். ★

## மாஸ்கோவிலும் மகாபாரதம்

● பிரெஞ்சுத் தயாரிப்பாளர் பீற்றர் புறூக் உருவாக்கிய 'மகா பாரதம்' படம் மாஸ்கோவிலும் திரையிடப்படவுள்ளது.

இதற்காக பீற்றர் புறூக்ஐ மாஸ்கோவுக்கு சோவியத் நாடகத்துறையினர் அழைத்துள்ளனர்.

உலகின் மிகச் சிறந்த ஐந்து நாடக இயக்குநர்களில் ஒருவராக பீற்றர் புறூக் கருதப்படுகிறார்.

ஏற்கனவே 'மகாபாரதம்' ஆங்கிலப்படம் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் திரையிடப்பட்ட செய்தி ஏற்கனவே சஞ்சீவியில் வெளிவந்தது தெரிந்ததே! ★

# பறக்கும் மருத்துவ நிலையம்!

☐ 'பறக்கும் மருத்துவ நிலையம்' என்ற அமைப்பை சோவியத் குழந்தைகள் நல நிதி நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

நாட்டின் எந்தப் பகுதிக்கும் பறந்துசென்று, ஆபத்தான நிலையிலிருக்கும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவிகளை அளிப்பதே இந்த அமைப்பின் இலட்சியமாகும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற சோவியத் பாதுகாப்பு அமைச்சு ஐ.எல்-76 ரக விமானம் ஒன்றை இந்த நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

பறக்கும் மருத்துவ நிலையத்தில் அறுவைச் சிகிச்சைக்கான வசதிகள் உட்பட எல்லாவித சிகிச்சைத்துறைகளும் உள்ளன.

இதற்காகப் பயன்படுத்தப்படும் விமானம் இறங்குவதற்கும் கிளம்புவதற்கும் விசேடமான விமானத் தளங்கள் ஒன்றுமே தேவையில்லை.

விமானத்தில் வைத்துச் சிகிச்சை அளிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இவ்விமானத்திற்கு மிகப் பிரபலமான ரஷ்ய சிறுவர் கதையில் வரும் முக்கிய பாத்திரமான 'அப்பொலித்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ★

## விழிப்புலனற்றோருக்கு உதவும் நவீன பேனா

☐ புதியதோர் பேனாவை பிரான்ஸைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

விழிப்புலனற்றோர் இப்பேனாவைப் பயன்படுத்திப் படங்களை வரைய முடியும் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணித்தலைக் கிராமத்தில் உள்ள சோழர்கால சிவாலயம்!

இலங்கையானது பௌதிக அடிப்படையில் தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும், பண்பாட்டு வளர்ச்சியில் அது பாரதத்துடன் சிறப்பாக தென்னிந்தியாவின் தென் பகுதியுடன் பண்டைய காலம்தொட்டு நெருங்கிய தொடர்புகொண்டு வந்துள்ளது.

இதன் அமைவிடம் தென்னிந்தியாவிற்குக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதும் இரு நாடுகளுக்கும் இடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளமையுமே இதற்குரிய காரணங்களாகும்.

இந்நிலையில் மண்ணித்தலையை உள்ளடக்கிய பூநகரிப் பிராந்தியத்தின் அமைவிடமானது தமிழ்நாட்டிற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதினால் அங்கு காலத்திற்குக் காலம் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்த பண்பாட்டலைகள் இலங்கையின் ஏனைய பாகங்களைவிட இப்பிராந்தியத்தில் கூடுதலாகச் செல்வாக்குச் செலுத்த உதவியது.

இவற்றை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து மத்திய காலம்வரை சிறப்பாகக் காணலாம். இதனையே மண்ணித்தலையில் உள்ள பழமையான சிவாலயமும் புலப்படுத்தி நிற்கின்றது.

### ஆலயத்தின் அமைப்பு

இச்சிவாலயம் யாழ்ப்பாணப் பரவைக் கடலுக்கும் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொள்ளக்கூடிய பெருங்கடலுக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய நிலப்பரப்பில் உள்ள மண்ணித்தலைக் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ளது.

சில நூற்றாண்டுகளாக கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ள இச்சிறிய ஆலயத்தின் விமானத்தின் பெரும் பகுதியும் அத்தராளத்தின் கூரையும், முன்பக்கமும் இடிந்துவிழுந்து மண்ணில் புதையுண்டுள்ளன.

அத்துடன் ஆலயத்தின் அத்திவாரப் பகுதியும் பெருமளவுக்கு மண்ணால் மூடுண்டுள்ளது. இதனால் முழுமையான தொல்லியல் அகழ்வாய்வு அற்ற நிலையில் இதன் முழு விபரங்களையும் அறியமுடியவில்லை.

எதிர்காலத்தில் தொல்லியல் அகழ்வாய்வுக்கு இவ்வாலயம் உட்படுத்தப்படுமானால் சில உண்மைகள் வெளிவர வாய்ப்பேற்படலாம்.

எனவே இதுவரை இவ்வாலயம் தொடர்பாக எமக்குக் கிடைத்த ஆதாரங்களை மையமாக வைத்தே இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

### கர்ப்பக்கிரகம்

ஏறத்தாள 21' நீளத்தையும், 12½' அகலத்தையும் கொண்ட இச்சிவாலயம் கர்ப்பக்கிரகத்தையும் அதன் முன்னால் சிறிய அந்தராளத்தையும் கொண்டுள்ளது.

இதன் கர்ப்பக்கிரகம் வெளிப்புறமாக 10½' நீளத்தையும், 12½' அகலத்தையும், 8' 8'' உயரத்தையும் கொண்டுள்ளது.

உட்புறமாக இது 6' நீள அகலத்தையும் 10' உயரத்தையும் கொண்டிருக்கின்றது. கிழக்கு நோக்கிய இதன் வாசல் 4' 2'' உயரத்தையும் 3' அகலத்தையும் உடையது. கர்ப்பக்கிரக நிலைமட்டத்தில் இருந்து இதன் வாசல்படி 4' உயரத்திலும் கோமுகியின் உட்பக்க வாசல் 3½' உயரத்திலும் அமைந்துள்ளது. 3' தடிப்புடைய இதன் சுவர்கள் பெருமளவுக்கு செங்கட்டிகளையும் பொழிந்த சிறிய முருகைகற்களையும் கடலில் இருந்து எடுக்கப்பட்ட கற்களையும் கொண்டு சுதையினால் கட்டப்பட்டுள்ளது. இதன் வாசல் பகுதி மட்டும் ஒரே நீளமான பொழிந்த முருகைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கர்ப்பக்கிருக மூன்று வெளிப்புறச் சுவர்கள், அவற்றில் அமைந்த புடைப்புத் தூண்கள், தேவகோஷ்டங்கள், மாடங்கள் என்பன இங்கே குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இதன் பின்பக்கச் சுவரின் துணைமேடை, அடிமேடை, அடியில் அகன்று படிப்படியாக மேல்நோக்கி ஒடுங்கி 4' உயரத்தில் அதாவது பத்தாவது படிக்கல்லில் சமநிலை அடைகின்றது. இதிலிருந்து செங்கட்டி கொண்டு கட்டப்பட்ட நான்கு அரைத்தூண்கள் விமானத்தின் முதல் தளத்துக்குக் கீழ்ப்பகுதி வரை காணப்படுகின்றது. சதுர வடிவில் அமைந்த இத்தூண்கள் ஒவ்வொன்றும் 4' 5'' உயரத்தை உடையனவாகும். தூணின் அடிப்பாகம் 6'' அகலத்தையும், நுனிப்பாகம் 1' அகலத்தையும் கொண்டுள்ளது. சதுர வடிவில் அமைந்த இதன் பலகைப் பகுதி அலங்காரமேதுமின்றி

> **பூநகரிப் பிரதேசம் - மண்ணித்தலைக் கிராமத்தில் உள்ள சோழர் கால சிவாலயம்பற்றிய வரலாற்றின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

வரலாறு

தட்டை வடிவில் அமைந்துள்ளது. இதனையொத்த தன்மையே ஏனைய கர்ப்பக்கிருகச் சுவர்த் தூண்களிலும் காணப்படுகின்றது.

இத்தூண்களுக்கிடையே மூன்று பக்கச் சுவர்களிலும் மூன்று தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. செங்கட்டி கொண்டு மிக அலங்காரமாகக் கட்டப்பட்ட இவற்றில் சிலைகள் ஏதும் தற்போது காணப்படவில்லை. சிலைகள் வைப்பதற்குரிய இதன் உட்பாகங்கள் (தேவகோஷ்டங்கள்) 8'' அகலத்தையும் 2' உயரத்தையும் உடையன. இதன் மேல் அமைந்த மாடப்பகுதி அலங்கார வேலைப்பாட்டுக்குரிய பகுதியாகும். தேவகோஷ்டங்களை விட அகலமான இதன் பாகங்கள் ஏறத்தாள 1' 8'' உயரத்தை உடையது. மூன்று பாகங்களைக் கொண்ட இந்த மாடத்தின் முதலிரண்டு பகுப்புக்களும் வெளிநோக்கி புடைப்புச் சிற்ப வடிவில் ஆக்கப்பட்டுள்ளது. இதன் மேல் உள்ள மூன்றாவது பாகம் சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் மேல் முக்கோண வடிவில் அலங்கரிக்கப்பட்ட செங்கட்டிகள் வைக்கப்பட்டுள்ள கர்ப்பக்கிருக புறச் சுவர்களை அலங்கரிக்கும் இத்தேவகோஷ்டங்களின் அமைப்பும், தொழில்நுட்பமும் இவ்வாலயம் மிகப் பழமை வாய்ந்ததென்பதை உறுதிப்படுத்த பெரிதும் உதவுகின்றன.

### கோமுகி

கர்ப்பக்கிருகத்தில் இருந்து வெளிவரும் கோமுகியின் அமைப்பு, இவ்வாலயத்தின் பழமையையும் அதன் கலைப் பாணியையும் மதிப்பிட உதவுகின்றது. அண்மையில் 'டகி' என்பவர் கோமுகிகளை அடிப்படையாக வைத்து தென்னாசிய சிவாலயங்களில் பழமை பற்றி ஆராய்ந்தமை இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மண்ணித்தலைச் சிவாலயம் பழமையானதென்பதற்கு அதன் கோமுகியையும் ஒரு ஆதாரமாகக் காட்டலாம்.

**- ப. புஷ்பரட்னம் எம். ஏ. -**
(விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கர்ப்பக் கிருகத்தின் வடக்குப் புற தேவ கோஷ்டத்தின் கீழ்ப்பக்கச் சுவரின் மையத்திலிருந்து வெளிவரும் இக்கோமுகி, ஏறத்தாழ 2' 3'' நீளமுடையது.

கூடுதலான தொழில்நுட்ப வேலைப்பாட்டைக் கொண்ட இக்கோமுகி வைரமான வெள்ளை முருகக்கல்லில் அப்படியே லிங்க வடிவத்தைப் பிரதிபண்ணி அதன் நுனிப்பாகம் சற்றுக் கீழ்நோக்கியதாக அமைந்துள்ளது.

### அந்தராளம்

கர்ப்பக்கிரகத்தின் முன்னால் அமைந்த அந்தராளத்



மண்ணித்தலை சிவாலயம்

தின் வெளிப்புறம் கர்ப்பக்கிருகத்தைவிட சற்று அகலம் குறைந்து காணப்படுகின்றது.

கர்ப்பக்கிருகத்தையும் அத்தராளத்தையும் பிரித்து நிற்கின்ற மத்தியில் உள்ள இரட்டைச் சுவர்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மேலும் கீழுமாக உள்ளது.

இவ்வந்தராளம் வெளிப்புறமாக 10½' நீளத்தையும் 11' அகலத்தையும், 8' உயரத்தையும் உட்புறமாக 7' 8'' நீளத்தையும் 6' 5'' அகலத்தையும் 10' உயரத்தையும் கொண்டுள்ளது.

கர்ப்பக்கிருகத்தைவிட இதன் சுவர்களின் தடிப்பு குறைவானது. அத்துடன் செங்கட்டிகளை விடக் கூடிய அளவிற்கு கடலிலிருந்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டே இவை கட்டப்பட்டுள்ளன.

இதன் வெளிப்புறங்களில் அமைந்த இரு தேவகோஷ்டங்களும் நான்கு அரைத் தூண்களும் ஏறத்தாள கர்ப்பகிருகத்தில் உள்ள வடிவங்களையும் அளவுகளையும் ஒத்துள்ளன.

இவ்வந்தராளத்தை மூடி இருந்த கூரை என்ன வடிவத்தில் இருந்ததென்பதை அடையாளம் காணமுடியவில்லை. ஆயினும் நிலத்தில் புதையுண்டிருக்கும் அழிபாடுகளைக் கொண்டு இது மூடுசாந்தினால் கட்டப்பட்டதெனக் கூறலாம்.

இவ்வந்தராளத்தின் வாசல் பகுதி அத்திவாரத்தையும் வாசல் படிக்கல்லையும் தவிர முற்பக்கப்பகுதி முழுவதும் இடிந்துவிட்டது.

ஆயினும் இவ்விடிபாடுகள் இடையே 6' நீளமும் 1½' அகலமும் கொண்ட மூன்று பொழிந்த முருகைக் கற்கள் காணப்படுகின்றன. இவை வாசல்பகுதியின் இரு பக்கங்களுக்கும் கூரையைத் தாங்கி நிற்கும் மேற்பகுதிக்கும் பயன்படுத்தப்பட்டவையாகும்.

இவற்றில் வாசற்படிக் கல் ஒன்றில் செயற்கையான துவாரமொன்று காணப்படுகிறது. இது கூரையைத் தாங்கி நின்ற கல்லாக இருக்க வேண்டும். இதன் மூலம் பொலநறுவை 2 ஆம் சிவதேவாலயத்தைப்போல் இக்கோயிலிலும் ஒற்றைக் கதவு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

### விமானம்

இவ்வாலயத்தின் பண்டைய கலைச் சிறப்பையும் பெருமையையும் வெளிப்படுத்தி நிற்பதில் கர்ப்பக்கிருகத்தின் மேலமைந்த விமானம் முக்கிய பங்குவகிக்கின்றது.

மூன்று தளங்களையுடைய இவ்விமானத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள ஸ்தூபி இடிந்து வீழ்ந்துவிட்டது. தற்போதைய நிலையில் இதன் உயரம் விமானத்தின் உபபீடத்தில் இருந்து மூன்றாம் தளம்வரை 7' ஆகவும் கர்ப்பக்கிருக நிலமட்டத்திலிருந்து 17' ஆகவும் உள்ளது.

இதைக் கட்டுவதற்கு பின்பற்றப்பட்ட தொழில்நுட்ப அறிவு இங்கே சிறப்பாக நோக்கத்தக்கது. இதன் உட்பாகம் கர்ப்பக்கிருகத்தின் மேலுள்ள நான்கு மூலையிலும் குறுக்காக நீளமான பொழிந்த முருகைக் கற்களை வைத்து அதன்மேல் படிப்படியாக வட்டவடிவில் கற்கள் அடுக்கப்பட்டு சுதையினால் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் ஒவ்வொன்றும் 4' 8'', 3' 3'', 1', 10'' என்ற நீள அளவுகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு வட்டவடிவில் கட்டப்பட்டுள்ள உட்பக்க விமானம் மேற்பாகத்தில் 1½' உயரத்தில் சதுரமாகக் கட்டப்பட்டுள்ளது. ★

# உண்மையான வீரம்

ரகுவும் கோபுவும் ஒரே வகுப்புத்தோழர்கள். நல்ல நண்பர்கள். இருவரும் கைகோத்துக்கொண்டு தான் பள்ளிக்குச் செல்வார்கள்.

அவர்கள் ஒன்றாகப் பள்ளிக்குச் செல்லும்போது கோபுவின் தங்கை ஹேமாவும் அவர்களுடன் செல்வாள்.

கோபு மிகவும் சாதுவான பையன். ஆனால் ரகு அப்படி இல்லை. மிகவும் துடுக்கானவன். ரகுவுக்கு தான் பெரியவீரன் என்ற எண்ணமுண்டு. கதைகளில் வரும் ராஜாக்கள் மாதிரி எவரையும் வீழ்த்தும் ஆற்றல் தனக்கு உண்டு என்று எண்ணுபவன்.

இந்த எண்ணத்தினால் தான் ரகுவுக்கும் கோபுவுக்கும் சர்ச்சை ஆரம்பமாகியது. அந்தச் சர்ச்சைமுற்றி சண்டையாக மாறியது.

ரகு கோபுவை நன்றாக அடித்துவிட்டான். கோபுவின் மூக்கில் ரத்தம் வந்துவிட்டது.

கோபு அப்படியே போய்த் தலைமை ஆசிரியரிடம் சொல்லிவிட்டான்.

அவ்வளவுதான்...!

தலைமை ஆசிரியருக்கு வந்ததே கோபம்...!

ரகுவை நன்றாகத் தடியால் அடித்து விளையாட்டு மைதானத்தில் முட்டிபோடச் செய்தார் அவர்.

அன்றுமாலை, பள்ளி முடிந்ததும் கோபுவும் ஹேமாவும் தனியாக நடந்துபோனார்கள்.

ரகு சற்றுத் தள்ளித் தனியாக நடந்தான்.

கோபு ரகுவைத் திரும்பிப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான், ரகுவுக்கு கோபம் வந்தது.

அவனை அடிக்கவேண்டும் போல இருந்தது. ஆனால் தலைமை ஆசிரியர் நினைவு வந்ததால் அமைதியாக நடந்தான்.

ஒருவாரம் சென்றது. ரகு பள்ளியை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தான்.

கால் நடை மருத்துவநிலையக் கட்டடத்தைத் தாண்டியபோது ஏதோ பேச்சுக் குரல் கேட்டது.

பள்ளிக்கு நேரமாகிவிட்டதால் ரகு அதனைக் கவனிக்கவில்லை.

சற்று தூரம் சென்றதும் யாரோ சிறுமி அலறும் சத்தம் கேட்டது.

ரகு திரும்பிவந்து பார்த்தான். கோபுவின் தங்கை ஹேமாவின் காதிலிருந்து தோட்டைக் கழற்ற முயற்சி செய்துகொண்டிருந்தான் ஒரு முரடன்.

கீழே சில சொக்லேட்டுகள் சிதறிக்கிடந்தன. சொக்கலேட் ஆசைகாட்டி அவன் ஹேமாவைக் கூட்டிவந்திருக்க வேண்டும்.

'டேய், அவளை விடு'

முரடன் ரகுவைப் பார்த்தான்.

'டேய் சின்னப் பையா..., மரியாதையாய் போய்விடு, இல்லை என்றால் கொன்று போடுவேன்' என்று கத்தினான்.

ரகு பயப்படவில்லை. 'அவளை விடு..' என்று கத்திக்கொண்டே முரடனை நெருங்கினான். முரடன் அவனை ஓங்கி அறைந்தான்.

ரகுவின் மூக்கில் இருந்து ரத்தம் கொட்டியது. ஹேமா, 'காப்பாற்றுங்கள்' என்று கூச்சலிட்டாள்.

சற்று தூரத்தில் கழனியில் வேலை செய்துகொண்டிருந்த ஆட்கள் அவள் கூச்சலைக் கேட்டு ஓடிவந்தார்கள்.

அவர்கள் ஓடி வருவதைப் பார்த்த முரடன் ரகுவை மேலும் பலமாகத் தாக்கிவிட்டு ஓடிப்போய்விட்டான்.

ரகு கண்விழித்துப் பார்த்தபோது மருத்துவமனையில் இருந்தான். அவனுடைய அம்மாவும் அப்பாவும் அழுதுகொண்டிருந்தார்கள்.

'உங்கள் பிள்ளைக்கு ஒன்றும் இல்லை. இன்னும் நாலே நாளிலே எழுந்து நடமாடுவான். கவலைப்படாதீர்கள்' டாக்டர் ஆறுதல் சொன்னார்.

கோபுவின் அப்பாவும் அம்மாவும் ரகுவிடம் வந்து நன்றி சொன்னார்கள்.

கோபுவும் ஹேமாவும் ரகுவுக்காக கண்கலங்கி நின்றார்கள்.

ரகு அவர்களைப் பார்த்து அன்போடு சிரித்தான். ஒரு வாரம் சென்றது. ரகு பள்ளிக்கு வந்தான். அவன் வகுப்புத் தோழர்களும் மற்ற மாணவர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டு விசாரித்தார்கள்.

எல்லோரும் தியான மண்டபத்தில் கூடினார்கள். தியானம் முடிந்தது.

தலைமை ஆசிரியர் ரகுவைத் தன் அருகே வரும்படி அழைத்தார்.

அவன் தைரியத்தையும் நேர்மைக்காகப் போராடும் குணத்தையும் பாராட்டினார். எல்லா மாணவர்களும் இத்தகைய குணத்தைப்பெற வேண்டும் என்று அறிவுரை சொன்னார்.

ரகுவுக்கு தன்னை எல்லோரும் மரியாதையாய் பார்ப்பது தெரிந்தது.

வீரம் என்பது தீமையை எதிர்த்துப் போராடும் தைரியமும் வலிமையுமே என்பதை அவன் நன்கு உணர்ந்தான்.

— எஸ். குமார்

## சிறுவர் சுடர்

### முயல்குட்டி

சின்ன முயலே வா
சிங்காரமுடனே வா
பஞ்சுபோன்ற உன்மேனி
பார்க்க பரவசமாகுது

நீண்ட உன் செவியை
நீளவிரிக்கும் அழகென்ன
ஓட்டமாக ஓடுவதில்
உனக்கிணை யாருண்டு!

—அல்வத்தனி உமா

# நெருப்புக் கோழி

உலகிலுள்ள எல்லாப் பறவைகளிலும் பெரியது நெருப்புக்கோழி. இதன் உயரம் 6 அடிமுதல் 8 அடி வரை சராசரியாக ஒரு தீக்கோழி 175 கிலோ எடை உடையது.

ஓடும்போது இறக்கைகளைப் பலமாக அடித்துக் கொள்ளும். ஆனால் பறக்க முடியாது.

அரேபியா, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மட்டும் இவை காணப்படுகின்றன.

இவற்றின் கால்கள் வலிமையாக, உறுதியாக ஓட ஏதுவாக அமைந்துள்ளன.

பறவைகளுக்குப் பொதுவாக நான்கு விரல்கள் இருக்கும். ஆனால் நெருப்புக் கோழிக்கு இரண்டே விரல்கள் தான்.

இவை வருடத்திற்கு ஒரே ஒரு முறைதான் முட்டையிடும். முட்டைகளை 40நாட்கள் அடைகாக்கும்.

இரவு நேரங்களில் ஆண் கோழி அடை காக்கும். பகலில் சில சமயம் சூரிய வெப்பத்துக்கு விட்டு விடும். சில சமயம் பெண்கோழி அடைகாக்கும்.

இவற்றின் முட்டை ஒவ்வொன்றும் 12கோழி முட்டை அளவு இருக்கும்.

இந்தக் கோழியின் கழுத்து மற்றும் தொடைப் பகுதிகள் நெருப்புப் போல சிவந்து இருக்கும். இதனால் தான் இவற்றுக்கு நெருப்புக்கோழி என்று பெயர் வந்தது.

ஏதாவது ஆபத்து வந்த சமயத்தில் தன் தலையை மண்ணுக்குள் நுழைத்துக் கொள்ளும்.

தலையை மறைத்துக் கொண்டால் உடல் முழுவதும் மறைந்து கொண்டதாக எண்ணுகின்றது.

உணவு ஜீரணமாக கற்கள், ஆணிகள் முதலியவற்றையும் சேர்த்து விழுங்கும்.

தென்னாபிரிக்காவில் சில கோழிகளின் இரப்பையில் வைரம் இருக்கவும் கண்டு பிடிக்கப்பட்டது.

- ஆர். ஆர். பூபதி -

# திருமணத்தின் முக்கிய நோக்கம்...

"மனிதர்களாகிய நாம் தான் கல்யாணம் செய்து கொண்டு கஷ்டப்படுகிறோம். கடவுளும் எதற்காகத் திருமணம் செய்து கொண்டு அவதிப்படவேண் வேண்டும்!''

கடவுள் ஏன் திருமணம் செய்து கொள்கிறார் என்று நீங்கள் கேட்கலாம்.

அவரைப் பார்த்து நாமும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அவர் திருமணம் செய்து கொள்கிறார்.

திருமணம் என்ற சொல்லில், திரு என்றால் கடவுள், மணம் என்றால் வாசனை வீசுவது என்று பொருள்.

அதாவது கடவுளின் ஒப்புதல் பெற்ற திருமணங்கள் மணக்கும், தம்பதிகள் இன்பமாக வாழ்வார்கள் என்பது தான்.

மல்லிகை போன்ற மலர்கள் நல்ல மணம் வீசுகின்றன.

ஆனால் மொட்டாக இருக்கும் போது அவற்றுக்கு மணம் உண்டா? கிடையாது.

அந்த மொட்டை நாம் பலாத்காரமாய் பிரித்துவிட்டால், மணம் வருமா! வராது.

ஆகா திருமணம் என்றால் பலாத்காரமின்றி, கடவுள் அருளால் நடப்பது என்று பொருள்.

பகவான் நேரில் வந்து அருள் புரியமாட்டார். ஆகவே பெரியவர்கள் சம்மதம் பெற்று நடக்கும் திருமணங்கள் கடவுளின்



அருள் பெற்றவை என்று கொள்ளலாம்.

திருமணங்களின் முக்கிய நோக்கம் என்ன என்பது தெரியாததால்தான் தற்கால யுவர்களும், யுவதிகளும், பெற்றோர்களுக்கு விரோதமாகக் காதல் திருமணங்கள் செய்து கொள்கிறார்கள்.

திருமணத்தின் நோக்கம் சிற்றின்ப ஆசையைப் பூர்த்தி செய்வதென்று அவர்கள் நினைப்பதால்தான் இப்படிச் செய்கிறார்கள்.

திருமணத்தின் முக்கிய நோக்கம் அதுவன்று.

நாம் எல்லாரும் நான்கு நிலைகளில் அதாவது நான்கு ஆசிரமங்களில் இருக்க வேண்டுமென்று நம் பெரியவர்கள் விரும்பினார்கள்.

முதலில், புலன்களை அடக்கி, கல்வி கற்கும் பிரம்மச்சாரிய நிலை.

இது பழுதற்றிருந்தால் தான் இல்லறம் இனிக்கும்.

அதற்குப் பிறகு வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆக இரண்டு நிலைகள்.

இல்லறத்தான் தான் மற்ற மூன்று நிலைகளில் உள்ளவர்களை ஆதரிக்க வேண்டும். அதற்காகத்தான் இல்லறம் ஏற்பட்டது.

இல்லறத்தில் சிறிது காலம் இருந்து விட்டு, நாம் மற்ற நிலைகளுக்கு மாறவேண்டும்.

அப்படி மாறாமல் தொடர்ந்து இல்லறத்திலேயே இருப்பதால் தான் இன்று திருமண வாழ்க்கையில் பல தொல்லைகளும், பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன.

- ஆனந்தி -

## நங்கை

# மனைவியைக் கோபிக்கலாமா?

பெரிய தேர் ஓடுவதற்கு உதவுவது சிறிய அச்சாணி. பெரிய வாழ்க்கையை பிடித்து நிறுத்துவது சிறிய விஷயம். சிறியதைப் பெரிதாக்கிய சீரான குடும்பங்கள் பல சீரழிந்துவிடுகின்றன.

தொழில் காரணமாக வெளியூரில் ஆறுமாதம் வீட்டுச் சாப்பாடு இல்லாமல் ஹோட்டலில் காலம் ஓட்டிய கஷ்டம், வீட்டுச் சாப்பாட்டை நாக்கு விரும்ப வைத்தது.

மிகுந்த எதிர்பார்ப்புடன் சாப்பிட உட்கார்ந்தேன். என் மனைவி சாப்பாடு போட்டாள். அவள் சமைத்தது தான்.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது. நாக்கு ருசிக்கவில்லை. கோபம் வந்தது. வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன்.

ஆனால் என் மனைவி ஒரு வார்த்தை பேசவில்லை. 'இன்று என்னவோ அப்படி ஆகிவிட்டது. நாளைக்குப் பார்த்துச் சமைக்கிறேன்' என்று பக்குவமாகச் சொன்னாள்.

சற்றுநேரம் கழித்ததும் வருத்தப்பட்டேன். நான் அப்படி ஆத்திரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டியிருக்கக் கூடாது என்பதை உணர்ந்தேன்.

ஒருநாள் சாப்பாடு சரியில்லை என்று மனைவியிடம் நான் கோபப்பட்டேன். என்னைப்போல் பலபேர் இந்த நாட்டில் இருப்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நம் நாடு முன்னேறாமல் இருக்கிறது.

— மு. முத்துக்காளத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட வளர்ச்சிக்கு உழைக்கும் மத நிறுவனம்!

□ உலக சினிமாத்துறையின் வளர்ச்சிக்கு 1920 முதல் சேவையாற்றி வரும் ஒரு ஸ்தாபனம் ஆங்கிலத்தில் OCIC என்றழைக்கப்படும் அமைப்பாகும்.

OCIC என்பது Office Catholoque Internationale du Cinema என்ற பெயரின் சுருக்கமாகும். சர்வதேச கத்தோலிக்க சினிமா சங்கம் என்று தமிழில் அழைக்கப்படுகிறது.

சினிமாவில் மனிதனின் ஆத்மீக மற்றும் மனித நேய அம்சங்களை வலியுறுத்தும் பணியில் இந்த அமைப்பு ஈடுபட்டு வருகின்றது.

சிறந்த படங்களுக்கு இந்த அமைப்பு இரண்டு கட்டங்களாக விருது வழங்குகின்றது.

ஒன்று, சர்வதேச திரைப்பட விழாக்களில் இந்த அமைப்பு பங்கு பற்றுகிறது. அத்துடன் தனது சார்பில் நடுவர் குழு ஒன்றையும் அவ்விழாவுக்கு இந்த அமைப்பு அனுப்பி, சிறந்த படங்களைத் தெரிவு செய்து விருது வழங்கி வருகிறது.

உலக நாடுகளில் லொக்கார்ணோ, மொன்ட்ரீல், வெனிஸ், சான்செபஸ்தியன், ரியோடி ஜெனரோ, பேர்லின், டிஜோன் ஆகிய திரைப்படவிழாக்களுக்கு இந்த அமைப்பு தனது நடுவர் குழுக்களைச் சிறந்த படங்களைத் தெரிவு செய்கிறது.

இந்த அமைப்பின் கிளைகள் ஒவ்வொரு நாட்டிலும் இயங்குகிறது.

இரண்டாவது கட்டமாக தனது கிளை மூலமாக அந்தந்த நாட்டில் தேசிய மட்டத்தில் சிறந்த படங்களைத் தெரிவு செய்வதிலும் இந்த அமைப்பு ஈடுபட்டு உள்ளது.

இரண்டாவது கட்டத்தின் கீழ், 1973 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் இந்த அமைப்பு சிறந்த படங்களைத் தெரிவுசெய்து விருதுகளை வழங்கி வருகிறது.

அந்த ஆண்டில் கொழும்பில் ஆறாவது உலக திரைப்படவிழா நடந்தது.

OCIC அமைப்பு, சிறந்த படத்தைத் தெரிவுசெய்ய விசேட நடுவர் குழு ஒன்றை நியமித்தது.

செக்கோஸ்லேவிய படம் ஒன்று அப்போது சிறந்த படத்துக்கான விருதைப் பெற்றது.

**விஜேகுமாரணதுங்க சிறந்த நடிகர்**

1975 இல் நடந்த பட விழாவில் 'அஹஸ் கவா' சிங்களப் படத்தை இயக்கிய தர்மசேன பத்திராஜாவுக்கு விருது வழங்கப்பட்டது.

ஆசியக் கண்டத்திலேயே சினிமாத்துறையில் சாதனை புரிந்து வரும் கலைஞர்களும் தொழில் நுட்பவியலாளர்களுக்கும் விருதுகளை வழங்கிக் கௌரவிக்கும் ஒரே ஒரு அமைப்பாக இது விளங்கி வருகிறது.

இது ஒரு கத்தோலிக்க அமைப்பாக இருப்பினும், மத சம்பந்தமான நடவடிக்கைகளால் இதன் செயற்பாடுகள் பாதிக்கப்படவில்லை.

மனிதனின் ஆத்மீக மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு சினிமா என்ற கலைத்துறையைப் பயன்படுத்துவதையே இந்த அமைப்பு தனது உன்னத லட்சியமாகக் கொண்டுள்ளது.

தேசியத் திரைப்பட விழாவை இலங்கையில் இந்த அமைப்பு முதலில் 1977 இல் நடத்தியது.

'மனிதனின் ஆத்மீகப் பிரச்சினைகளை நோக்கிப் படங்கள் தயாரிப்பது.' என்ற இலட்சியத்தை அடிப்படையாக வைத்தே சிறந்த படங்களை இந்த அமைப்பு தெரிவு செய்கிறது.

1989 இல் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பன்னிரண்டு படங்கள் இந்த அமைப்பு நடத்திய சிறந்தபடத் தெரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

'ஒரு கண்ணாடியின் பிரதிபலிப்பு' (கெடபத்தக்கசாயா) என்ற படமே சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டது. அதில் கதாநாயகனாக நடித்த சிறந்த நடிகராக விஜேகுமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு தங்க விருது வழங்கப்பட்டது. ★

வெள்ளித்திரையில்

# 'எம். எஸ்.' பாதையில் லதா மங்கேஷ்கார்!

உலகப் புகழ்பெற்ற இந்திப் பாடகி லதா மங்கேஷ்கார் ஒரு முறை திருமண வீட்டில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடினார்.



எம். எஸ், சுப்புலட்சுமி

அதில்... ... திருமணமாகும் பெண் தன் கணவன் வீட்டுச்குச் செல்வதாகவும் மகளைப் பிரியும் பெற்றோர் மனம் உழல்வதாகவும், ஒரு பாடலையும் பாடினார்.

எல்லாப் பாடல்களைக் காட்டிலும் இப்பாடலை மிக உருக்கமாகப் பாடினார்.

பாடுபவரும், கேட்டவர்களும், திருமண வீட்டாரும் ஒருங்கே அப்பாடலைக் கேட்டுக் கண்ணீர் கசிந்து உருகிப் போனார்கள்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு செய்தியாளர்கள் அவரை அணுகிக் கேட்டார்கள்: ''உங்களால் எவ்வாறு இவ்வளவு உருக்கமாகப் பாட முடிந்தது?'' — என்று.

''என் மகளுக்கே திருமணம் செய்து அவளைக் கணவன் வீட்டுக்கு அனுப்புவதாகக் கற்பனை செய்து கொண்டேன்''— என்றார் லதா மங்கேஷ்கார்.

தாதா பால்சாகிப் விருது பெற்ற லதா மங்கேஷ்காரின் விருப்பம் இசையரசி எம். எஸ். சுப்புலட்சுமி போன்று சமூகப்பணிகளுக்கு இசை மூலம் உதவுவதே.

சுப்புலட்சுமியின் இசையிலே மனதைப் பறிகொடுத்தவர் லதா. ★

# புதிய சிந்தனை ஏற்பட விருதுகள் உதவுகின்றன!

□ தமிழ் சினிமாவில் பிரகாசிக்கும் குணசித்ர நடிகை லட்சுமி, 280 படங்களில் நடித்திருக்கிறார்.

அவர் தெரிவிக்கும் சில கருத்துக்களை இனி வாசியுங்கள்:

என்னுடைய வேடங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நான் வரையறுத்துக் கொள்வதில்லை.

ஆனால் அதில் நடிப்பை வெளிக்காட்டக்கூடிய யதார்த்தமான, இயற்கையான குணாதிசயங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

நான் 280 படங்களில் நடித்திருக்கின்றேன். அவற்றில் அத்தனை வேடங்களும் நான் விரும்பி ஏற்று நடித்த வேடங்கள் தான்.

என்னைப் பொறுத்தவரை நடிப்பை ஒரு தொழிலாக ஏற்று அதில் பொறுப்புடன் ஈடுபட்டு பணியாற்றி வருகிறேன். எந்த ஒரு வேலை செய்தாலும் அதில் பொறுப்புணர்வு, நேர்மை இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன்.

நடிப்புக்கு வந்த பின் எனது கவனத்தை வேறெதிலும் திசை திருப்புவது கிடையாது.

நடிப்பு இயற்கையாக அமைய வேண்டும் என்பதில் எனக்கு அக்கறை உண்டு.

திரைப்படத்துறையில் உள்ளவர்களுச்கு விருது - பரிசு - பாராட்டு என்பன ஒரு 'டொனிக்' போன்றவையே. மீண்டும் மீண்டும் விருது பெறவேண்டும் என்ற ஆர்வம் மனதில் தோன்றும். அது ஒரு சவாலை ஏற்படுத்தி விடும். இதன் மூலம் புதிய சிந்தனைகள் பிறக்கவும் வழி ஏற்படும்.

இப்படிக் கூறுகிறார் லட்சுமி. ★


"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான நவீனக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | . | *7% |
| 06 | 15% | 16% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ச. கருணரட்ன, சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம், A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண. A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்
இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
61, பொத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைப் புரட்சி இன்று அவசியம் தேவை!

அரசியல்துறையாயினும் பொருளாதாரத்துறையிலாயினும் இன்றைய உலகம் பெரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

எல்லாத் துறைகளிலும் பெரும்பாதிப்பு ஏற்பட்டு அவற்றிலிருந்து விடுபடும் மார்க்கம் யாருக்குமே தெரியாது போய்விட்டது.

மனோதத்துவ ரீதியாக இந்தப் பிரச்சினை ஆள்பவர்கள், ஆளப்படுபவர்களாகிய இருபாலாரையும் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் சிக்கலான பிரச்சினையாகவுள்ளது.

மனித வர்க்கம் காலத்திற்குக் காலம் மாறுபட்டு வரும் சந்தர்ப்பங்களைத் தெளிவாக அறிந்துகொண்டு ஆளும் திறமையை இழந்துவிட்டது போல் தெரிகிறது.

மக்களெல்லோரும் விதி வசத்தால் ஈர்க்கப்பட்டு வசமிழந்து துன்பத்திற்கு இலக்காகி விட்டார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்களையும், நிகழ்காலம், வருங்காலம் நடக்கப் போவதையெல்லாம் தனது ஆற்றலால் கட்டி ஆளும் சக்தி வாய்ந்த மனிதன் செயல்திறன் படைத்தவனாயிருக்கும்போது கர்ம வினைப்பயனாய் தவறான வழிகளில் போய்க் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

## மனோதிடம்

மொழியின் மூலமாகவும் சரித்திரபூர்வமாகவும் தோன்றிய மனிதன் தனது அனுபவ வாயிலாகக் கற்றுக்கொண்ட பாடங்களால் இவ்வுலகில்

தன்னம்பிக்கையுடன் கூடிய அயராத உழைப்பும் துன்பங்களை எதிர்நோக்கி அதில் வெற்றி ஈட்டும் திடமனப்பான்மையும் இன்றைய கால கட்டத்தில் மிகவும் குன்றிவிட்டது.

தமிழில்:

**- கே. சி. இராமநாதன் -**

ஆங்கில மூலம்:
The Human Machine by E. R Thompson M. A.

ஒளி இழந்தோ அல்லது சுபீட்சமாகவோ இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் மனோதிடம் கொண்டவனாகிறான்.

எங்களால் அடக்கி ஆழ முடியாத ஒரு சக்தியால் பீடிக்கப்பட்டிருக்கிறோம்.

ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களையும் ஆட்சிக்குட்பட்டவர்களையும் அழுத்திக் கொண்டிருக்கும் சக்திக்கு எதிராகச் செயல்பட, உதவியற்ற நிலையிலுள்ளோமென்ற நிச்சயமற்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விதமான மனப்பான்மையானது அதன் நடைமுறையிலிருந்தே மேலும் உரம் பெற்று விடுகிறது. இந்த நம்பிக்கையை உறுதியாகப்பற்றிக் கொண்டால் அதன் வேர் மிக ஆழமாகப் பாயும்.

## உண்மை

இந்த நிலைமை மிகவும் ஆபத்தானதென்பதை நான் மறுக்கவில்லை. உண்மையை உண்மையாகவே ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை நம்பித்தான் ஆக வேண்டும். ஆனால் அதன் விளைவுகளைத் 'தொடக்கமாகக் கருத வேண்டுமேயல்லாது முடிந்த முடிவாகக் கருதிவிடலாகாது'

ஜனசமூகத்தின் பழக்க வழக்கங்கள், ஐதீகம், பரம்பரை ஆகிய தொடர் சங்கிலிப் பிணைப்புக்களே ஒரு தேசத்தை அதன் மக்களைக் கட்டுப்படுத்தும் சாதனங்களாகும்.

இப்போது தேவைப்படுவதெல்லாம் புரட்சிகரமான மனமாற்றம். சென்று போனதை, பழமையை முற்றாக மறந்து விடவேண்டும். திறந்த மனத்தோடு, ஆழ்ந்த யோசனையுடன் பிரச்சினையை அணுக வேண்டும். ★

## புட்டிப்பால்

இளைய தாய்க்குலமே!
உங்கள்
உடல் அழகைக்
காப்பதற்காக
குழந்தைக்கு
புட்டிப்பால் கொடுத்து
குழந்தையை ஏனோ
குட்டிச் சுவர்
ஆக்க நினைக்கிறீர்கள்?
ஆரோக்கியத்துடன்
நல்ல
சிந்தனை நிறைந்த
தமிழ் சந்ததியை
உருவாக்க
அமிழ்திலும் இனிய
தாய்ப்பாலை அருந்திட
கொடுத்திடுவீர்.

**- மத்துவிலூர் சிவா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவத்துறை வளர்ச்சிக்கு சீரிய ஆலோசனைகள் தேவை!

சுதேச மருத்துவக் கல்வி இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் ஆயுள்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யூனானி மருத்துவம் ஆகிய மூன்று வெவ்வேறு கற்கை நெறிகளாக போதிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தில் ஆயுள்வேத யூனானி மருத்துவத்துறைகளும் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் சித்த மருத்துவத்துறையும் இயங்கி வருகின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கு இன்னும் சுதேச மருத்துவக் கல்வி முறைபற்றி விரிவான விளக்கம் இல்லை என்பது எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் யதார்த்த நிலையை பொதுமக்களுக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் விளக்குவது யாழ் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவத்துறையின் முக்கிய கடமை என உணர்கின்றோம்.

இலங்கையில் சுதேச மருத்துவர்கள் பலதரங்களில் காணப்படுவதனால், மக்கள் மத்தியில் எல்லோரும் ஒரு தரத்தில் உள்ளவர்கள் என்ற தவறான கருத்து ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததாகும்.

### பதிவு செய்தல்

இலங்கையில் தற்போது பின்வரும் மட்டங்களில் சுதேச வைத்தியர்களின் பதிவு நடைபெறுகின்றது. அவர்களுடைய மட்டங்களில் ஒவ்வொரு தரத்திலுமுள்ளவர்கள் பொதுமக்களுக்கு சேவை செய்கின்றார்கள்.

1. வரையறுக்கப்பட்ட கல்வித்தகைமைகள் இல்லாது பரம்பரையாக சித்தவைத்திய முறையைப் பேணிவரும் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள்.

2. சுதேச மருத்துவமுறை பற்றி எதுவித அனுபவமும் இல்லாத இளைப்பாறிய ஆசிரியர்கள், அரசாங்க சேவையில் உள்ளவர்கள், மருந்து கலவையாளர்கள் ஆரோக்கியசாலை ஊழியர்கள் ஆகியோர் 10 வருடங்கள் தாம் மருத்துவசேவையில் ஈடுபட்டிருப்பதாக இரு சுதேச மருத்துவர்களின் சான்றிதழ்களைப் பெற்று அதனை கிராமசேவகர் அரசாங்க அதிபர் ஆகியோரின் சிபார்சுடன் ஆயுள்வேத வைத்திய சபைக்கு விண்ணப்பித்து வைத்தியர்களாக தங்களை பதிவுசெய்துகொண்டு விடுகின்றார்கள்.

இந்தமுறை சுதேச மருத்துவர்களுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் செயலாகும். இந்த முறையை அரசாங்கம் உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் சுதேச மருத்துவர்கள் பற்றிய தவறான கணிப்பு நீக்கப்படமாட்டாது.

3. சில தனியார் நிறுவனங்கள் மூலம் வைத்தியராக பதிவு செய்வதற்குரிய பாடத்திட்டத்திற்கமைய வகுப்புகள் நடத்தப்பட்டு 3 வருடங்களின் பின்னர் பரீட்சையில் தேர்ச்சியடைந்ததும் ஆயுள்வேத சபையினால் நடத்தப்படும் வாய்மொழிப்பரீட்சையில் சித்தியடைந்ததும் வைத்தியராக பதிவு செய்யப்படுதல்.

4. சில தனியார் நிறுவனங்களில் குறிப்பிட்ட கல்வித் தகைமையுடன் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு 4 வருடங்கள் கற்பிக்கப்பட்டு ஆரோக்கியசாலைப் பயிற்சியின்றி இறுதிப்பரீட்சையையும் நடத்தி பின்னர் ஆயுள்வேத வைத்தியசபையினால் நடத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியெய்தியதும் வைத்தியர்களாக பதிவு செய்யப்படுதல்.

5. பல்கலைக்கழகமட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உண்ணாட்டு மருத்துவநிறுவகத்தில் ஆயுள்வேத மருத்துவசிகிச்சை மானிப்படிப்பும் (பி. ஏ. எம். எஸ். B. A. M. S.) யூனானி மருத்துவசிகிச்சைமாணிப் படிப்பும் (பி. யூ. எம். எஸ். B. U. M. S.) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவசிகிச்சைமாணிப் படிப்பும் (பி. எஸ். எம். எஸ். B. S. M. S.) கற்பிக்கப்படுகின்றது.

### அரச அங்கீகாரம்

பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப்படும் கற்கைநெறிகள் முதன்மையானதும் அரச அங்கீகாரம் பெற்றமையுமாகும்.

இந்த ஐந்து பிரிவினரும் ஆயுள்வேத வைத்தியசபையினால் ஒரே பதிவேட்டில் பதியப்பெற்று பதிவு இலக்கங்களும் வழங்கப்படுகின்றன.

இந்த முறையை மாற்றி அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிலிருந்து கல்வி கற்று வெளியேறும் பட்டதாரி மருத்துவர்களுக்கு புறம்பான பதிவேடு பேணப்பட வேண்டுமென்று அமைச்சின் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியும் அதற்குரிய பலன் கிடைக்கவில்லை.

சுதேச மருத்துவமுறைக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்குவதனால் மட்டும், அல்லது ஆரோக்கியசாலைகளை நிறுவுவதனால் மட்டுமே சுதேச வைத்தியமுறை அபிவிருத்தி அடைந்துவிடும் என அரசாங்கம் கருதினால் அது முற்றிலும் தவறான ஒரு மதிப்பீடாகும்.

அரசாங்க மருத்துவர்களுக்குரிய சில உரிமைகள் சுதேச மருத்துவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

உதாரணமாக அரசகூட்டுத்தாபனங்கள், வங்கிகள் போன்றவற்றில் சுதேசமருத்துவர்களுக்கும் நியமனம் வழங்கவேண்டும்.

மருத்துவச் சான்றிதழ், மருத்துவச்செலவிற்கான விபரம் அடங்கிய பத்திரம் (Medical Certificates Medical Bills) சுதேச மருத்துவர்களிடமிருந்து சில கூட்டுத்தாபனங்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

### மாவட்ட ரீதியில் மருந்தகங்கள்

மிகவும் முக்கியமாக தரமான சுதேசமருந்துகளை தயாரிப்பதற்கு மாவட்டரீதியில் மருந்தகங்களை நிறுவ வேண்டும். அது சாத்தியப்படாத பட்சத்தில் தயாரிக்கப்பட்ட மருந்துகளை இந்தியாவிலிருந்து தருவிக்க முயற்சி எடுக்கவேண்டும்.

யாழ் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கொழும்பிலுள்ள விஷேட அரசாங்க ஆரோக்கியசாலைகளாகிய புற்றுநோய்நிறுவகம், குஷ்டரோக தடுப்பு நிலையம், காசநோய் தடுப்பு நிலையம், பாலியல் நோய் தடுப்பு நிலையம், தொற்றுநோய் ஆரோக்கியசாலை] ஆகிய இடங்களில் குறிப்பிட்ட நோய்கள் பற்றிய விரிவுரைகள் இறுதி ஆண்டில் வழங்கப்படுகின்றன.

மற்றும் பேராதனை தாவரவியல் பூங்காவிலும், நாவின்னை ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்திலும் மூலிகைகளை இனங்காணுதல், அதனைப் பேணுதல் பற்றிய விரிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும் சில குறிப்பிட்ட பாடங்களில் விரிவுரைகள் மருத்துவபீட விரிவுரையாளர்களினால் வழங்கப்படுகின்றன.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் பயிற்சிக்காக கைதடி ஆயுள்வேத ஆரோக்கிய சாலை போதனா வைத்திய சாலையாக சுதேசவைத்திய அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### ஆலோசனைகள் தேவை

1985 ஆம் ஆண்டு முதல் சித்தமருத்துவத்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்றது. அதன் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமான ஆலோசனைகள் யாழ் மாவட்டத்தில் உள்ள சித்தவைத்தியர்களிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெறாதது ஒரு குறையாகும்.

சித்தமருத்துவத்துறை யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டதற்கு யாழ் மாவட்டத்தில் சித்தமருத்துவர்கள் கூடிய அளவில் இருப்பதும் சித்தமருத்துவ அபிவிருத்தியில் அவர்களது பங்களிப்பு நிச்சயம் கிடைக்குமென்பதும் ஒரு காரணியாகும்.

வைத்தியர்கள் மட்டுமல்ல கல்விமான்கள், பொதுமக்கள் மற்றும் துறைகளைச் சார்ந்த அறிஞர்கள், வைத்திய சேவையிலுள்ளவர்கள் ஆகியோர் சித்தமருத்துவத் துறை எந்த வகையில் யாழ் மாவட்டத்தின் சுகாதார சேவைகளை பூர்த்தி செய்வதில் உதவலாம், மக்களுக்கு அவர்கள் எந்த வகையில் சேவையாற்ற வேண்டும் என்பதனையிட்டு ஆலோசனைகள் வழங்க முன்வரவேண்டும். ★

**- டாக்டர் எஸ். பவானி -**
தலைவர், சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

## வைத்திய சஞ்சீவி

# பரதனின் பாதுகாபட்டாபிஷேகம் கூறும் தத்துவம் என்ன?

வைகுண்டத்தில் ஒரு நாள்.........

திருமால் தம் பாதுகையைப் படுக்கையறையில் வைத்து விட்டுப் பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டார்.

அதே அறையில் பகவானின் திருமுடி, சங்கு, சக்கரம் மூன்றும் இருந்தன.

புண்ணியம் செய்த சில பக்தர்கள்தான் இப்படி பகவானின் திருமுடியாகவும், சங்காகவும், சக்கரமாகவும் பாதுகையாகவும் ஆனவர்கள்.

தான் இருந்த அதே அறையில், பாதுகையும் இருந்தது திருமுடிக்குப் பிடிக்கவில்லை.

திருமுடி, பாதுகையைப் பார்த்து,

'தாழ்ந்தவனாகிய நீ படுக்கை அறைக்கு வரலாமா?' என்று சீற்றமுடன் கேட்டது.

அதற்குப் பாதுகை,

'அண்ணே! நானாக வரவில்லை. பெருமாள் இங்கே என்னை வைத்தார்'— என்றது.

'அறிவில்லாத பாதுகையே! வழியில் கிடப்பது சாணியா, சந்தனமா என்கிற வித்தியாசம் உனக்குத் தெரியாது. பெருமாள் உள்ளே விட்டாலும் நீ வெளியேற வேண்டியதுதானே!'—

'அண்ணே! என்னை ஏன் இகழ்கிறாய்! பக்தர்கள் என் மீது தான் விழுந்து வணங்குகிறார்கள். அடியேன் என்று சொல்கிறார்களே தவிர, முடியேன் என்று சொல்வதில்லையே!'

இதைக் கேட்ட சங்கும், சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து கொண்டு பாதுகையை இகழ்ந்தன.

பாவம்! பாதுகை அழ ஆரம்பித்துவிட்டது.

அடுத்த நாள் அது பகவானைப் பார்த்து,

'என்னை ஏன் படுக்கையறையில் விட்டீர்கள்?'— என்று கேட்டது.

எல்லாவற்றையும் அறிந்த பகவான் பாதுகையைப் பார்த்து,

'கவலைப்படாதே! எளியவர்களை இகழ்ந்தால், இகழ்ந்தவர்கள்தான் துன்புறுவார்கள். 'இராமாவதாரத்தின் போது உனக்குப் பட்டாபிஷேகம் நடக்கும். பதினான்கு வருடகாலம் சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய். உன்மீது என் திருமுடி இருக்கும். உன்னை இகழ்ந்த சக்கரமும், சங்கும், பரதனும் சத்ருக்னனுமாகப் பிறந்து, உனக்குப் பூசை செய்வார்கள்'— என்றார்.

அதனால்தான் பரதன் பாதுகாபட்டாபிஷேகம் செய்ய நேர்ந்தது.

எளியவர்களை இகழ்ந்தால் இகழ்ந்தவர்கள் தான் துன்புறுவார்கள். இதைப் பாதுகாபட்டாபிஷேகம் நிரூபிக்கின்றது. ★

**திருமுருக கிருபானந்தவாரியார்**

இலக்கியம்

# வடக்கு - கிழக்கில் கட்டட நிர்மாணத்துறை புத்துயிர் பெற சில ஆலோசனைகள்!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### திட்ட நிர்வாகம்

முறைகேடான திட்ட நிர்வாகம் காரணமாகப் பல நிர்மாணத் திட்ட வேலைகள் தோல்வியில் முடிவடைகின்றன.

பெரும்பாலும் நிர்மாணப் பணிகளில் சம்பந்தப்படுபவர்கள் அரச சேவையில் இருப்பவர்கள். ஆகவே ஒரு செயல் திட்டத்தை லாபகரமாக நிறைவேற்றுவது அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. நிர்வாகம் அல்லது நிதிக் கட்டுப்பாடு ஆகியன குறித்து அவர்களுக்கு எந்தவித சிந்தனையும் இருப்பதில்லை.

நிர்மாணத்துறையில் நாம் முன்னேறவேண்டுமானால், உயர்தர தொழில்நுட்ப வசதிகளை இப்பிராந்தியத்துக்கு மாற்றவேண்டும்.

திட்டமிட்டுச் செயற்படும் முறை அவதானிக்கப்பட வேண்டும்.

கடந்தகால அனுபவங்களைக் கொண்டு, புள்ளிவிவர அடிப்படை உருவாக்கப்படவேண்டும். இதன் அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்படவேண்டும். வங்கி மற்றும் கடனுதவி ஸ்தாபனங்களின் ஆதரவை வளர்க்க வேண்டும்.

முறையான நிர்வாகம், நிதி கிடைப்பது ஆகியன நிர்மாணத் துறையை இலாபகரமாக இயங்கச் செய்ய முடியும்.

### திட்ட முதலீடு

ஒரு திட்டம் வெற்றியடைய வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு, வரவு செலவு திட்டக் கட்டுப்பாடு ஆகியன அவசியம் தேவை. ஒப்பந்தம் செய்யப்பட்ட விலைகள் சரியாக இருக்கவேண்டும்.

மதிப்பீடு தயாரிக்கப்படும் போது நடப்புச் செலவீனம் பயன்படுத்தப்படவேண்டும். திட்டம் செயற்படுத்தப்படும் காலத்தைப் பொறுத்து விலை அதிகரிப்பையும் மதிப்பீட்டில் சேர்க்கவேண்டும்.

மதிப்பீட்டைத் தயாரித்துக் கொண்ட பின்னர் பணப் புழக்கம் பற்றி ஆராயப்பட வேண்டும்; நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவை எல்லாம் ஒப்பந்தம் வழங்கப்பட முன்னர் செய்து கொள்ளப்பட வேண்டும்.

ஒப்பந்த காலத்தில் பூரண வரவு - செலவுக் கட்டுப்பாடுகள் அமுல் நடத்தப்பட்டாக வேண்டும்.

தேவையற்ற தாமதமின்றி ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

### கேள்விப் பத்திரகாரர்களைத் தெரிவு செய்தல்

பல அரசாங்கத் திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்கள் பதிவு செய்யப்படுகின்றனர். தற்சமயம் ஒவ்வொரு திணைக்களமும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்ய விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒப்பந்தக்காரர்கள் தரப்படுத்தப்பட்டே பதிவு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு திணைக்களமும் சொந்தமாக ஒவ்வொருமுறையை இதற்கு வைத்துள்ளது. பொதுவாக எல்லாம் ஒன்று போல் அமைவதில்லை.

இது மதிப்பீடு செய்வதில் ஒழுங்கற்ற நிலையையும், தரப்படுத்துவதில் சமசீரற்ற தன்மையையும் ஒப்பந்தக்காரருக்கு நிச்சயமற்ற தன்மையையும் தோற்றுவிக்கிறது.

ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதில் ஒருமுகப்படுத்திய திட்டம் ஏதும் இருக்கவில்லை. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான இன்ஸ்டிடியூட் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டம் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதை ஒருமுகப்படுத்தும் திட்டமாக முடியும்.

பெரிய நிர்மாணத் திட்டங்களைப் பொறுத்தவரையில், ஒப்பந்தக்காரர்களை முன்கூட்டியே அவர்கள் தகுதியானவர்களா என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்.

இது குறிப்பிட்ட நிர்மாண திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றக் கூடிய தேவையான வளங்களைக் கொண்டவர்களைக் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க அழைக்கப்படுவதை உறுதி செய்யும்.

### கேள்விப்பத்திர மதிப்பீடு

குறைந்த தொகைக்கு கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தவரை ஒப்பந்தம் செய்து கொள்வதே அரசாங்கத் திணைக்களங்களில் நிலவும் பொதுவான நடைமுறையாகும்.

உண்மையில் கேள்விப்பத்திரங்களைத் திறந்த சில நிமிடங்களிலேயே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முடிவு தெரிந்து விடுகிறது. ஒப்பந்தத்தைச் சம்பிரதாயபூர்வமாக உறுதி செய்வது, பின்னர் தொடர்கிறது.

இது ஒரு துக்ககரமான நிலையாகும். இதனால் நிதிக் கட்டுப்பாடு காரணமாக ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணத் திட்டங்களை பூரணமாக நிறைவேற்றுவதற்கான கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### சிபார்சுகள்

இப்பிராந்தியத்தில் கட்டட நிர்மாணத்துறை எதிர்நோக்கி உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண கீழ்க்காணும் சில சிபார்சுகள் உதவும்:

1. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி இன்ஸ்டிடியூட்டின் கீழ் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யப்படுவது ஒரு முகப்படுத்தப்பட வேண்டும்.

2. பெரிய நிர்மாணத் திட்டங்களுக்கு முன்கூட்டியே தகுதியானவர்கள் என்று தீர்மானிக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர்கள் மட்டுமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க அழைக்கப்பட வேண்டும்.

3. வடிவமைப்பு தயாரிப்பது, கேள்விப்பத்திரம் மதிப்பீடு செய்தல், நிர்மாணப் பணியை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றுக்காக ஆலோசகர்கள் நியமிக்கப்படவேண்டும்.

4. எல்லாப்பெரிய திட்டங்களிலும் தரத்தை நிலைநாட்டுவது வடிவமைப்பு அங்கீகாரம், திட்டங்களுக்கு அத்தாட்சி வழங்குவது ஆகிய கடமை கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விநியோக நிலையங்களில் கட்டடப்பொருட்களை தரக் கட்டுப்பாடு செய்வதும் கட்டடத் திணைக்களத்திடம் இருக்கவேண்டும்.

5. ஒப்பந்தக்காரர்களுக்கு ஒரு சங்கம் உடனடியாக அமைக்கப்படவேண்டும். இச் சங்கத்தின் உறுப்பினர்கள் மட்டுமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கு உரியவர்களாகக்கருதப்படவேண்டும்.

திட்டநிர்வாகம், பொருட் கட்டுப்பாடு மற்றும் தொழில் திறன் ஆகிய துறைகளில் சங்க உறுப்பினர்களின் திறமையை வளர்க்க, தேவையேற்படும்போது பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்யவேண்டும்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண கட்டாய மத்தியஸ்த சபை ஒன்று நிறுவப்பட வேண்டும். கட்டடத்திணைக்களம், ஒப்பந்தக்காரர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த சபையில் இருக்க வேண்டும். ★

(முற்றும்)

**- இ. த. இராமச்சந்திரன் -**
Bsc. Hons., C.Eng., M-I. Mech. E
இயக்குநர்; வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (NEED)

# பொது அறிவுப்போட்டி இல. 38

1. எலெக்ரோனிக் யுத்தத்தில் ஈடுபடும் நாடுகள் எவை?
... ... ... ... கியூபா-அமெரிக்கா / ரஷ்யா-ஜப்பான்.
2. ஒரு நாட்டின் தலைநகரம் மண்ணுக்குள் புதையுண்டு வருகிறது. அது எது...?
... ... ... பாங்கொக் / டோக்கியோ.
3. வாரத்தில் ஏழுநாட்கள் என்ற முறையைக் கொண்டுவந்தவர் யார்...?
... ... ... அலெக்சாந்தர் / நெப்போலியன்.
4. ரஷ்ய நாட்டு நாணயம் எது? ... ... ... ... ... ... ரூபிள் / பிராங்க்
5. கதகளி நாட்டியத்திற்கு பேர்போன மாநிலம் எது...? கேரளா / தமிழ்நாடு.
6. கடற்கரையில் மணலைக் குவிப்பது எது...? ... ... அலை / காற்று
7. சூரியனுக்குரிய நவமணி எது...? ... ... ... ... மாணிக்கம் / பவளம்
8. ''யாக்'' இன எருமைப்பாலின் நிறம் என்ன...? வெள்ளை / இளஞ்சிவப்பு.
9. இவருடைய பிறந்ததினம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது...?
... ... ... ... ... ... காந்திஜி / நேருஜி
10. இதுவும் பாட்டுப்பாடும்...? ... ... ... ... ... ... ... கொசு / குயில்
11. திரை உலகில் ஏழிசை மன்னர் என்று புகழப்பட்டவர் இவர்...?
... ... ... தியாகராஜபாகவதர் / டி. எம். சௌந்தரராஜன்.
12. தவளைகள் குதிக்கும் போட்டியை ஆண்டுதோறும் நடத்தும் நாடு எது...?
... ... ... ... சீனா / அமெரிக்கா.

பெயர்:- ....................................
விலாசம்:- ....................................
....................................

பொது அறிவுப்போட்டி இல: 38
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

———————— இங்கே வெட்டுக ————————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 2 - 05 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

## நானவனில்லை

தாமரையே
உன்னை
தரிசிக்க வந்த போது
நீ......
அந்த
சூரியனுடன்
ஸ்பரிசித்த வண்ணம்
இருந்தாயே
அன்று
தரிசித்த குற்றத்திற்காக
இன்று என்னை
தண்டிக்கப்போகின்றாயா?
இல்லை
வஞ்சிக்கப் போகின்றாயா?
நான்
சந்திரன் தான்
அதுவும்
அமாவாசையாகிவிட்ட....

- கலுதாவளைக் கமல்நாதன்

## உத்தரவாதம்

அள்ளித்தந்த
ஆண்டவன் மேல் ஆணை
அழிவுகள்
செய்யமாட்டோம்
எமக்கு
கொள்ளி—
வைக்கப்படும்வரை!
புகையும்போதும்
பொறுத்திருக்க
நாங்கள்
பூமாதேவியில்லை!
— சிகரெட்.

- உரும்பராய் சிவன்சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகியுள்ளது
# விஞ்ஞானம்
(மீட்டல் பயிற்சி)
ஆக்கம்:
J. R. சூரி
ஆண்டு 11
'இயற்கை சமநிலை'
ஆண்டு 10
'ஆவர்த்தன இயல்புகள்'
'குருதிச் சுற்றோட்டம்'
ஆண்டு 9 'வளி', 'மண்'

# சஞ்சீவி சஞ்சிகை

28 - 04 - 1990 சனிக்கிழமை

டெல்ரா கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
ஆண்டு 11, 10, 9 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. செல்வா, மதி |
| ஆங்கிலம் | — திரு. பிறிட்டோ |
| தமிழ், சமயம் | — திரு. கணேஷ், ஈசன் |
| சமூகக்கல்வி | — திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |


சுரேஷ்


பாஸ்கரன்


ஜெயராஜ்

## யாழ். பாடசாலை ஸீஸனில் சதம் அடித்த சாதனையாளர்கள்

□ இவ்வருடம் பாடசாலைக் கிரிக்கெட் ஸீசனின் போது மூன்று பாடசாலை வீரர்கள் ஒரு இனிங்ஸ் இல் 100 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

இவ் வருட ஸீசனின் முதலாவது 'செஞ்சறி' யை மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பாஸ்கரன் அடித்தார். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரியுடனான போட்டியில் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது 'செஞ்சறியை, சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சுரேன்குமார் அடித்தார். யாழ். மத்திய கல்லூரியுடனான பெரும் கிரிக்கெட் போட்டியில் 145 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் இவர் இச் சாதனையைப் புரிந்தார். இதுவே இவ்வருடத்தில் ஒரு இன்னிங்சில் ஒரு வீரர் எடுத்த அதி கூடிய ஓட்டங்கள் ஆனதுடன், யாழ்ப்பாணத்தின் பெரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் தனிநபரொருவரின் அதிகூடிய ஓட்டங்களாகவும் அமைந்தது.

மூன்றாவது, நான்காவது 'செஞ்சறி'களை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஜெயராஜ், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடனான போட்டியில் 127 ஓட்டங்களை அடித்ததும் மானிப்பாய் இந்துக் கல்லூரியுடனான போட்டியில் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களை அடித்தும் பெற்றார்.

இம்மூன்று வீரர்களும் இவ்வருடம் நடைபெற்றபோட்டிகளில் பெற்ற ஓட்ட விவரங்கள் வருமாறு;

### பாஸ்கரன்

தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் அணியுடனான போட்டியில் 01,00; சென்பற்றிக்ஸ் உடன் 03; யாழ்ப்பாணக் கல்லூரியுடன் 03; யூனியன் கல்லூரியுடன் 31, ஆட்டமிழக்காமல் 33; யாழ். மத்திய கல்லூரியுடன் 01,00; ஸ்கந்தவரோதயா கல்லூரியுடன் ஆட்டமிழக்காமல் 47; கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் ஆட்டமிழக்காமல் 102; கனகரத்தினம் ம. ம. வி. யுடன் 7, ஆட்டமிழக்காமல் 51; யாழ் இந்துக்கல்லூரியுடன் 3, 4.

எல்லாப் போட்டிகளிலுமாகப் 10 தடவைகள் ஆட்டமிழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 28.6 ஓட்டங்கள்.

### சுரேன்குமார்

கனகரத்தினம் ம. ம. வி. உடனான போட்டியில் 17, 34; கொக்குவில் இந்துவுடன் 11: சென். பற்றிக்ஸ் உடன் 00, 38; யாழ்ப்பாணக் கல்லூரியுடன் 40, ஆட்டமிழக்காமல் 17; பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியுடன் 08; மகாஜனாக் கல்லூரியுடன் 66; யாழ். மத்திய கல்லூரியுடன் 145; யாழ். இந்துக் கல்லூரியுடன் 10,10.

எல்லாப் போட்டிகளிலுமாக 11 தடவைகள் ஆட்டமிழந்து 396 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 36 ஓட்டங்கள்.

### ஜெயராஜ்

சென். பற்றிக்ஸ் உடனான போட்டியில் 31, ஆட்டமிழக்காமல் 11; யாழ்ப்பாணக் கல்லூரியுடன் 09; ஷப்றா அணியுடன் 55; பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியுடன் 57; கொக்குவில் இந்துக்கல்லூரியுடன் 47; யாழ். மத்திய கல்லூரியுடன் 72,14; சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியுடன் 127, மானிப்பாய் இந்துக்கல்லூரியுடன் ஆட்டமிழக்காமல் 106; சென் ஜோன்ஸ் கல்லூரியுடன் 17.

எல்லாப் போட்டிகளிலுமாக 9 தடவை ஆட்டமிழந்து 546 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 60. 6 ஓட்டங்கள்.

இவ்வருடப் போட்டிகளில் இரண்டு செஞ்சறிகளை அடித்த ஒரே வீரர் என்ற பெருமையையும், 500 ஓட்டங்களுக்குக் கூடுதலாகப் பெற்ற ஒரே வீரர் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

— ஸ்ரீகாந்த்

# ஈராக்கை அணு வல்லரசாக மாற்றும் சத்தாம் ஹுசேய்னின் முயற்சி கைகூடுமா?

மத்திய கிழக்கில் மற்றும் ஒரு யுத்தம் மூண்டால் துருப்புக்கள் தமது முகாம்களில் இருந்து வெளியேற முன்னரே நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுவிடுவர். ஒரு நாட்டில் இருந்து மற்றும் ஒரு நாட்டுக்கு ஏவக்கூடிய ஏவுகணை வளர்ச்சியே இந்த ஆபத்தை உருவாக்கி இருக்கிறது.

இன்று இஸ்ரவேலுக்கு அடுத்ததாக மத்தியகிழக்கில் பலம்மிக்க நாடாக உருவாகி இருப்பது ஈராக் ஆகும். ஈராக்குக்கு அடுத்ததாக சிரியாவைக் குறிப்பிடலாம். ஈராக்கின் முதலாம் நம்பர் எதிரியாகக் கருதப்படும் சிரியா 1967 ஜுன் மத்திய கிழக்கு யுத்தத்தில் தனது கோலன் குன்றுப் பிரதேசத்தை இஸ்ரவேலிடம் இழந்த பிற்பாடு சோவியத் யூனியனின் உதவியுடன் தனது ஆயுத வல்லமையை அதிகரித்துவந்தது. தற்போது மிக்செய்ல் கோர்பச்சேவ் தலைமையில் சோவியத் யூனியனில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் சிரியா தொடர்ந்து தனது ஆயுதப் பலத்தை அதிகரிக்கும் வாய்ப்புகள் குறைந்து வருகின்றன.

1973 அக்டோபர் மத்திய கிழக்கு யுத்தம் வரை மத்திய கிழக்கில் உள்ள இஸ்ரவேல் எதிர்ப்பு நாடுகளின் தலைமைப் பதவி எகிப்திடமே இருந்து வந்தது. இஸ்ரவேலுடன் நீண்ட எல்லையைக் கொண்டிருந்த எகிப்திடம் அப்போது பெரிய இராணுவமும் இருந்தது. மற்றைய அரபு நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறந்த ஆயுதங்களும் இருந்தன.

ஆனால் தற்போது எகிப்தின் இடம் பூகோளரீதியில் இஸ்ரவேலுடன் எல்லைகளைக் கொண்டிராத ஈராக்கிடம் சென்று விட்டது.

எகிப்தைவிட இரண்டு மடங்கு பெரிய இராணுவம் தற்போது ஈராக்கிடம் இருக்கிறது. அதாவது 10 லட்சம் வீரர்கள் ஈராக் இராணுவத்தில் இருக்கிறார்கள். ஈராக்குடன் ஒப்பிடுகையில் இஸ்ரவேலின் இராணுவம் சிறியது. முழுப் பயிற்சி பெற்ற 1 லட்சத்து 40 ஆயிரம் வீரர்களே இஸ்ரவேல் இராணுவத்தில் இருக்கிறார்கள். படைப் பலம் குறைந்தாலும் ஆயுத பலமும் யூதர்களின் மனோ பலமும் இஸ்ரவேலை இன்று ஆயுத பலத்தில் மத்தியகிழக்கில் முதன்மை நாடாக வைத்துக்கொண்டிருக்கிறது.

### அணுக்குண்டு தயாரிப்பு முயற்சி

இஸ்ரவேலுக்கு எதிரான அணியில் தலைமைப் பதவியை எடுத்துள்ள ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேய்ன் (Sadam Hussein) இன்று இஸ்ரவேலுக்கு மட்டும் அன்றி ஈரான், சிரியா போன்ற நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறார். மூன்றாவது உலக நாடுகளில் ஒன்றான இந்த ஈராக் அணுகுண்டு தயாரிக்கும் நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஈராக்கின் பிரதான ஆயுதக் கொள்வனவு தலைமையகம் லண்டனில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது யுரோமக் (Euromac) என்று அழைக்கப்படுகிறது. கொள்வனவு முகவர்களை வைத்து ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் ஈராக் ஆயுதங்களை வாங்குகிறது.

அணுகுண்டை வெடிக்க வைக்கப் பயன்படும் எலெக்ரோனிக் கருவி ஒன்றை ஈராக் ஏஜென்ட் ஒருவர் சமீபத்தில் கொள்வனவு செய்ய முயன்றார். அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈராக் ஈடுபட்டிருப்பதாக வெளிவந்த செய்திக்கு இந்தச் சம்பவமே காரணம் ஆகும்.

ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேய்ன் இதனை மறுத்துள்ளார். ஈராக்கின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு எதிரிகளால் இது கட்டவிழ்ந்து விடப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ள போதிலும் பெரும்பாலான உலக நாடுகள் இதனை நம்பத் தயாரில்லை என்றே கருதப்படுகிறது.

இன்னும் 5 வருடங்களில் ஈராக் அணுகுண்டு தயாரித்துவிடும் என்று மேற்கு நாடுகள் நம்புகின்றன. அதற்கு முன்னரே இது இடம்பெறலாம் என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகன் (Pentagon) கருதுகிறது.

### 1981 தாக்குதல்

ஈராக் நீண்டகால அணு சக்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயற்படுத்தி வருவதாக நம்பப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு ஈராக்கின் ஒசிராக் (Osirak) அணு உலையை இஸ்ரவேல் விமானங்கள் தாக்கி நிர்மூலமாக்கி இருந்தன. ஈராக்கின் அணு சக்தித் திட்டத்தை இஸ்ரவேலின் நடவடிக்கை குழப்பி அடித்தபோதிலும் ஈராக் தொடர்ந்து இத்துறையில் வளர்ச்சிகண்டுவருவது சமீபத்திய சம்பவங்கள் மூலம் புலனாகி வருகிறது.

1981 ஒசிராக் அணுஉலைத் தாக்குதலின் பின்னர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை நாட்டின் பல பகுதிகளிலும் ஈராக் பரவலாகப்பொருத்தியது. எந்த ஒரு விமானத் தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய பலத்தை தற்போது அது பெற்றுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக ஈராக் ஆயுதத்துறையில் அடைந்துவந்த வளர்ச்சியை அமெரிக்கா அறிந்திருந்தது. ஈரானின் ஷியா முஸ்லிம்களின் எழுச்சியைத் தடுத்து நிறுத்துவதில் அமெரிக்காவுக்கும் அக்கறை இருந்ததால் ஈராக்குக்கு இடைஞ்சலாக இருக்க அமெரிக்கா முயற்சிக்கவில்லை.

1980 முதல் 1988 ஆகஸ்ட் வரை நடைபெற்ற வளைகுடா யுத்தத்தில் ஈரானிய தரைப்படைகளின் நடமாட்டம் குறித்து அமெரிக்க உளவுச் செய்மதிகளே ஈராக்குக்குத் தகவல் கொடுத்துவந்தன என்று கூறப்படுகிறது.

ஈராக்கில் சத்தாம் ஹுசேய்ன் பதவியைக் கைப்பற்றி ஒரு வருடத்தின் பின்னர் ஆரம்பமான இந்த யுத்தத்தில் ஈராக்கின் 1 கோடி 70 லட்சம் சனத்தொகையில் 10 லட்சம் பேர் மரணம் அடைந்தும் காயமடைந்தும் இருந்தனர். மேலும் 10 லட்சம்பேர் அரசியல் பொருளாதார காரணங்களுக்காக ஈராக்கை விட்டு வெளியேறி இருந்தனர்.


சத்தாம் ஹுசேய்ன்

### இரசாயன ஆயுதம்

வளைகுடா யுத்தத்தில் ஈராக் இரசாயன ஆயுதங்களையும் பயன்படுத்தியிருந்தது. இந்த யுத்தத்தின்போது இடம்பெற்ற இரசாயன ஆயுதத் தாக்குதல்களில் மட்டும் 50 ஆயிரம் ஈரானியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதேபோன்ற ஒரு தாக்குதல் குர்டிஷ் சிறுபான்மை மக்கள் வாழும் ஹலாப்ஜா (Halabja) நகரிலும் 1988 இல் இடம்பெற்றது. இத்தாக்குதலில் 5000 குர்டிஷ் மக்கள் கொல்லப்பட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிக்கிறது. ஈராக்கில் உள்ள குர்டிஷ் சிறுபான்மையினர் வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்குக்கு எதிராகவே செயற்பட்டனர்.

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்கிலுள்ள ஷியா (Shiite) முஸ்லிம்களையும் ஈராக்குக்கு எதிராகத் தூண்டிவிட ஈரான் முயற்சித்தது.

### உலக உலா

ஆனால் அது வெற்றிபெறவில்லை. ஈராக்கில் உள்ள பெரும்பான்மை மக்கள் ஷியா முஸ்லிம்கள். ஆனால் சத்தாம் ஹுசேய்னும் ஆட்சியாளர்களும் சுனி (Sunni) முஸ்லிம்கள். சுனி முஸ்லிம்களின் ஆட்சியைக் கவிழ்த்து ஷியா முஸ்லிம்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதே வளைகுடா யுத்தத்தில் ஈரானின் பிரதான நோக்கமாக இருந்தது. ஈராக்கின் ஆயுத பல அதிகரிப்புக்கு ஈரானும் ஒரு காரணமாகும்.

சுனி முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகள் வளைகுடாயுத்தத்தில் ஈராக்கையே ஆதரித்தன. வளைகுடா யுத்தத்தில் ஈராக்குக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் விதத்தில் இந்த நாடுகள் தற்போது ஈராக்குக்கு நிதி உதவி செய்துவருகின்றன.

எனினும் ஈராக்கின் பலம் இந்த நட்பு நாடுகளையே பீதிகொள்ளச் செய்து வருகிறது. அதேசமயம் மற்றொரு அரபு நாடான எகிப்து தற்போது ஈராக்கின் எதிரி நாடான சிரியாவுடன் தனது உறவைப் பலப்படுத்தி ஈராக்குடன் ஆயுத சமபலத்தை உருவாக்க முயற்சிக்கிறது.

லெபனானில் சிரியாவின் தலையீட்டை சத்தாம் ஹுசேய்ன் வன்மையாக எதிர்த்து வருகிறார்.

லெபனானில் உள்ள சிரியாப் படைகளுக்கு எதிராகப் போராடும் கிறிஸ்தவப் படைப்பிரிவுத் தலைவர் ஜெனரல் மிச்செல் ஓவனுக்கு ஆதரவாக கடந்த வருடம் இவர் புறொக்-7 ராக்கெட்டுகளை (Frog-7) லெபனானுக்கு கப்பல் மூலம் அனுப்ப எடுத்த முயற்சி பெரும் நெருக்கடியை உருவாக்கி இருந்தது.

ஏவுகணைகள் அனுப்பப்பட்டால் கிறிஸ்தவர்கள் வாழும் கிழக்கு பேரூட்டை நிர்மூலம் செய்யப்போவதாக சிரியா எச்சரித்தது. மற்றும் அமெரிக்கா, சவூதி அரேபியாவின் நிர்ப்பந்தம் காரணமாக ராக்கெட் அனுப்பப்பட்ட தனது கப்பலை ஈராக் திருப்பி வரவழைத்துக் கொண்டது.

### 1932 இல் சுதந்திரம்

ஈராக் 1932 ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது 1958 ஆம் ஆண்டுவரை அங்கு மன்னர் ஆட்சியே இருந்துவந்தது.

1958 ஜுலைப் புரட்சியின் போது முதன்முதலாக மன்னர் ஆட்சி அங்கு கவிழ்க்கப்பட்டது. அப்போது மத்திய கிழக்கிலே அதிசக்தி வாய்ந்த தலைவராகக் கருதப்பட்டு வந்தவர் எகிப்திய ஜனாதிபதி காமல் அப்துல் நாஸர். நாஸரின் மக்கள் ஆட்சிக்கோஷமே அப்போது ஈராக்கில் மன்னர் ஆட்சியைக் கவிழ்த்தது. மன்னர் பைஸால் அப்போது கொல்லப்பட்டார். அப்துல் கரீம் காசிம் என்பவர் தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டது. இதன் பின்பு 1963 ஆம் ஆண்டில் மற்றும் ஒரு புரட்சி ஏற்பட்டு அப்துல் கரீம் காசிம் கவிழ்க்கப்பட்டார்.

1968 ஆம் ஆண்டு ஏற்பட்ட 3 ஆவது புரட்சியின்போதே அங்கு பாத் தேசியக்கட்சி (Baath National Party) பதவிக்கு வந்தது. அப்போது பதவிக்கு வந்தவர் ஹசன் அல் பாக்ர் (Hassan al Bakr).

1979 இல் இடம்பெற்ற நான்காவது புரட்சியின் போது அதிகாரத்தைக் கைப்பற்றியவரே தற்போதைய ஜனாதிபதி சத்தாம் ஹுசேய்ன்.

ஏற்கனவே இடம்பெற்ற புரட்சிகளின்போது ஏற்பட்ட படுகொலைகளைப் போன்று இவர் ஆட்சியைக் கைப்பற்றியபோது 22 சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இவர் பதவிக்கு வந்து ஒரு வருட காலத்தில் வளைகுடா யுத்தம் ஆரம்பித்தது.

சமீபகால உலக யுத்தங்களில் நீண்டதாகக் கருதப்பட்ட இந்த வளைகுடா யுத்தத்தில் ஆரம்பத்தில் ஈராக் சில தோல்விகளை எதிர்கொள்ள நேரிட்டபோதிலும் போரின் இறுதிப் பகுதியில் அதன் கை மேலோங்கி இருந்தது.


வளைகுடா யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையிலான பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. தமது இராணுவத்தை மீண்டும் கட்டி எழுப்பும் முயற்சியில் ஈரானிய தலைவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். 250 கோடி டாலர் பாரிய இராணுவத்திட்டம் ஒன்றை ஈரான் தற்போது வகுத்து வருவதாக நம்பப்படுகிறது.

உலகில் அதிக அளவு எண்ணையை கையிருப்பில் வைத்திருக்கும் இரண்டாவது நாடு ஈராக் ஆகும்.

வளைகுடா யுத்த காலத்தில் தினமும் 6 லட்சம் பாரல் எண்ணெயை உற்பத்தி செய்து வந்த ஈராக் தற்போது 50 லட்சம் பாரல் எண்ணெய்யை உற்பத்தி செய்கிறது.

எண்ணெய் வளம் மூலம் தனது ஆயுதபலத்தை அதிகரிக்கும் நாடுகளில் ஈராக்கே இன்று முன்னணியில் நிற்கிறது. ★

## சொற்சிலம்பம்



சொற்சிலம்பம் இல: 113
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................
விலாசம் ........................................
........................................

### பரிசு பெறுபவர் விபரங்கள்

**முதலாவது பரிசு**
திருமதி. மகாலெட்சுமி சண்முகலிங்கம்
வண்ணா வளவு ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**இரண்டாவது பரிசு**
திரு. கே. இராஜகோபால், பொன்மனை,
தொல்புரம், சுளிபுரம்.

**மூன்றாவது பரிசு**
தெ. பாலகணேஷ்,
408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல: 113

**இடமிருந்து வலம்:**

1. பத்து அவதாரங்கள் 5. உயிர்ச்சத்துக்களில் ஒன்று 6. திருத்தலம் 7. குரங்கு 8. மிகச்சிறியது (குழம்பியுள்ளது) 9. கொடுமை 11. நுரையீரல் வியாதிக்கு இதுவும் ஒரு காரணி 13. இடமாறியுள்ள இது, அலையாமல் இருந்தால் நிம்மதி உண்டு. 14. ஓர் உவம உருபு 17. பாகமாகக் கொண்டவன் 18. மீதி 19. அஃறிணை - ஒருமைப்பெயர் 21. கடைசி 22. வீட்டிற்குப் பெரியவர்.

**மேலிருந்து கீழ்:**

1. தயிர்ச்சாதம் 2. சார்ந்த எனப்பொருள்படும் 3. சிக்கவைப்பது 4. கடவுள் குழம்பியுள்ளது 5. சக்கரவர்த்திகளில் ஒருவர் 7. தானியங்களில் ஒன்று 8. நோய் பரப்பும் கிருமிகளை இப்படியும் அழைப்பர் 10. அடுத்தது தலைகீழ் 12. ஒப்படைப்பு 15. பிள்ளை 16. மன்னர் குழம்பியிருக்கிறார் 17. அன்பு 18. பருந்து 20. அணங்கு தலைகீழாக நிற்கிறாள்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**முடிவு திகதி: 09 - 05 - 1990**

### சொற்சிலம்பம் இல: 112 சரியானவிடைகள்

**இடமிருந்து வலம்**

1. சத்தியசாயிபாபா 6. மால் 7. சகிப்பு 9. மலை 10. அங்கண் 13. வகு 14. ஆசி 15. தாரு 16. நிம்மதி 18. மணவறை 19. விரைவு 21. ரைன் 22. கரவு.

**மேலிருந்து கீழ்**

1. சங்கிலி 2. திரிசங்கு 3. சாது 4. பாமாலை 5. பால் 8. புண் 9. மக 11. அடம் 12. பசி 13. வருணன் 14. [illegible] 16. [illegible] 17. [illegible] 20. விதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org